
KALKI 12.7.98
ரூ. 4.50
கல்கி
ரூபாயின் மதிப்பு விழுந்ததுதானா?
— நிதியமைச்சர் பேட்டி
செய்திகள் வாசிப்பது
சந்தியாவின் சிஷ்யர்கள்



மூடு அவுட் ஆன மேனகா காந்தி!

“வெறுமனே குழந்தைகளுக்கு சித்திரப் போட்டி, பேச்சுப் போட்டி என்று நடத்தி நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்காதீர்கள். ஐ வான்ட் ஆக்ஷன்!” என்று ஒரு பிடி பிடித்தார், சென்ற வாரம் சென்னைக்கு வந்திருந்த மேனகா காந்தி. (‘மனேகா’ என்பதுதான் சரியான உச்சரிப்பாம்!)

ஒரு மூதாட்டி, தாம் குடியிருக்கும் வீட்டுக்குச் சொந்தக்காரரர், தமது செல்ல நாய்களை, கொடூரமாய் உயிரோடு எரித்தது பற்றியும், அதை போலீசில் புகார் செய்தபோது அவர்கள் காட்டிய அலட்சியம் பற்றியும் மேனகா காந்திக்குப் புகார் அனுப்ப, அதன் பிரதியை பீப்பிள் ஃபார் அனிமல்ஸின் சென்னைக் கிளைக்கு உரிய நடவடிக்கை எடுக்கும்படி அனுப்பி வைத்திருந்தார் மேனகா. அந்தக் கேஸ் என்ன ஆயிற்று என்று வினவினார்.

“போலீசுக்குப் போனோம். ஆனால், மறு தரப்பினரின் பண பலம், அதிகார பலம் காரணமாய் நம் தரப்பு எடுபடவில்லை!”

“அப்படியெனில் தோல்வியை ஒப்புக் கொண்டு, சும்மா இருந்து விடப் போகிறீர்களா?”


“அடுத்து என்ன செய்வது என்பதில் குழப்பம்.”

“கோர்ட்டுக்குப் போங்கள். சட்டப்படி நடவடிக்கையில் இறங்காவிட்டால், நாம் எல்லா அக்கிரமங்களையும் பார்த்துக் கொண்டு நிற்க வேண்டியதுதான்! உடனடியாக வக்கீலைப் பிடித்து, ஆக வேண்டியதை கவனியுங்கள். போலீஸ் அதிகாரி, தமது கடமையைச் செய்யத் தவறியதாகப் பொது

மனிதனுக்கு மிருக இருதயம்!

டாக்டர் தனிராம் பரூவா அஸ்ஸாமில் உள்ள சோனாப்பூரில், தமது ஹார்ட் இன்ஸ்டிடியூட்டில் நடத்திய ஓர் இருதய மாற்று அறுவைச் சிகிச்சை பெரிய சர்ச்சையைக் கிளப்பி விட்டிருக்கிறது.

பூர்ணோ சைக்கியா என்பரின் செயல்படாத இதயத்துக்குப் பதில், தமது ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள பன்றியின் இதயத்தை வைத்து இயங்கச் செய்தார்!



• டாக்டர் பரூவா

ஏழு நாட்களுக்குப் பூர்ணோ சைக்கியா உயிரோடு இருந்தார். மிருகம் ஒன்றின் இதயத்தைப் பொருத்திக் கொண்டு உயிர் வாழ்ந்ததில் இதுவே உலகில் நீண்ட நாள் சாதனையாக இதுவரை கருதப்படுகிறது.

ஆனால் அஸ்ஸாம் அரசு, டாக்டர் பரூவாவைக் கைது செய்து 40 நாள் சிறையில் தள்ளியது. மனித உறுப்புகள் மாற்று அறுவைச் சிகிச்சை செய்ய, அவரது இன்ஸ்டிடியூட் முறையாகப் பதிவு செய்யப்படவில்லை என்பதுதான் அரசுத் தரப்பு குற்றச்சாட்டு.

அது மட்டும் அல்ல; போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டை வெளியிடாமலேயே, சைக்கியா இறந்து போன பின், அவருக்குப் பன்றியின் இதயத்தை வைத்து அறுவைச் சிகிச்சை செய்து பொருத்தியிருப்பதாக வேறு குற்றம் சாட்டியிருக்கிறது! ஆனால், கல்கத்தாவில் உள்ள மத்திய ஃபாரன்சிக் சயன்ஸ் ஆராய்ச்சிக் கூட ரிப்போர்ட் டாக்டர் பரூவாவுக்குச் சாதகமாக இருப்பதாகவும், அதை அஸ்ஸாம் அரசு வெளியிட மறுப்பதாகவும் தெரிகிறது.

''ஸினோ ட்ரான்ஸ்ப்ளான்ட் (Xenotransplant) எனப்படும் இவ்வகை மாற்று உறுப்புப் பொருத்தும் ஆராய்ச்சி சவாலானது. மனித உறுப்புகள், மாற்று அறுவைச் சிகிச்சைக்குத் தாராளமாகக் கிடைக்காதவரை, இம்மாதிரி விலங்குகள் - பிராணிகளின் உறுப்புகள் பொருத்துவது ஒன்றுதான் வழி!'' என்கிறார் டாக்டர் பரூவா.

— சாருகேசி

நன்றி : 'சண்டே'

நல வழக்குத் தொடருங்கள். நமது சட்ட பலத்தைப் பெருக்கிக் கொள்ளாவிட்டால், நம்மை ஏய்த்துவிட்டுப் போய் விடுவார்கள்!'' - கோபம் பொங்கிட அட்வைஸ் செய்தார் மேனகா காந்தி.

பள்ளி ஆண்டு விழா நிகழ்ச்சியொன்றில் பேசும்போதும், அதே 'மூடு'தான். நடுத் தெருவில் பிராணிகள் துன்புறுத்தப் படுவதை, கஷ்டப்படுவதைக் கண்டால், பிராணிகள் நல சங்கங்களுக்குத் தகவல் கொடுத்துவிட்டு, தமது கடமை முடிந்து விட்டதாய் மக்கள் நினைத்து விடுகிறார்கள். இது தவறு. அவர்களும் அதில் இன்வால்வ் ஆக வேண்டாமா? கஷ்டப்படும் பிராணியை அவர்களே எடுத்துச் சென்று பிராணிகள் நல அமைப்புகளிடம் ஒப்படைத்து உதவலாம். அதை நம் மக்கள் செய்வதில்லை!'' என்று சமூகத்துக்கு ஒரு குட்டு வைத்தார்.

இந்த கோப மூடுலேயே இருந்ததாலோ என்னவோ, நம்மிடமும் மூட் அவுட் ஆகி விட்டார்! மேனகாவின் குடும்ப நண்பர் வீட்டில் காத்திருந்து அவரைச் சந்தித்தபோது, ''பத்திரிகைகளுக்கு நான் பேட்டி அளிப்பதில்லை!'' என்று முதலில் மறுத்தாலும் பின்னர் ஒப்புக் கொண்டார்.

''நீங்கள் மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்று, நூறு நாட்கள் ஓடிவிட்டன...'' கேள்வியை முடிக்கும் முன்பாகவே, ''இதற்குத்தான் பத்திரிகையாளர்களிடம் நான் பேசுவது கிடையாது. உங்களுக்கு அரசியலை விட்டால் வேறு எதைப் பற்றியும் கேட்கவே தெரியாதா?'' சட்டென்று பொங்கி விட்டார்.

''சரி! அரசியலைத் தவிர்த்துவிட்டுப் பேசுவோம்'' என்றதும், ''ம்...'' என்று கூர்மையாய்ப் பார்த்தார்.

''உங்கள் மகன் வருண் எப்படி இருக்கிறான்? என்ன செய்கிறான்? மீடியா வெளிச்சமே அவன் மீது படாமல் வெகு கவனமாக இருக்கிறீர்களே! அது ஏன்?''

மறுபடியும் மேனகா முகத்தில் கோபம். ''அரசியலை விட்டால் பர்சனல் வாழ்க்கை தானா? உங்களுக்கு வேறு எதைப் பற்றியுமே கேட்கத் தெரியாதா?'' என்றவர், சட்டென்று எழுந்து போய்விட்டார்.

நம் மனத்தில் எழும் கேள்வி இதுதான்: அரசியலில் ஈடுபட்டு, எம்.பி. ஆகி, மத்திய அமைச்சரவையில் இருக்கிற மேனகாவிடம் அரசியல் பேசுவது தப்பா?

— மௌலி



"ஹேமா உன்னைக் காதலிக்கிறதா சொன்னியே..."

"ஹேமாத்திட்டா!"

– எஸ். மோஹன்

மானேஜர் : டைப்பிஸ்ட் விமலாவோட ஹனிமூனுக்கு அதிக நாள் லீவு குடுத்தது தப்பாப் போச்சு!

கிளார்க் : ஏன் சார்...?

மானேஜர் : அங்கேருந்து 'மெட்டர்னிடி லீவு'ம் கேட்டு லெட்டர் போட்டிருக்காங்க...!

– வலங்கைமான் நூர்தீன்





"நேத்துத் திருடின வீட்டில் ஏன் இன்னிக்குப் போய் மாட்டிக்கிட்ட?"

"கைரேகை இருக்குமேன்னு துடைக்கப் போனேன்!"

– சீர்காழி வி. கௌரி

"தலைவர், அரசியல் பரம்பரைல, தான் வந்ததை இப்படியா சொல்லணும்?"

"அப்படி என்னதான் சொன்னார்?"

"பரம்பரை பரம்பரையா நாங்க முன் ஜாமீன் குடும்பம்னு சொல்றார்!"

– அம்பை தேவா



என்மீது புகார் கூறினால் இனி கோர்ட்டுக்குப் போவேன்!


நயன் மோங்கியா. இந்த விக்கெட் கீப்பர் அடிக்கடி அணியிலிருந்து நீக்கப்படுவதும், பின்னர் சேர்க்கப்படுவதும் வாடிக்கை. கூடவே நிறைய விஷயங்களில் இவரைப் பற்றிய பரபரப்பான பல செய்திகள் நிலவி வருவதும் உண்டு. மோங்கியாவை, சென்னையில் நடந்த கேம்பின் போது சந்தித்துப் பேசினோம்....

கல்கி : *சில மேட்சுகளில் துவக்க ஆட்டக்காரராகவும் சில மேட்சுகளில் மத்திய தர வரிசை ஆட்டக்காரர் ஆகவும் வருகிறீர்கள். ஏன் இந்த முரண்பாடு?*

மோங்கியா : அடிப்படையில் நான் துவக்க ஆட்டக்காரன்தான். என்னை விட நல்ல வீரர்கள் துவக்க ஆட்டக்காரர்களாக இருக்கும் போது, நான் துவக்க ஆட்டக்காரனாக இறங்க முடியாது இல்லையா! எப்படியானாலும் ஒரு வீரனுக்கு அழகு, அவன் எந்த நிலையிலும் பேட்டிங் செய்யத் தயாராக இருக்க வேண்டும்; ரன்களைக் குவிக்க வேண்டும். அதை விட்டு விட்டு நான் இத்தனையாவதாகத்தான் சென்று ஆடுவேன் என்று யாரும் எப்போதும் கூற முடியாது. இந்த நிலை எனக்கு மட்டுமா? இல்லையே. சச்சின் டெண்டுல்கர், ராகுல் டிராவிட், கங்குலி ஆகியோரும் சில மேட்சுகளில் துவக்க ஆட்டக்காரர்களாகவும், சில மேட்சுகளில் மத்திய தர ஆட்டக்காரர்களாகவும் ஆடுகிறார்களே!

கல்கி : *ஆனால் நீங்கள் குறிப்பிட்ட சச்சின், கங்குலி ஆகியோர் ஒரு நாள் போட்டிகளில்தான் ஓபனிங் பேட்ஸ்மேன் ஆக களம் இறங்குகின்றனர். டெஸ்டு போட்டியில் மத்திய வரிசையிலேயே இறங்குகின்றனர். ஆனால் இதற்கு மாறாக நீங்கள் மட்டும் டெஸ்டு போட்டிகளில் துவக்க ஆட்டக்காரராகவும், ஒரு நாள் போட்டிகளில் மத்திய தர வரிசைகளிலும் இறங்குகிறீர்கள். ஆனாலும் நீங்கள் துவக்க ஆட்டக்காரராகக் களம் இறங்கும் போதுதான். நிறைய ரன்களைக் குவிக்கிறீர்கள்!*

மோங்கியா : *(சிரிக்கிறார்)* யெஸ். நீங்கள் சொல்வது சரிதான். உங்கள் பாராட்டுக்கு நன்றி. நான் மத்திய தர வரிசையில் இறங்கி ஆடி ரன்களை அடித்ததை விட ஓபனிங் பேட்ஸ்மேன் ஆக இறங்கிய போதுதான் அதிக ரன்கள் அடித்திருக்கிறேன்.



ஓபனிங் பேட்ஸ்மேனாகக் களம் இறங்கும் போதுதான் நமக்கு scope அதிகம் உண்டு. ஃப்ரீயாக ஆடலாம். ஆனால் ஆட்டத்தை டிக்ளேர் செய்யும் நிலையிலோ, வெற்றி அல்லது தோல்வி அடையும் நிலையிலோ ஆட்டக்காரனாக இறங்கும் போது, அப்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப ஆட வேண்டியிருக்கும். எனவே என்னால் அப்போது ஆட்டத்தில் முழு வேகத்தையும் காட்ட முடியாமல் போய்விடுகிறது.

கல்கி : நீங்கள் நன்றாகவும் ஆடுகிறீர்கள். நல்ல விக்கெட் கீப்பராகவும் இருக்கிறீர்கள். ஆனாலும் அணியில் தொடர்ந்து இடம் பெறுவதில்லையே... ஏன்?



• கிர்மானி மற்றும் ஆஸ்திரேலிய விக்கெட் கீப்பர் இயன் ஹீலேயுடன்...

மோங்கியா *(சற்று நேரம் மௌனம் சாதிக்கிறார்)* : யெஸ். நான் நன்றாக விளையாடியும் அணியிலிருந்து நீக்கப்படுவது ஏன் என்பது புரியவே இல்லை. ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக, துவக்க ஆட்டக்காரனாகச் சென்னையிலும், மத்திய நிலையில் கல்கத்தாவிலும், பெங்களூரிலும் நன்றாகவே பேட்டிங் செய்தேன். விக்கெட் கீப்பராக இருந்ததைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டது போல, ஆஸ்திரேலியப் பத்திரிகைகள் பாராட்டியும், அணியில் இருந்து நீக்கப்பட்டது ஏன் என்பது எனக்குப் புரியவில்லை. அதற்குப் பின்னர் மூன்று மேட்சுகளுக்குப் பிறகு நான் மறுபடியும் இந்திய அணியில் சேர்க்கப்பட்டேன். ஆனாலும் அணியில் இருந்து நீக்கும் போது நான் உள்ளுக்குள்ளேயே எத்தனை முறை அழுதிருப்பேன் தெரியுமா? *(சில நொடிகள் மௌனம் சாதிக்கிறார்.)* என் நிலை யாருக்குமே வரக் கூடாது!

கல்கி : இப்படி அணியில் இருந்து நீக்கப்படும் நீங்கள், அணியில் மீண்டும் இடம் பெறுவது பற்றிச் சிலர் ஒரு மாதிரியாகச் சொல்கிறார்களே?

மோங்கியா : அப்படியா? என்ன சொல்லுகிறார்கள்?

கல்கி : இந்திய கிரிக்கெட் போர்டில் இருக்கும் சிலருக்கு, உங்களுக்குக் கிடைக்கும் வருமானத்தில் பாதியைக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள்.

மோங்கியா : *(ஆவேசமாக)* : சாரி. இம் மாதிரி சிலர் என் மீது அபாண்டமாகப் பழி சுமத்துவது வழக்கமாகி விட்டது. அம்மாதிரியெல்லாம் நான் ஆட வேண்டும் என்கிற அவசியமில்லை. இந்திய தேர்வுக் கமிட்டி உறுப்பினர்களும் அப்படியில்லை. உங்கள் மூலம் நான் கிரிக்கெட் ரசிகர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து இம்மாதிரி செய்திகளை நம்பாதீர்கள். அப்பட்டமான பொய். மறுபடியும் யாராவது இம்மாதிரி என் மீது புகார் கூறினால் அவர்களை கோர்ட்டில்தான் சந்திக்க வேண்டிவரும்.

கல்கி : முகமது அசாருதீனுக்கும் உங்களுக்கும் இடையில் உறவு எப்படி உள்ளது?

மோங்கியா : ஏன்? நன்றாகவே உள்ளது. அவர் மட்டுமல்ல; அணியில் உள்ள எல்லோருடனும் நன்றாகவே உள்ளது. இதில் என்ன சந்தேகம் உங்களுக்கு?

கல்கி : இல்லை. நீங்கள் அசாரின் ஆள். அவரது நிழல் போல சில பல செயல்களைச் செய்வதாகச் சொல்லப்படுவது பற்றி?

மோங்கியா : நோ நோ. நான் யாருடைய ஆளும் இல்லை. யாருக்காகவும் நான் தனிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டிய அவசியமில்லை. நான் முதலில் அணியின்

ஆள். கேப்டன் யாராக இருப்பினும் நான் என் பங்கைச் சிறப்பாக செய்ய முற்படுவேன். ஏன் என் முதல் சதத்தை சச்சின் கேப்டன்ஷிப்பில்தான் அடித்தேன். இப்போது அசாரின் கீழ்தான் அணியில் இருந்து நீக்கப்பட்டேன். நீங்கள் சொல்வது போல நான் அசாரின் ஆளாக இருந்தால் அணியில் இருந்து என்னை நீக்கியிருக்க மாட்டார்களே!

கல்கி : இல்லை. இந்த பெட்டிங் மேட்டரில் அசாருடன் நீங்கள் ஒரு குழு—

மோங்கியா : சாரி சார். பெட்டிங் நடக்கவே இல்லை என அது பற்றி விசாரித்த நீதிபதியே கூறி விட்டாரே! மறுபடி மறுபடி ஏன் கிளறுகிறீர்கள்? தயவு செய்து மறந்து விடுங்கள். கிரிக்கெட் ரசிகர்களும் மறந்து விட்டார்கள். இப்போது ஏன் இதை மீண்டும் எழுப்புகிறீர்கள்?

கல்கி : ஆஸ்திரேலிய விக்கெட் கீப்பர் இயன் ஹீலேயை பெங்களூரில் சந்தித்துப் பேசினீர்களே, என்ன பேசினீர்கள்?

மோங்கியா : இயன் ஹீலே உலகிலேயே சிறந்த விக்கெட் கீப்பர். அவரிடம் பேசி இன்னும் கொஞ்சம் இம்ப்ரூவ் செய்து கொள் என எனது முன்னோடி சையது கிர்மானிதான் அறிவுரை கூறினார். அதன்படி அவரைச் சந்தித்து அறிவுரை பெற்றேன். வேகப் பந்து வீச்சாளர் பந்து வீசும் போது, moving balls-ஐ சந்திக்கும்போது எப்படிப் பணி புரிவது என்பதை நன்றாக விளக்கினார். அதே போல வேகப்பந்து வீச்சாளர் திடீரென மெதுவாகப் போடும்போது how to act என்பதை அந்த மேதை கற்றுக் கொடுத்தார். இப்போது முன்பை விட நான் நன்றாக விக்கெட் கீப்பிங் செய்கிறேன் என நினைக்கிறேன்.



கல்கி : உங்களது முதல் வோட்டு விக்கெட் கீப்பராக இருப்பதற்கா அல்லது பேட்ஸ்மேனுக்கா?

மோங்கியா : அடிப்படையில் நான் விக்கெட் கீப்பர். அப்பணியை நான் ஒழுங்காகச் செய்தாலே போதும். பேட்டிங் எனக்கு ஊக்க போனஸ். அவ்வளவுதான். பேட்டிங் நன்றாகச் செய்து, விக்கெட் கீப்பராக நான் சரியாகப் பணி புரியா விட்டால் நிச்சயம் அணியில் இருக்க முடியாது.

கல்கி : நீங்கள் சரியாக பேட்டிங் செய்த சமயங்களில், விக்கெட் கீப்பராகச் சரிவரப் பணிபுரிவது இல்லை. முக்கியமான சமயங்களில் கேட்சை பிடிக்காமல் கோட்டை விட்டு விடுவதாகச் சொல்வது பற்றி?

மோங்கியா : சில சமயம் அப்படி நேர்வதும் உண்டு. நான் ஒன்றும் வேண்டுமென்றே செய்வது இல்லை.

கல்கி : இந்திய கிரிக்கெட் கன்ட்ரோல் போர்ட் செயலர் ஜெயந்த் லியேவும், நீங்களும் ஒரே மாநிலம் என்பதால்தான் நீங்கள் அதிகமாக அணியில் இடம் பெறுகிறீர்கள் என்ற புகார் பற்றி.

மோங்கியா : அபாண்டம். லியே இந்திய செயலாளராக ஒரு வருடமாகத்தான் இருக்கிறார். ஆனால் நானோ ஐந்து வருடமாக இந்திய அணியில் ஆடுகிறேன். இது என் மீது சொல்லப்படும் மற்றொரு பொய் குற்றச்சாட்டு.

கல்கி : அதெப்படி நீங்கள் மட்டும் எப்பவும் ஏதாவது ஒரு சர்ச்சையில் மாட்டிக் கொள்கிறீர்கள்?

மோங்கியா : அது உங்களால்தான் (பத்திரிகைக்காரர்கள்). தேவையில்லாமல் ஏதாவது எழுதி பரபரப்புச் செய்திகளை வெளியிட்டு, என்னை வம்பில் மாட்டி விடுகிறீர்கள்! அதனால்தான் நான் பத்திரிகைக்குப் பேட்டியே கொடுப்பது இல்லை!

பேட்டி : **நந்தினி**



• நெப்போலியன்

• கௌசல்யா

சினிமசாலா:

“ஆளுங்கட்சியின் ஆள் என்பதால்தான் கலைமாமணி விருதா?'' என்று 'பொன் விழா' படத்தில் நடித்துக் கொண்டிருந்த நெப்போலியனிடம், கேள்வியை முடிப்பதற்குள்ளாகவே அவரிடமிருந்து டென்ஷனான பதில் வர ஆரம்பித்து விட்டது.

“ஆளுங்கட்சியின் ஆள் என்று எப்படிச் சொல்கிறீர்கள்? ஆதரவாளன் மட்டுமே நான். திரையுலகில் என் சர்வீஸுக்கு கிடைத்த பரிசு என்று ஏன் நினைப்பதில்லை? முதல் படத்தில் வயதான அப்பா கேரக்டர். அப்புறம் வில்லன். பின் ஹீரோ என்று ஒரு தலைகீழ் மாற்றத்தில் சாதனை புரிந்திருக்கிறேன். அந்தச் சாதனைக்குக் கிடைத்த விருது என்றுதான் நான் நினைக்கிறேன். எல்லாவற்றிலும் அரசியலைப் புகுத்தாதீர்கள். அது அநாகரிகமாகிவிடும்.”

சூடான நெப்போலியனை குளிர்விக்க, “'பொன் விழா' உங்கள் பட வரிசையில் இன்னொரு வெற்றிப்படம் என்று பேசிக் கொள்கிறார்களே?'' என்று கேள்வியை மாற்றினோம்.

“ஆமாம். ஒரு ரியல் இன்ஸிடெண்ட்தான் இந்தப் படம். சில வருடங்களுக்கு முன் சுங்குவார் சத்திரத்தில் நடந்த விபத்து

கோலிவுட் வந்த தென்னா

ஒன்று. ஒரு பெண்ணை நிச்சயம் செய்யப் போன போது, மாப்பிள்ளையைத் தவிர்த்து அந்த குடும்பமே விபத்துக்குள்ளாகி ஐம்பது பேர் உயிரிழந்தனர். அதனால், அந்தப் பெண்ணை ராசியில்லாதவள் என்று ஊரே ஒதுக்கி வைத்திருந்தது.



• கரசி



• வாசன்

ஆனாலும் மாப்பிள்ளை அந்தப் பெண்ணையே பிடிவாதமாக மணந்து கொண்டார் என்பது நாடறிந்த விஷயம். இந்தச் சம்பவத்தை வைத்து உணர்ச்சிகரமான ஒரு சென்டிமெண்ட் படமாக 'பொன் விழா'வை உருவாக்கியிருக்கிறோம்" என்றார் நெப்போலியன். மீண்டும் கோபம் நினைவுக்கு வர அரசியலைப் பற்றிப் பேச ஆரம்பித்தார். நமக்குத் தெரிந்த ஒரே வழி: "நன்றிங்க! போயிட்டு வர்றோம்!"

மூன்று தலைமுறைகளுக்கு முன், தென் ஆப்பிரிக்காவில் குடியேறியவர்கள். இப்போது சினிமா ஆசையில் தாயகம் திரும்பியிருக்கின்றனர். அக்கா ப்ரியலோஷினி பிள்ளை, டைரக்டர். தங்கை கரசி என்கிற அன்புக்கரசி கதாநாயகி. இருவரும் சேர்ந்து தயாரிக்கும் படத்தின் பெயர் 'நாளை'. கரசிக்கு ஜோடியாய் நடிப்பவர் குஷ்புவின் சகோதரர் அப்துல்லா!

'நாளை' படத்திற்காக சென்னையில் தங்கியிருக்கும் ப்ரியலோஷினி பிள்ளையிடம் "படத்தின் கதை என்ன மேடம்?" என்றோம். 'நாளை' என்றால் ஒருவேளை சயன்ஸ் சம்பந்தப்பட்ட படமாக இருக்குமோ என்கிற சந்தேகத்தில். அதுதான் இல்லை.

"முழுக்க முழுக்க நம் கலாசாரம் பற்றியது. எதிர்காலத்தில் நம் குடும்ப உறவுகள் எப்படி இருக்கும்? அதனுடைய மாற்றங்கள் என்ன தாக்கத்தை உண்டாக்கும்? என்கிற ஒரு அதிரடி குடும்பப் படம்!" என்றார்.

தங்கை கரசிக்கு கதாநாயகி வாய்ப்புக் கொடுத்திருக்கும் அக்கா, தம்பி செவினுக்கு ஒரு ஸோலோ டான்ஸ் ஆடும் வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார். தென்னாப்பிரிக்காவில் கரசிக்கு 'ஸ்டேஜ் க்குவீன்' என்று செல்லப் பெயராம். ஆக்வே, 'நாளை' படத்தின் டான்ஸ் மாஸ்டர் பொறுப்பையும் கரசியே ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

பொட்டானிகல் கார்டனில் 'சொல்லாமலே' படத்தின் படப்பிடிப்பு. வஸந்த், கதிர் இருவரிடமும் பணிபுரிந்த சசிக்கு இது முதல் படம். ஆனால், அடுத்த

ப்பிரிக்க சகோதரிகள்!



படத்திற்கான அட்வான்ஸை யும் ஆர்.பி. சௌத்ரி இப் போதே சசிக்குக் கொடுத் திருக்கிறார். சசியின் கதையில் அவ்வளவு நம்பிக்கையாம் சௌத் ரிக்கு. தமது சினிமா வுலக அனுபவத்தில் ஓர் இயக்குனரின் படம் வெளியாகு முன்பே, அடுத்த படத்திற்கும் ஒப்பந்தம் செய்திருப் பது இதுவே முதல் முறை என்று சௌத்ரி பெருமைப்பட்டுக் கொண்டார். இரண்டா வது படத்துக்கு அச்சாரம் பெற்றிருக்கும் சசியிடம், சௌத்ரியை அசத்திய 'சொல் லாமலே' படத்தின் கதையைக் கேட்டோம்.

"வானத்தில் போகும் விமானத்தையே வெறித்து அதிசயமாகப் பார்க்கும் ஒரு சாதாரணமானவனுக்கும் அந்த விமானத்தில் பயணம் செய்வதையே சாதாரணமாக நினைக்கும் ஓர் இளம் பெண்ணிற்கும் ஏற்படும் காதல்தான் 'சொல்லாமலே'" - என்ற சசி, "இந்த இரண்டு வரியை வைத்து நீங்கள் கதையை சாதாரணமாக நினைத்து விட வேண்டாம். இதுவரை உலகத் திரைப் படத்தில் யாருமே சொல்லாத ஒரு க்ளை மாக்ஸை சொல்லியிருக்கிறேன்" என்றார் அழுத்தம் திருத்தமாக!

தஞ்சாவூர்க்காரரான வாசனுக்கு சினிமா மீது தணியாத தாகம். அதுவும் கண்ணதாசன் போல், வைரமுத்து போல் பாடலாசிரியராக வர வேண்டுமென்று. போஸ்டல் டிபார்ட்மெண்ட்டில் வேலையி லிருந்தவர், ராஜினாமா செய்துவிட்டு சென்னைக்கு வந்து விட்டார். ஒரு வருடம் வாய்ப்புக் கேட்டு அலைந்தார். இறுதியில் தேவாவின் மூலம் பாடலாசிரியராகப் பிர வேசம். நூறு பாடல்களை எட்டிப் பிடிக்க இருக்கும் வாசன், சமீபத்தில் 'பூந்தோட்டம்' படத்திற்காக "வானத்திலிருந்து குதிச்சு வந்தனா, பூமியிலிருந்து வெடிச்சு வந்தனா" என்று இளையராஜா வின் இசையில் எழுதிய வரி களைச் சொல்லி பரவசப்பட் டார். அப்பாடலைக் கேட்டு இளையராஜா தட்டிக் கொடுத்துப் பாராட்டினாராம். அத னால்தான் இந்தப் பரவசம்!

தாடியின் மூலம் ஒரு தானம்!

'கில்லெட்' நிறுவன அதிபர் ஆல்ஃபிரட் ஜீன், நியூயார்க் ஸ்டாக் எக்ஸ்சேஞ் தலைவர் வில்லியம் ஜான்ஸ்டனுக்கு, பதினேழு வருடங்களாக அவர் வளர்த்து வந்த தாடியை ஷேவ் செய்துவிட்டார். இந்த 'அரிய நிகழ்ச்சி' மூலம் வசூலான 1,33,500 டாலர்களை நன்கொடையாக வழங்கிவிட்டார் ஜான்ஸ்டன்!

— எஸ்.வி.என்.

ஒரு வாரப் பத்திரிகையில் கௌசல்யாவைப் பற்றிய காதல் கிசுகிசு. படித்த இரண்டு நாட் களில் பொட்டானிகல் கார்டனில் 'சொல்லா மலே' படப்பிடிப்பில் கிடைத்தார். கிசுகிசு பற்றிக் கேட்டதும், "அது கிசுகிசு தானே, அப்புறமென்ன?" என் றார். இருந்தாலும் "நெருப்பில்லா மல் புகையுமா?" என்றோம். "பத்திரிகைக் காரங்க நெருப்பு வெக்கறாங்க. அது பாட்டுக் குப் புகையுது. இப்படி நீங்களே புகைய விட் டுட்டு வந்து அதைப் பத்தி என்னிடம் கேட்டா நான் என்ன பதில் சொல்றது?" என்றார். அதாவது பெங்களூர் இளைஞர் ஒருவரைக் கௌசல்யா காதலிக்கவே இல்லையாம்!

— மஹேந்த்



குதிரை சக்தி 2

சென்ற வாரம்....

விருப்பத்துக்கு மாறாக ஒரு வயதான தொழிலதிபரைத் திருமணம் செய்ய நேர்ந்து விடுகிற இளம்பெண் சசிக்கு, துபாயிலிருந்து அவளது முன்னாள் காதலன் ஒரு குதிரை பொம்மையைப் பரிசாக அனுப்புகிறான்.

பலவித பிரச்னைகளாலும் மனக்குழப்பத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கும் சசி, தீர்வு வேண்டி, மனநல மருத்துவர் முரளியை நாடி வந்து இவ் விஷயங்களை விவரிக்கிறாள். இனி....

“குதிரை பொம்மையா...” என்றேன் மறுபடியும்.

“ஆமா... குதிரை பொம்மையேதான்.. எனக்குக் குதிரை மேல ஒரு கிரேஸ்...” என்றாள்.

நான் இதை என் மனத்தில் ஆழமாய் குறித்துக் கொண்டேன். குதிரைக்கு மனஇயல் ரீதியாக நிறைய விசேஷம் உண்டு. காமம், கோபம், நளினம்... சூப்பர் நேச்சுரல்.. என்று குதிரையோடு தொடர்புடைய நிறைய விசேஷங்கள் உண்டு.

அவள் அந்தப் பொம்மையைப் பற்றி ஆர்வமாய்ப் பேசிக் கொண்டிருந்தாள்.

“அற்புதமான பொம்மை அது முரளி... தந்தத்துல செஞ்சது... கறுப்பு கலர்ல... முன்னங்கால்களைத் தூக்கி நின்னுக்கிட்டு... என்ன கம்பீரம் தெரியுமா...? அதோட ஒவ்வொரு நெளிவும், சுளிவும்... எவ்வளவு தத்ரூபம் தெரியுமா...?” என்று உரத்த குரலில் சொல்லிக் கொண்டே போனவள், சட்டென்று நிறுத்தினாள்.

நான் அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்தேன். உற்சாக உணர்வுகள் கொஞ்சம் கொஞ்சமாகப் பல முக பாவங்களுக்கு இடம்கொடுத்தன. உணர்வுகளை எளிதாக பிரதிபலிக்கக்கூடிய அவள் முகத்தில், பய உணர்வுகள் கொஞ்சம் கொஞ்சமாய் உற்சாக உணர்வுகளை இடமாற்றம் செய்ததைக் கண்கூடாகப் பார்த்தேன்.

வார்த்தைகள் அவள் வாயிலிருந்து திக்கலாய் வெளிவந்தன.

“ஆனா.... அப்புறம்தான்... அப்புறம்தான்...” ஒரு மெல்லிய நடுக்கம் அவள் உடலில் ஓடியதைப் பார்த்தேன்.

“கோவையாய்ச் சொல்லு சசி...” என்றேன்.

அவள் சற்று நிதானித்துக் கொண்டு என்னைப் பார்த்தாள்.

“மேலே சொல்லு சசி” என்றேன்.

“அந்தக் குதிரை பொம்மை எனக்குள்ள ஏற்படுத்தின உணர்வுகளை வெளிப்படுத்தறது கஷ்டம் முரளி... காணாம போன குழந்தைக்கு, திடீர்னு அதோட அப்பா பின்னாடி இருந்து கட்டிப் புடிச்சா எப்படி இருக்குமோ. அப்படி ஒரு சந்தோஷ அதிர்ச்சி... அருண்.... அருணே என்கிட்ட நேர்ல வந்துட்ட மாதிரி ஒரு ஃபீலிங்...”

“..........................”

“என்னோட திடீர் சந்தோஷத்தை பிரபாகர் கவனிச்சிருக்கணும். அதுக்குக் காரணம் அந்தக் குதிரை பொம்மை தான்னு தெரிஞ்சிருக்கணும். ஒருநாள் நடுராத்திரிலதான் அவர் வீட்டுக்கு வந்தார். நல்லா குடிச்சிட்டு வந்தார். நான் மாடில இருந்த பெட்ரூம்ல படுத்துக்கிட்டு இருந்தேன். ஒரு அரை தூக்கம்னு வெச்சிக்கோயேன். என்னோட அணைப்புல அந்தக் குதிரை பொம்மை இருந்தது. அவர் ரூமுக்குள்ள

ஹேமா ராஜ்

நுழைஞ்சி லைட்டைப் போட்டார். நான் எழுந்திரிச்சி உட்கார்ந்தேன். அவர் என் மடியில இருந்த அந்தப் பொம்மையைப் பார்த்தாரு. அவர் மனசுல ஒரு கோபம், மெல்லமா பத்திக்கறது தெரிஞ்சது... 'என்ன இது பொம்மை... எப்பப் பாரு இதையே கட்டிக்கிட்டு இருக்கேன்'னாரு..." என்றவள் நிறுத்தினாள்.

நான் ஆர்வமாய், "மேல சொல்லு சசி" என்றேன்.

"நான் அப்ப ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லியிருந்திருக்கலாம். சொல்லியிருந்திருக்கணும்னு இப்பத் தோணுது. ஆனா, அப்போ திடீர்னு உண்மையைச் சொல்லிடணும்னு தோணிச்சி. ஒருவேளை அரைகுறை தூக்க மயக்கத்துல, எல்லோர்க்கும் உண்மையைச் சொல்லணும்னு தோணுமோ என்னமோ... நானும் உண்மையைச் சொன்னேன். 'அருண் அனுப்புன பொம்மை'னு சொன்னேன். 'யாரு அருண்'னு கேட்டாரு... என்னோட காதலர்னு சொன்னேன். அதைக் கேட்டதும் குப்புனு அவர் முகம் சிவந்தது. 'நீ ஒரு துரோகி. உன்னை என்ன பண்ணறேன் பாரு'ன்னு கத்தினவரு, சடார்னு திரும்பிக் கதவைப் பார்த்து நடந்தாரு. திடீர்னு போதைல தடுமாறி விழத் தெரிஞ்சாரு. சுதாரிச்சிக்கிட்டு கதவைத் திறந்து வெளில போய் கதவைப் படார்னு அறைஞ்சி சாத்தினாரு.

"நான் பிரமைப் பிடிச்ச மாதிரி அப்படியே கட்டில்ல உட்கார்ந்துக்கிட்டு இருந்தேன். எனக்குள்ள ஒரு குரல் 'அவரைத் தடுத்து நிறுத்து. எங்கேயாவது விழுந்திடப் போறாரு'ன்னு அலறிச்சி. ஆனா என்னால இயங்கவே முடியலை. அவர் கதவைச் சாத்திட்டு போன கொஞ்ச நேரத்திலேயே 'டமார்'னு பெரிசா விழற சத்தம்... 'ஐயோ'ன்னு அவரோட கூக்குரல்... எனக்கு நெஞ்சை அடைச்சது. என்னோட சக்தியையெல்லாம் திரட்டி, நடுக்கமா கட்டிலை விட்டு இறங்கினேன். ஐயோ.. போச்சு.. என்னமோ நடக்கக் கூடாதது நடந்திடிச்சுன்னு உள்ளுக்குள்ள ஒரு அலறல். தடுமாற்றத்தோட அறையை விட்டு வெளில வராந்தாவுக்கு வந்தேன்.

"சில விளக்குகள் மட்டும் எரிஞ்சிக்கிட்டிருந்ததால வராந்தவுலயும், வராந்தாவுல இருந்து கீழே ஹாலுக்கு போற படிக்கட்டுலயும் வெளிச்சம் குறைவாத்தான் இருந்தது. நான் படிக்கட்டுகிட்டே வந்தேன்..." என்றவள் நிறுத்தினாள்.

வெளிறிக் கிடந்த அவள் முகத்தில் பரவியிருந்த பீதியைப் பார்த்தேன். அவளே





தொடர்ந்தாள். "கீழே... கீழே... அவர் கிடந்தாரு. கடைசி படிக்கட்டுல காலு இருந்தது. உடம்பு ஹால்ல... குப்புறக் கிடந்தாரு. ஒருகணம் ஸ்தம்பிச்சுப் போய் நின்னேன். அடுத்தகணம் கீழே ஓடினேன்.

"கிட்டப் போய்ப் பார்த்தேன். மூச்சு விடற மாதிரியே தெரியலை. மெல்ல பக்கத்துல உட்கார்ந்தேன். அவரைப் புரட்டினேன். முன் நெத்தில அடி பலமாய் பட்டிருந்தது. தலைலயும் நிறைய காயம். வாயோரம் இரத்தம் தெரிஞ்சது. 'என்னங்க'ன்னு கூப்பிட்டுக்கிட்டே அவரை மெல்ல உலுக்கினேன்.

"சடார்னு அவர் கண்ணு ரெண்டும் திறந்தது. என்னை வெறிச்சுப் பார்த்தாரு. என்னை நம்பு முரளி... அதுல அந்தக் கண்கள்ல அப்படி ஒரு வெறி.. அப்படி ஒரு குரோதம்... 'பழி'ன்னாரு. சட்டுன்னு அவர் கண்கள்ல இருந்த ஒளி, லைட் ஆஃப் பண்ண மாதிரி அணைஞ்சு போச்சு. அவர் தலையும் சாஞ்சிரிச்சி..."

நான் அதிர்ந்தேன்.

"மைகாட்... இது எப்ப நடந்தது சசி..." என்றேன்.

"ஒரு மாசம் முன்னாடி முரளி..."

"அப்புறம் என்னாச்சி சசி..."

"உண்மையைச் சொன்னா பிரபாகரோட மரணம் எனக்கு ரொம்ப வருத்தத்தைத் தரலை. என் கணவர் இறந்துட்டாருங்கற ஒரு கலக்கம். அதே சமயம் முழுசா விடுதலை அடைஞ்சிட்ட மாதிரி ஒரு உணர்வு. அவரோட போஸ்ட்மார்ட்டம், இறுதிச் சடங்கு எல்லாம் எளிமையா நடந்தது. அவரோட சொந்தம்னு யாருமே இல்லை. என்னோட அப்பா, அம்மாவை சடங்கு முடிஞ்சதும் நான் போகச் சொல்லிட்டேன். எனக்குக் கொஞ்சம் தனிமை வேண்டியிருந்தது..."

"........................"

"கொஞ்ச நாள் முன்னாடி அருண்கிட்ட இருந்து ஒரு லெட்டர் வந்திருந்தது... நடந்த விஷயம் கேள்விப்பட்டு வருத்தம் தெரிவிச்சிருந்தான். கூடவே என்னைக் கல்யாணம் பண்ணிக்கணுங்கற அவனோட ஆசையைத் தெரிவிச்சிருந்தான். நான் ரொம்ப யோசிக்கலை. கல்யாணத்துக்கு சம்மதம் தெரிவிச்சி பதில் எழுதிட்டேன். என்னோட வாழ்க்கையை வீணா கழிக்கறதுல எனக்கு உடன்பாடு இல்லை... அருணை உடனே ஊர் திரும்பச் சொல்லியிருந்தேன்."

அவளுடைய இந்த முடிவு சரியா தவறா என்று என்னிடம் கேட்பாள் என எண்ணி ஏமாந்தேன். அவளே தொடர்ந்தாள்.

"ஆனா... நான் அந்த லெட்டரை எழுதினதுக்கு அப்புறம்தான் சில விசித்திரங்கள் நடந்தன..."

"என்னது அது..."

"லெட்டரை நான் போன வாரம்தான் எழுதினேன்.. அதுக்கு ஒரு ரெண்டு நாள் கழிச்சித்தான் அதை முதல்ல கவனிச்சேன்..."

"எதை...?"

"பெட்ரூம்ல என்னோட கட்டிலுக்குப் பக்கத்துலேயே ஒரு மரஸ்டாண்டுல அந்தக் குதிரை பொம்மையை வச்சிருப்பேன். அந்த மர ஸ்டாண்டு படுக்கைல இருந்து ஒரு நாலடி தள்ளி இருக்கும்னு வச்சிக்கோயேன்..."

"சரி... சொல்லு..."

"எப்பவுமே இந்தப் பொம்மையை கிழக்குப் பார்த்த மாதிரிதான் வைப்பேன்... அப்பத்தான் என்னோட படுக்கைல இருந்து இதோட பக்கவாட்டுத் தோற்றம் அதாவது... சைட் வியூ நல்லா இருக்கும். அந்த பொம்மையோட அற்புதமே அதோட சைட் வ்யூலதான் இருக்குன்னு சொல்வேன்..."

"ம்... சொல்லு...."

"அன்னிக்கி இராத்திரி எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு... வழக்கமா இருக்கற மாதிரி அதைக் கிழக்குப் பக்கமா வச்சிட்டுத்தான் நான் படுக்கைக்குப் போனேன்.. படுக்கைல இருந்து அதோட சைட் வ்யூவை

பார்த்துக்கிட்டே தூங்கிட்டேன்... ஆனா...''
"ஆனா..."
''கார்த்தால எழுந்திரிச்சதும் அந்த பொம்மை என் கட்டிலைப் பார்த்த மாதிரி திரும்பியிருந்தது... அதாவது அதோட சைட் வ்யூ இல்லாம, முன்பக்கத் தோற்றம்தான் எனக்குத் தெரிஞ்சது... ஃப்ரண்ட் சைட் வ்யூ...''
"உளறாதே..'' என்றேன் அழுத்தமாய்.
அவள் மெலிதாகச் சிரித்தாள்.
"ஒரு சைக்கியாட்ரிஸ்ட்கிட்டே இதைத் தவிர வேற எதை எதிர்பார்க்க முடியும்..'' என்றாள் வேதனையாய்...
நான் நிதானமாகப் பேசினேன்.
"இதப் பாரு சசி... அந்தப் பொம்மை உண்மையாலுமே திரும்பியிருந்தா..."
''உண்மையாச் சொல்றேன் முரளி... என்னை நம்பு...''
''சரி திரும்பியிருந்ததுன்னே வச்சிப் போம்.. அது எப்படி திரும்பி இருக்கும்னு நினைக்கறே..."
"சிம்பிள்..." என்றாள். "அது திரும்பி இருக்கறதைப் பார்த்தவுடனே எனக்கு என் கணவர் கடைசியா சொன்ன 'பழி'ங்கற வார்த்தைதான் நினைவுக்கு வந்தது..."
"நான்சென்ஸ்..."
"இல்ல முரளி... என்னோட கணவரோட ஆவிதான் என்னைப் பழிவாங்கறதுக்காக அந்தக் குதிரை பொம்மைல இறங்கி இருக்கணும்..."
''முட்டாள்தனமா பேசாதே... உன்னோட வேலைக்காரங்க யாராவது அதைத் திருப்பி வச்சிருக்கலாம்...''
"வீட்ல வேலைக்காரங்களே இல்லை முரளி..."
"இல்ல... இராத்திரி நீ பாத்ரூம் போகும் போது அந்த ஸ்டாண்ட் மேல லேசா இடிச்சி அது திசை திரும்பி இருக்கலாம்...''
"இல்ல... நான் உறுதியா சொல்றேன். நான் இராத்திரி எழுந்திருக்கவேயில்லை...''
"இல்லேன்னா... படுக்கறதுக்கு முன்னாடியே நீ தவறுதலா... அந்த பொம்மையை படுக்கையைப் பாக்கற மாதிரியே வச்சிருக் கலாம்...''
"இல்ல முரளி... எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. நான் தூங்கும் போது அதோட சைட் வ்யூவை பார்த்துக்கிட்டுத்தான் தூங்கினேன்...''
நான் எதுவும் பேசாமல் அவளை உற்றுநோக்கினேன். பொய் சொல்வதற்கான அறிகுறி எதுவும் அவள் முகத்தில் தெரிய வில்லை.
"இன்னிக்குக் கார்த்தால நடந்ததைக் கேட்டா இன்னும் ஆச்சரியப்படுவே முரளி..."
"சொல்லு..."
''நேத்து இராத்திரி படுக்கறதுக்கு முன்னாடி அது கிழக்குப் பக்கமா பார்க் கறதை உறுதிப்படுத்திக்கிட்டேன். அப்புறம் தான் தூங்கினேன்...''
"..........................."
''கார்த்தால எழுந்திரிச்சதும் முதல்ல அந்த மர ஸ்டாண்டைத்தான் பார்த்தேன்...''
''சொல்லு... எப்படி இருந்தது அந்த பொம்மை...''
"அந்தப் பொம்மை அந்த ஸ்டாண்டு லயே இல்லை..."
"என்னது..."
"ஆமாம் முரளி... அந்த பொம்மை அந்த ஸ்டாண்டுலேயே இல்லை..."
''பின்ன எங்க இருந்தது...'' என்னை அறியாமலேயே என் குரல் உயர்ந்திருந்தது.
"தரைல... ஸ்டாண்டுக்கும் கட்டிலுக்கும் நடுவுல... கீழ சாயாம நின்னவாக்கில... கரெக்டா சொல்றதுன்னா என் கட்டிலை நோக்கி நகர்ந்து வந்த மாதிரி..."
நான் அதிர்ந்தேன்.
"சசி... என்னால நம்ப முடியலை..."
"நான் பொய் சொல்லலை முரளி..."
கனமான அமைதி சற்று நேரம் அறையை ஆக்ரமித்தது. அவள்தான் அதை உடைத்தாள்.



''சில்லறைச் செலவினங்களுக் காக ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் முதல்வர் ஐயாயிரம் ரூபாய் அனு மதிச்சிருக்காரே ஸார்?''
''அதுக்காக நினைச்ச நேர மெல்லாம் சிங்கிள் டீக்கு நீ சில் லறை கேட்டா எப்படி?''
- உ. ராஜாஜி

"முரளி..."

"சொல்லு சசி..."

"உள்ளுணர்வுகளை பத்தி நீ என்ன நினைக்கிறே...?"

"சற்று யோசித்துத்தான் நான் பதில் சொன்னேன்.

"உள்ளுணர்வுகளை நான் மதிக்கறேன் சசி... நம்மோட ஆழ்மனதோட அக்கறையுள்ள குரல்... ஆனா அதை ரொம்ப சரியாப் புரிஞ்சிக்கணும்..."



"அபார்ஷனுக்காக டாக்டரைப் பார்க்கப் போனியே, என்ன ஆச்சு?"

"அவர் ஏதோ ஞாபகத்தில், இப்போ கலைச்சா மறுபடியும் தி.மு.க.தான் வரும் என்கிறார்."

– எஸ். மோகன்

"எனக்கு என்னமோ இன்னிக்கு ரொம்ப முக்கியமான நாளா இருக்கும்னு தோணுது..."

"எப்படிச் சொல்றே..."

"இன்னைக்கு... இன்னைக்குக் கட்டுப்படுத்த முடியாத நிகழ்ச்சிகள் நடக்கப் போகுதுன்னு நினைக்கிறேன்..."

எனக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் இருந்ததால் சும்மாயிருந்தேன்.

"முரளி... இன்னிக்கி நிச்சயமா ஏதோ நடக்கப் போகுது..." அவள் குரலில் இப்போது நடுக்கம் கூடியிருந்தது.

"ரிலாக்ஸ் சசி... நீ ரொம்ப டென்ஷனா இருக்கே. தப்பா எதுவும் நடக்காது. நான் எழுதித் தர்ற மாத்திரைகளைச் சாப்பிடு. யூ வில் பி ஆல்ரைட்..." என்று பேனாவை எடுக்கப் போனேன்.

"எனக்கு மாத்திரை எதுவும் வேணாம் முரளி..." என்றாள்.

"உன்னோட மாத்திரையால எதையும் மாத்த முடியாது..." நான் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"நீ வேற ஒரு வகைல எனக்கு உதவணும் முரளி..."

"சொல்லு சசி..."

"இன்னிக்கு ராத்திரி நீ எனக்குப் பாதுகாப்பா இருக்கணும்... இன்னிக்கு நடக்கப் போறதுல இருந்து நீதான் என்னைக் காப்பாத்தணும்..."

நான் அமைதியாய் அவளையே பார்த்தேன்.

"ப்ளீஸ்..." என்றாள்.

எது என்னை சம்மதிக்க வைத்தது என்பது இதுவரை எனக்குத் தெரியவில்லை. அவளின் அந்தக் குரலா... இல்லை முக பாவங்களா... இல்லை அபலைப் பெண்களை நெருக்கடியில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று யுகாந்திரமாய் ஆண்களின் ஈகோவில் கலந்து விட்டிருக்கும் ஒரு சுப்பீரியாரிட்டி உணர்வா....

எது எப்படியோ... நான் சம்மதித்தேன்.

"சரி சசி... இன்னிக்கு இராத்திரி ஒன்பது மணிக்கு நான் உன் வீட்டுக்கு வர்றேன். அட்ரஸ் சொல்லு..."

அவள் வடசென்னை தாண்டி கடற்கரையோர புறநகர்ப் பகுதியைச் சொன்னாள்.

"சரி சசி... சரியா ஒன்பது மணிக்கு நான் அங்கே இருப்பேன். ஆனா அதுவரைக்கும் ஜஸ்ட் ரிலாக்ஸ்... இந்த மாத்திரையை வாங்கிக்கோ... இப்ப ஒண்ணு... இராத்திரி ஒண்ணு... யூ வில் பீ ஆல்ரைட்..."

அவள் என்னுடைய ப்ரிஸ்கிரிப்ஷனை வாங்கிய விதத்தில் அலட்சியம் தெரிந்தது...

அவள் போன பின்பும் அவளின் மெலிதான வாசம் கொஞ்ச நேரம் சுற்றி வந்தது... மனதிலே விவரிக்க முடியாத உணர்வுகள் சுழன்று அடிக்க ஆரம்பித்திருந்தன. தற்செயலாக தினக் காலண்டரை பார்த்தபோதுதான் அன்றைக்கு பௌர்ணமி என்று தெரிய வந்தது.

(தொடரும்)





1998 ஜூலை 12
வெகுதான்ய ஆனி 28
மலர் : 56
இதழ் : 50

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



பி.ஜே.பியை மிரட்டும் பி.ஜே.பி!


"தனி மாநிலம் பிரித்துத் தருகிறீர்களா, இல்லை ராஜினாமா செய்து விடவா?..." பிரதமரை இப்படி மிரட்டிப் பணிய வைத்துள்ளவர்கள் 12 பி.ஜே.பி எம்.பிக்கள், 22 பி.ஜே.பி எம்.எல்.ஏக்கள்! அத்தனை பேரும் பீஹார்காரர்கள். அம்மாநிலத்தைப் பிரித்து, வனஞ்சல் என்கிற தனி மாநிலம் உருவாக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தியவர்கள். இந்த பிளாக் மெயில் குழுவுக்குத் தலைவர், பி.ஜே.பி.யின் தேசிய துணைத் தலைவர்களுள் ஒருவரான கரியா முண்டா!

உ.பி.யிலிருந்து இதே போல் ஒரு 'போராளி'க் கூட்டம் உள்துறை அமைச்சரைச் சந்தித்து மிரட்டியிருக்கிறது. 'உத்தரஞ்சல் என்ற தனி மாவட்டம் உருவாக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?' என்று தட்டிக் கேட்டிருக்கிறது.

உடனே, அத்தனை முக்கியமான வேலைகளையும் மூட்டை கட்டி வைத்து விட்டு, மூன்று புதிய மாநிலங்கள் அமைப்பதற்கான மசோதாவைத் தயாரிப்பதில் இறங்கி விட்டது பி.ஜே.பி. இந்த மசோதா ஜனாதிபதியின் அங்கீகாரம் பெறுவது ஒரு சம்பிரதாயம்தான். உத்தரஞ்சல், வனஞ்சல், சடிஸ்கர் என்று மூன்று புதிய மாநிலங்கள் விரைவில் உருவாகத்தான் போகின்றன.

தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுகிற இந்த முயற்சியால் என்ன நன்மை விளையும் என்று பார்த்தால்... ஏமாற்றமே மிஞ்சுகிறது.

'ஆதிவாசிகள் நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றன; தனி மாநிலம் அமைந்தால் அவர்கள் வாழ்வு வளம் பெறும்' என்பது போன்ற சில காரணங்கள் வெறும் சால்ஜாப்புதான்.




புது மாநிலங்கள் உருவாக்கப்படுவதால் அவற்றுக்கான அரசு அலுவலகங்கள், நிர்வாக அலுவலகங்கள், அவற்றில் பணியாற்ற அதிகாரிகள், சிப்பந்திகள், அவர்களுக்கான சம்பளம், இதர வசதிகள், வாகனம், வீடு, போக்குவரத்து என்று அரசாங்கச் செலவினங்கள் குட்டி போட்டுக்கொண்டே போகும்.

இந்த அலுவலகப் பதவிகளிலும் புதிய மாநிலங்களின் அமைச்சரவையிலும் அமர்ந்து அதிகார பலத்தை அனுபவிக்கவும் செல்வாக்கில் திளைக்கவும், அதன் மூலம் பல்வேறு 'வழிகளில்' 'வருவாயை'ப் பெருக்கிக் கொள்ளவும் கட்சிக்காரர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அரசுக்குப் பொருளாதாரச் சுமையாக இராமல், வருவாயைப் பெருக்கிக் கொள்ள ஒரு பகுதியால் இயலுமானால், அதைத் தனி மாநிலமாக்க அவசியமும் இருந்தால், அந்த அந்தஸ்தை அளிப்பதில் அர்த்தமுண்டு. ஆனால், புது மாநிலங்களால் நிதி ஆதாயம் ஏதேனும் கிடைக்குமா என்று இனிமேல்தான் ஆராய்ந்து பார்க்கப் போவதாக உள்துறை அமைச்சகம் கூறுகிறது!

இப்படித் தலைகீழாகக் காரியங்கள் செய்யும் நிலைக்கு பி.ஜே.பி அரசு தள்ளப்பட்டிருப்பது மிகவும் பரிதாபம். இப்படிப்பட்ட அவசரக் கோல முடிவுகளுக்குக் காரணம் அதே கட்சியைச் சேர்ந்த பி.ஜே.பி எம்.பிக்களின் வற்புறுத்தல்தான் என்பது அதனினும் பரிதாபம்! நூறு நாள் ஆட்சியில் கூட்டணி கட்சிக்காரர்களின் மிரட்டலுக்குப் பணிந்து கொண்டிருந்த பிரதமர், இப்போது தமது சொந்தக் கட்சிக்காரர்களின் பிளாக்மெயிலுக்கும் பணிய ஆரம்பித்திருக்கிறார்!

இதைத் தொடர்ந்து ஆந்திரம், மஹாராஷ்டிரம், கர்நாடகா மாநிலங்களில் ஏற்கெனவே உள்ள பிளவு மனப்பான்மைகள் வலுவடைந்து, புதிய புதிய மாநிலங்கள் அமைய கோரிக்கைகள் வரத்தான் போகின்றன. மக்களின் வரிப்பணம் முன்னேற்றத்துக்கும் மேம்பாட்டுக்கும் பயனாகாமல் தண்டச் சம்பளத்துக்கும், ஆள்வோரின் ஆடம்பர வாழ்க்கைக்கும் மேலும் மேலும் விரயமாகப் போகிறது!



முதல்வரின் சுறுசுறுப்பு மட்டுமே போதுமா?

தமிழக தலைமைச் செயலக அசோசியேஷனின் பொன்விழா! முதல்வரின் தலைமையில் விழா நடக்க, அமைப்பின் தலைவர் முருகேசன் புலம்பித் தீர்க்கிறார்: அரசு ஆணை பெற்ற பிறகும் அந்த அமைப்புக்கென ஒதுக்கப்பட்ட 23 ஏக்கர் நிலத்தைப் பெற படாதபாடு பட்டதை வர்ணிக்கிறார். தலைமைச் செயலகத்தில் கோப்புகள் வேகமாக நகராததே காரணம் என்பதையும் இலைமறைவு காயாக ஒப்புக் கொள்கிறார்.

முதல்வரின் முன்னிலையிலேயே வழங்கப்பட்டது இந்த ஒப்புதல் வாக்குமூலம்!

தமிழக முதல்வர் இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு, அரசு ஊழியர்களுக்கு அவர்களது கடமைகளை நினைவூட்டியிருக்கிறார்.

'அரசு ஊழியர்களான உங்களுக்கே இந்தக் கதியானால், நீங்கள் கோப்புகளைத் தேங்க விடும்போது, சராசரி மக்கள் படும் அவதி எத்தகையதாக இருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்...' என்றவர், 1967 முதல் அரசு ஊழியர்கள் பெற்ற வெவ்வேறு சலுகைகளைப் பட்டியலிட்டிருக்கிறார். மற்ற மாநில அரசுகளுக்கு முன்பாக தி.மு.க அரசு தனது ஊழியர்களின் சம்பளத்தை மத்திய அரசு ஊழியர் ஊதியத்துக்கு இணையாக உயர்த்தியிருப்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

தி.மு.க. ஆட்சி என்றில்லை; எந்த ஆட்சியுமே அரசு ஊழியர்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளத்தான் விரும்புகிறது. ஆனால், அந்த ஊழியர்களிடம் அதற்கேற்ற சேவையை மக்கள் பெறுவது அரிதாகவே இருக்கிறது. இதற்குக் காரணம் காலங் காலமாக நிலவி வந்து, வாழ்க்கை முறையாகவே ஆகிவிட்ட ஊழல், சிவப்பு நாடா சிக்கல்கள் மட்டுமல்ல... உற்சாகமும் ஈடுபாடுமற்ற ஒருவித மெத்தனமான மனோபாவமும் கூடத்தான்.

முதல்வர் தமது சுறுசுறுப்பு மூலம் வழி காட்டலாம். ஆனால் அதிகாரிகளும் ஊழியர்களும் அவ்வழியைப் பின்பற்ற வேண்டுமானால், ஆட்சிக் கவிழ்ப்பு மிரட்டல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். ஆரோக்கியமற்ற அரசியல் சூழல், பணி கலாசாரத்தை பாதிக்கவே செய்யும். ◉

மத்திய நிதியமைச்சர் யஷ்வந்த் சின்ஹா, ஒரு நாள் பயணமாக சென்ற வாரம் சென்னை வந்திருந்தார். நாள் முழுவதும், அடுத்தடுத்து, நிகழ்ச்சிகள். மூன்று தடவை, பேட்டிக்குக் கொடுத்த நேரத்தை மாற்றும்படியானது. டின்னரை முடித்துக் கொண்டு, கல்கிக்குப் பேட்டி அளித்தபோது இரவு மணி பதினொன்று. 'சீக்கிரமாய் பேட்டியை முடித்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் அதிகாலை, விமானம் பிடிக்கச் சிரமமாகிவிடும்' என்று கூறிவிட்டு, ரொம்ப கேஷுவலாகப் பேசத் தொடங்கினார். பேட்டியிலிருந்து...

ரூபாயின் மதிப்பு விழுந்ததானா?

— மத்திய நிதி அமைச்சர் பேட்டி

கேள்வி : நீங்கள்தான் உங்கள் குடும்பத்தில் அரசியலுக்கு வந்த முதல் நபரா?

யஷ்வந்த் சின்ஹா : ஆமாம்! எங்கள் குடும்பத்தில் தலைமுறை தலைமுறையாக ஒன்று சட்டம் படிக்கப் போவது, அல்லது ஐ.ஏ.எஸ். அதிகாரியாவதுதான் வழக்கம். எனவே, என் குடும்ப மரபுப்படி, இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலையில், சட்டத்தைவிட, சிவில் சர்வீஸ் தான் என்னைக் கவர்ந்தது.

கேள்வி : ஐ.ஏ.எஸ் பணிக்கால அனுபவங்களில் சிலவற்றை நினைவு படுத்திச் சொல்ல முடியுமா?

சின்ஹா : ஓ! நிறைய. மறக்க முடியாத ஒரு அனுபவம் என்றால், நான் 'சந்தால் பர்கானா' மாவட்டக் கலெக்டராக இருந்த போது, அப்போதைய பீகார் முதலமைச்சரான ஸ்ரீ மகா மாயா பிரசாத் சின்ஹாவுடன் ஏற்பட்ட கடுமையான மோதலைத்தான் குறிப்பிடுவேன். முதல்வருடனான எனது மோதல், மாநிலம் முழுக்க பரபரப்பாய்ப் பேசப்பட்டது. பலமுறை பத்திரிகைப் பேட்டிகளில் அந்த மோதல் பற்றிச் சொல்லி எனக்கே அலுத்துவிட்டது.

கேள்வி : ஐ.ஏ.எஸ். சர்வீஸ் உங்களுக்கு ஆத்ம திருப்தியைத் தந்ததா?

சின்ஹா : ஓ எஸ். என் அரசுப் பணிக் காலத்தில் சாதாரணக் குடிமகன் பயன் பெற்ற சம்பவங்கள் ஏராளம். அந்த ஒவ்வொரு தருணத்திலும், இந்தப் பொறுப்பில் இருப்பதால்தான், இப்படி சாமானியர்களுக்கும் உதவ முடிகிறது என்று நான் திருப்தி அடைந்ததுண்டு.

கேள்வி : நீங்கள் பணியாற்றிய சமயம், அரசியல் குறுக்கீடுகள் வந்தது உண்டா?

சின்ஹா : நிறைய தருணங்களில் பலமான அரசியல் குறுக்கீடுகள் வந்தன. ஆனால் அதற்கெல்லாம் நான் வளைந்து கொடுத்தது கிடையாது. அதனால் ஏற்பட்ட சிரமங்கள், சில சமயங்களில் என்னை வாட்டமடையச் செய்தாலும், நான் காம்ப்ரமைஸ் செய்து கொண்டதே இல்லை. என் மனசாட்சிக்கு நியாயம் என்று பட்டதை, சட்டப்படி சரியானதை மட்டுமே செய்வது என்கிற என் கொள்கையிலிருந்து நான் ஒருபோதும் பின் வாங்கியதே இல்லை.



கேள்வி : ஐ.ஏ.எஸ் பதவியை ராஜினாமா செய்துவிட்டு அரசியலில் சேர முடிவெடுத்தது ஏன்?

சின்ஹா : எனது நீண்ட கால ஐ.ஏ.எஸ். பணியில் எனக்கு எத்தனையோ விதமான அனுபவங்கள். இனி, புதிதாய் எதுவும் இருக்கப் போவதில்லை என்ற எண்ணம் ஏற்பட்ட தருணத்தில்தான் நான், அரசுப் பணியை ராஜினாமா செய்துவிட்டு, அரசியலில் பிரவேசிப்பது என்று முடிவு செய்தேன்.

கேள்வி : உங்களின் இந்த முடிவுக்கு உங்கள் குடும்பத்தாரிடம் வரவேற்பு இருந்ததா?

சின்ஹா : எப்படி இருக்கும்? அவர்களுக்கு என் முடிவில் சம்மதமில்லை. இன்னும் பன்னிரண்டு வருட சர்வீஸ் இருந்த சூழ்நிலையில் எதிர்காலம் நிச்சயமில்லாத அரசியலில் சேர வேண்டுமா என்று திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே இருந்தனர். நானோ, எடுத்த முடிவு எடுத்ததுதான் என்று கூறிவிட்டேன்.

கேள்வி : எத்தனையோ அரசியல் கட்சிகள் நாட்டில் இருக்க, சந்திரசேகரின் கட்சியில் சேர்ந்தது ஏன்?

சின்ஹா : அரசியலில் ஈடுபட முடிவெடுத்த சமயத்திலேயே, காங்கிரஸ் கட்சியில் எந்தக் காரணம் கொண்டும் சேரக் கூடாது என்று நான் திட்டவட்டமாக முடிவு எடுத்தேன். காரணம் அது ஊழல் கட்சி. எனக்கு, வெகுகாலமாகவே லோக் நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயண் மீது மிகுந்த மரியாதை உண்டு. சொல்லப் போனால், நான் ஐ.ஏ.எஸ். சர்வீசில் இருந்தபோதே, ஓரிரு தடவை, பதவியை ராஜினாமா செய்துவிட்டு, ஜெபியின் இயக்கத்தில் சேர யோசித்தது உண்டு. அவரிடம் நேரிடை பரிச்சயமும் உண்டு. எனவே, ஜெ.பியினால் உருவாக்கப்பட்ட ஜனதா கட்சியில் சேர விரும்பினேன். அப்போது ஜனதா கட்சித் தலைவராக இருந்த சந்திரசேகரை நான் சந்தித்தது கூட இல்லை. ஒரு பொது நண்பர் மூலம் சந்திரசேகரைச் சந்தித்தேன். ஜனதா கட்சியில் சேர்ந்தேன்.

“முதல்வருடனான எனது மோதல், மாநிலம் முழுக்க பரபரப்பாய்ப் பேசப்பட்டது. பலமுறை பத்திரிகைப் பேட்டிகளில் அந்த மோதல் பற்றிச் சொல்லி எனக்கே அலுத்து விட்டது.”

கேள்வி : முதல் முறையாக லோக்சபா தேர்தலில் போட்டியிட்ட சமயம் எப்படி உணர்ந்தீர்கள்?

சின்ஹா : தேர்தல் என்பது எத்தனை சிக்கலானது; என்பதை அரசு அதிகாரியாக இல்லாமல், மறுபுறத்திலிருந்து ஓர் அரசியல்வாதியாக, வேட்பாளராகக் கண்டபோது இன்டரஸ்டிங் அனுபவம்தான் என்றாலும், ரொம்பக் கடினமானது. என்னைக் கேட்டால் இந்த உலகத்திலேயே ரொம்ப கஷ்டமான விஷயம் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெறுவதுதான் என்று கூறுவேன். 'அவருக்கென்ன அதிகாரம் நிறைந்த அரசு அதிகாரியாய் இருந்துவிட்டு, அரசியலுக்கு வந்து, தேர்தலில் வென்று அமைச்சராகி விட்டார்' என்று என்னைப் பற்றி சுலபமாய் விமர்சித்து விடுகிறவர்களுக்கு, என் அரசியல் வெற்றிக்குப் பின் எத்தனை கஷ்டம், உழைப்பு உள்ளது என்று தெரிவதில்லை.

கேள்வி : நீங்கள், பா.ஜ.க.வுக்கு வந்தது சந்தர்ப்பவாதம்தானே?

பட்டுப் புடைவை பரிசுப் போட்டி — 11 ; முடிவு!

'ஹங்கேரி' என்னும் சரியான பதிலை எழுதி பட்டுப் புடைவை பரிசு பெறுபவர்:

A. ருக்மணி,
38, நடேச முதலியார் தெரு,
வடவள்ளி,
கோயமுத்தூர் - 641 041

சின்ஹா : ஜெயபிரகாஷ் நாராயணால் துவக்கப்பட்ட ஜனதா கட்சி என்கிற காட்டாறு, நாளடைவில் வற்றிப் போய், வெறும் மணற்பாங்காகிவிட்டது. இனியும் அதில் இருந்து கொண்டு, பொதுச் சேவையில் ஈடுபடுவது பயனில்லை என்று முடிவு செய்தேன். பா.ஜ.க. தவிர, மற்ற அரசியல் கட்சிகள் எல்லாம் இந்திய அரசியல் கட்சிகளின் எண்ணிக்கையைக் கூட்டுவதைத் தவிர, வேறு எதுவும் செய்யவில்லை. பா.ஜ.க. அடல்ஜி, அத்வானிஜி போன்ற தூய்மையான தலைமை கொண்ட கட்சி. பாராளுமன்ற உறுப்பினர் என்கிற முறையில், நான் அவர்களை ஏற்கெனவே அறிந்திருந்தேன். நண்பர்கள் சிலரும் பி.ஜே.பியில் சேரலாம் என்று ஆலோசனை கூறினார்கள். நானும் பி.ஜே.பியில் சேர்ந்தேன். (யஷ்வந்த் சின்ஹாவின் பி.ஜே.பி. பிரவேசத்தை தீபாவளி பரிசு என்று வர்ணித்தார் அத்வானி!)

கேள்வி : இந்த முறை தேர்தலில் போட்டியிட்ட போது, மத்திய அமைச்சரவையில் நிதியமைச்சராவோம் என்று எதிர்பார்த்தீர்களா?

சின்ஹா : நான் ஒரு சமயத்தில், ஒரு விஷயத்தில்தான் கவனம் செலுத்த வேண்டும் என்று நினைப்பவன். எனவே, தேர்தலின் போது, வெற்றி பெறுவதற்காகத் திட்டமிட்டு உழைப்பதே என் கவனமாய் இருந்தது. வெற்றி பெற்றபின், அமைச்சர் பொறுப்பு வந்து சேர்ந்தது. ஏற்றுக் கொண்டேன்.

கேள்வி : உங்கள் பட்ஜெட்டில், அமெரிக்கா, உலக வங்கி இவற்றின் பொருளாதாரத் தடைகள் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலேயே விட்டு விட்டதாக விமர்சிக்கிறார்களே!

சின்ஹா : ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அணு குண்டுப் பரிசோதனை நடத்தியவுடன், அமெரிக்கா அறிவித்த பொருளாதாரத் தடைகளை, இப்போது அமெரிக்காவே மறுபரிசீலனை என்ற பெயரில் நீர்த்துப் போகச் செய்துவிட்டது. உலக வங்கி போன்ற அமைப்புகளும், செயல்படுத்தப்பட்டு வரும் உலக வங்கித் திட்டங்களுக்கான நிதி உதவி நிறுத்தப்பட மாட்டாது என்று அறிவித்துள்ளது. இன்று ஒரு புதிய திட்டத்துக்கு உலக வங்கி ஒப்புதல் அளித்தாலும், கடன் உதவி நிதி நமக்கு வந்து சேர, ஒரு வருடம் ஆகும் என்பது நடைமுறை. அப்படியிருக்கும் போது, பொருளாதாரத் தடைகளைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியம் என்ன? அத்தியாவசியமான மனிதத் தேவைகள் சம்பந்தப்பட்ட கடனுதவிகள் பாதிக்கப்படாது என்ற அமெரிக்கா மற்றும் இதர அமைப்புகளின் அறிவிப்பையும் நாம் கவனிக்க வேண்டும்.

கேள்வி : பெட்ரோல் விலையுயர்வு தொடர்பான குளறுபடியைத் தவிர்த்திருக்கலாமே!

சின்ஹா : பெட்ரோல் விலையை ஒரு ரூபாய் அளவுக்கு மட்டுமே உயர்த்த வேண்டும் என்பதுதான் என் எண்ணம். அதைத்தான் நான் பட்ஜெட்டிலும் அறிவித்தேன். ஆனால், அது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு விட்டதால் நாலு ரூபாய் அளவுக்கு விலையை உயர்த்தி விட்டார்கள். மறுநாள் காலை எழுந்தவுடன் நியூஸ் பேப்பரில் இந்த அறிவிக்கப்படாத விலை உயர்வு பற்றிப் பார்த்தவுடனேயே பாராளுமன்றத்துக்குப் போய், அறிவிக்கிறவரை நான் காத்திருக்காமல், காலையிலேயே சம்பந்தப்பட்டவர்களுக்கு, ஒரு ரூபாய் மட்டுமே பெட்ரோல் விலையை அதிகரிக்க உத்தரவிட்டேன்.

கேள்வி : ஆனால் யூரியா விஷயத்தில், நீங்களாகவே விலையை உயர்த்தி, மறுபடி குறைத்தீர்களே! இதைத் தவிர்த்திருக்கலாமில்லையா?

சின்ஹா : யூரியா விலையை உயர்த்தியது

பற்றி அமைச்சரவைக்குள்ளேயே பலமான எதிர்ப்பு எழுந்ததால், அதைக் குறைக்க வேண்டியதாகி விட்டது. ஆனால், பட்ஜெட்டில் விலையை, வரியை உயர்த்துவதும், அதன்பின் ஏதாவது ஒரு காரணத்துக்காக, உயர்வைக் குறைப்பது, ரத்து செய்வது என்பதெல்லாம் பாராளு மன்றத்துக்குப் புதிதில்லை. வரும் பட்ஜெட் விவாதத் தொடரின் போது, மறுபடி எதிர்க்கட்சிகள் இது பற்றி விமர்சித்தால், இதற்கு முந்தைய ஆட்சிகளின் போது, எத்தனை தடவை, என்னென்ன விஷயத்தில் இப்படி உயர்த்தி, அதன்பின் குறைத்துள்ளார்கள் என்பதைப் புள்ளி விவரங்களுடன் விளக்கப் போகிறேன்.

கேள்வி : ரூபாயின் மதிப்பு மளமளவென்று சரிந்து போய்விட்டதே! விழுந்தது விழுந்ததுதானா?

சின்ஹா : பட்ஜெட்டுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. ரூபாயின் மதிப்பு சரிவதும், மறுபடி உயர்ந்து ஸ்திரப்படு வதும் முன்னரும் நிகழ்ந்துள்ளது. ரிசர்வ் வங்கி, இப் போதைய நடப்புகளைக் கூர்ந்து கவனித்து வருகிறது. ரிசர்வ் வங்கி, ஒரு சுயாட்சி அமைப்பு என்பதால், அதன் தினசரி நடவடிக்கைகளில் அரசு தலையிடுவது சரி யில்லை. ரூபாயின் மதிப்பு மெள்ள மெள்ள உயர்ந்து கொண்டிருக்கிறது. அவசரப்பட்டு, நடவடிக்கையில் இறங்கினால், அது நமது அன்னியச் செலாவணி சேமிப் பைத்தான் பாதிக்கும் என்பதால், நிதானமாகத்தான் செயல்பட வேண்டும்.

இன்னொரு விஷயத்தையும் நீங்கள் கவனிக்க வேண்டும். டாலர் விஷயத்தில் மட்டுமே, நம் ரூபாயின் மதிப்பு சரிந்துள்ளது. ஜப்பானிய, ஜெர்மானிய கரன்ஸி களுடன் ஒப்பிடும் போது, இந்திய ரூபாயின் மதிப்பு சமீப காலமாய் அதிகரித்தே உள்ளது. அது மட்டுமில்லை, வேறு எந்த நாட்டு நாணயத்துடன் ஒப்பிட்டாலும் நமது ரூபாயின் மதிப்பு சமீப காலமாக அதிக வலுப் பெற் றுள்ளதையும் நாம் மறந்து விடக்கூடாது.

கேள்வி : உங்கள் குடும்பம் பற்றி...

சின்ஹா : ஒரு பெண். அவளுக்குத் திருமணமாகி விட்டது. மாப்பிள்ளை காட்மாண்டுவில் இந்திய அயல் உறவுத் துறையில் பணிபுரிகிறார். எனவே என் மகள், தான் பார்த்த வங்கிப் பணியை ராஜினாமா செய்துவிட்டு, கணவருடன் இருக்கிறாள். இரண்டு மகன்கள். இரண்டு பேரும் டெல்லி, ஐ.ஐ.டியில் படித்துவிட்டு, அமெரிக்கா வில் இருக்கிறார்கள்.


கேள்வி : கடைசியாக ஒரு கேள்வி: இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில், அடுத்த வருட பட்ஜெட்டை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்போம் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?

சின்ஹா : *(சிரித்தபடி)* அது பற்றி அவநம்பிக்கைப்பட யாதொரு காரணமும் இல்லையே! ●

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

படங்கள் : **ஸ்ரீஹரி**

தமிழகம் முழுவதும் ஒன்றாவது முதல் ஐந்தாவது வரை அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு இலவச பாடப்புத்தகம் வழங்குகிறது தமிழக அரசு. இது தவிர ஆறாவது முதல் எட்டாவது வரை சத்துணவு உட்கொள்ளும் மாணவ மாணவிகளுக்கும் இலவச பாடப் புத்தகங்கள் உண்டு. இதற்கான நிறுவனம் கடந்த மாதம் 19ம் தேதி வரை அச்சடிப்பதற்கான ஆர்டர்கள் கொடுத்திருப்பதாகவும் அதனால்தான் தாமதம் ஏற்படுகிறது என்றும் சொல்கிறார்கள். அடுத்து வரும் கல்வியாண்டில் எத்தனை லட்சம் மாணவ, மாணவிகளுக்குப் பாடப் புத்தகம் தேவையாக இருக்கும் என்பதைக் கணக்கிட்டு, முன்னரே அச்சடித்துத் தயாராக வைத்துக் கொள்வது ஒன்றும் கடுமையான பணி அல்ல. அப்புறம் என்ன பிரச்னை?



"ஆர்டர் கொடுத்தவுடன், புத்தகத்துக்கான காகிதம் கொடுக்கத் தாமதம் ஏற்படுகிறது. அதைத் தாமதித்துவிட்டு, புத்தகங்களை அச்சடித்துத் தர அவசரப் படுத்துவது என்ன நியாயம்" என்று கேட்கிறார் ஓர் அச்சக அதிபர். அச்சடிக்கும் ஆர்டர்கள் நாமதப்படுத்தப்படுவதால் பத்து, மற்றும்+2 வகுப்புகளுக்கான கணக்கு, தமிழ்ப் புத்தகங்கள் மார்க்கெட்டில் கிடைப்பதிலும்

கல்வித்

சிக்கல் உண்டாகியிருக்கிறது.

இலவச புத்தகங்கள் தவிர ஒன்று முதல் +2 வரை எல்லா பாடங்களுக்கும் மற்ற மாணவர்களுக்கான புத்தகங்களைத் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் அச்சடித்துக் கொடுக்கிறது. ஆனால் இந்த வருடம் பள்ளிகள் துவங்கி இரண்டு வாரங்கள் ஆகியும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படவில்லை என்று புகார்கள் வந்திருக்கின்றன. தவிர மற்ற மாணவர்களுக்கும் விற்பனைக்குப் புத்தகங்கள் கிடைப்பதில்லை என்றும் சொல்லப்படுகிறது.

இதற்குக் காரணம் பாடநூல் புத்தகங்களை அச்சடித்து விற்பனைக்கு அனுப்ப வேண்டியதும் பாடநூல் நிறுவனத்தின் பொறுப்பாகும். இலவச பாடப் புத்தகம் என அச்சிடப்பட்ட பிரதிகள், விற்பனைக்கு வந்திருப்பதாகவும் சர்ச்சை எழுந்திருக்கிறது. பாடநூல் நிறுவனம் என்னதான் செய்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள அதை அணுகினோம். பெயர் போடக் கூடாது, என்ற கண்டிஷனுடன் உயர் அதிகாரி

துறையில் சில கேள்விக் குறிகள்?

ஒருவர் நம்மிடம் பேசினார்.

"கடந்த 27 வருட காலத்தில் நடக்காத சாதனையாக இந்த வருடம் பள்ளி துவங்குவதற்கு ஒரு வாரம் முன்னரே ஒன்றேகால் கோடி புத்தகங்கள், இலவச விநியோகத்துக்காக, எல்லா மாவட்டங்களுக்கும் உதவிக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு விட்டன. உதவிக் கல்வி அதிகாரி வரை எடுத்துச் செல்வது வரைதான் நாங்கள் பொறுப்பு. அதன் பிறகு தலைமையாசிரியர்கள் உதவிக் கல்வி அதிகாரியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும். எங்களைப் பொறுத்த வரை எந்தத் தாமதமும் இல்லை. ஏதாவது பள்ளியில் தாமதம் ஆகிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால் கல்வி இலாகாவின் மூலம் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

"அதேபோல் மற்ற மாணவர்களுக்கு விற்பனைக்குப் பிரதிகள் கிடைக்கச் செய்வதிலும் பிரச்னை இல்லை. மெட்ரிகுலேஷன் மற்றும் தனியார் பள்ளிகள் தமிழ்ப் பாடத்திற்கு மட்டும் பாடநூல் நிறுவனத்தின் புத்தகங்களை அறிவிக்கின்றன. முதல் வகுப்பு தமிழ்ப் புத்தகங்கள் பதினாறரை லட்சம் அச்சடித்தோம். நமக்குத் தேவை பதின்மூன்று லட்சம்தான். தேவைக்கு அதிகமாகவே அச்சடித்துள்ளோம். அப்படியிருக்க தட்டுப்பாடு எப்படி வரும்?

"தமிழக பாடநூல் நிறுவனம் 350க்கும் மேற்பட்ட தலைப்புகளில் ஆறு கோடி புத்தகங்களை வருடா வருடம் அச்சடித்து வெளியிடுகிறது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆர்டர்கள், டெண்டர் மூலம் அச்சடித்து வழங்கப்படுகின்றன. இது ஒரு மாபெரும் பணி. ஏதேனும் பிரச்னை இருந்தால் குறிப்பிட்டுச் சொல்லுங்கள்; நடவடிக்கை எடுக்கிறோம். மற்றபடி பொத்தாம் பொதுவாகச் சொல்லாதீர்கள்" என்றார் அந்த அதிகாரி. "இலவச பிரதிகள் என்று குறிப்பிட்டு இருப்பது அடிக்கப்பட்டு, விற்பனை அலுவலர் கையெழுத்துப் போட்டுத்தான் விற்பனைக்கான பிரதிகள் அனுப்பப்படுகின்றன. இதில் எந்த முறைகேடும் நடக்க வாய்ப்பில்லை" என்றும் சொன்னார் அவர்.

பாடநூல் நிறுவனம் இப்படிச் சொன்னாலும் சிவப்பு நாடா முறையால் எழும் தாமதங்கள் பல பிரச்னைகளை உருவாக்குகிறது. விநியோகத்தில் உள்ள குளறுபடிகள் காரணமாக மாவட்டங்களில் விற்பனைக்குப் புத்தகம் கிடைப்பதிலும் சிரமம் இருக்கத்தான் செய்கிறது என்கிறார்கள் சில விற்பனையாளர்கள். அதிக விலைக்கும் விற்கிறார்கள்.

"இலவசமாகக் கொடுக்க தனியாகவும், விற்பனைக்கு என்று தனியாகவும் பாடநூல் நிறுவனம் அச்சடிக்க வேண்டியதுதானே! இலவசப் பிரதி என்பதை அடித்துவிட்டு விற்பனை அலுவலரின் கையெழுத்துடன் விற்பனைக்கு அனுப்புவதாகப் பாடநூல் நிறுவனம் சொல்கிறது. இப்படி எத்தனை லட்சம் பிரதிகளில் கையெழுத்துப் போட்டு விற்பனைக்கு அனுப்புவார்கள்? தமிழக அரசின் கல்வி இலாகாவின் சில செயல்பாடுகள் 19ம் நூற்றாண்டுத்தனமாக இருக்கின்றன. கல்வி இலாகாவை 21ம் நூற்றாண்டுக்குக் கொண்டு செல்ல வேண்டும். அப்போதுதான் வேலைகள் தாமதமில்லாமல் நடக்கும்; கல்வியும் மேம்படும் என்கிறார்கள்.

— நமது நிருபர்

'பான்'- (வெற்றிலை) இந்தியக் கலாசாரத்துடன் "inter-twine" (பின்னிப் பிணைந்த) ஆன விஷயம் என்பது எல்லோருமே அறிந்ததுதான்; ஆனால் அது 'Internet' சமாசாரமாக மாறியது எத்தனை பேருக்குத் தெரியும்?

"பான் காயோ சையான்" என்று வஹீதா ரெஹ்மான் மயக்கிய நாளிலிருந்து, "கைக்கே பான் பனாரஸ் வாலா" என்று அமிதாப் கலக்கிய காலம் வரை, 'பான்' போட்டுக் கொள்வது ஒரு பண்டைய நாகரீகம் என்ற நிலையிலிருந்து, ஒரு "அந்தஸ்து நிர்ணயி" என்ற நிலைக்குக் கொஞ்சம் கொஞ்சமாக மாறி வந்திருக்கிறது.

'பானி'ன் குணம், மணம், சுவை, விலை என்பதுடன், அது எங்கிருந்து தருவிக்கப்படுகிறது, யாருடைய கடையிலிருந்து 'மார்கெட்' செய்யப்படுகிறது என்பன போன்ற புள்ளி விவரங்களின் அடிப்படையில்தான், ஒரு மனிதனின் "ஸோஷியல் ஸ்டேட்டஸ்" எடை போடப்படும் என்கிற அளவுக்கு இந்தப் 'பான்' பித்து, தலைக்கேறியிருக்கிறது. இந்தப் பித்தத்தின் புத்தம் புது வடிவம்தான் இண்டர்-நெட் விவகாரம்.

இந்தியாவிலேயே, சொந்த "வெப்-ஸைட்" வைத்திருக்கும் முதல் பான் வாலா- 'ஹேய்... எங்கள் மும்பைவாலா" என்று மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு சொல்லலாம்!

"முச்சட் (மீசைக்காரர்) பான் பண்டார்"- மும்பையின் கொம்பு முளைத்த பான் கடைகளுள் ஒன்று; இண்டு இடுக்குகளிலும் மூலை முடுக்குகளிலும் பான் கடைகள் விரவியிருந்தாலும், "ஸ்டார்" ஸ்டேட்டஸ், ப்ரீச் காண்டி- வார்டன் ரோட் சந்திப்பிலுள்ள இந்தக் கடைக்கும், சர்ச்கேட்டிலுள்ள ஐந்து நட்சத்திர ஓட்டலுக்கெதிரிலுள்ள மற்றொன்றுக்கும், மலாடிலுள்ள பிறிதொன்றுக்கும்தான்!

முச்சடின் பரம விசிறியான விவேக் பார்கவா என்ற வாடிக்கையாளர், தம் 'பான்' குருவுக்கு அன்புக் காணிக்கையாக ஒரு வெப் சைட்டையே அர்ப்பணித்திருக்கிறார்-

http://www.indiawww.com/muchad!

இப்போது பான் வேண்டுமென்றால், ட்ராஃபிக் ஜாமில் இடிபட்டு, மிதிபட்டு கசங்கி, நசுங்கி, முச்சடின் கடையில் முக்கால் மணி நேரம் தவம் கிடக்க வேண்டுமென்பதில்லை-

கம்ப்யூட்டர் "mouse"ஐக் 'க்ளிக்'கினால் போதும்! ஆர்டரைக் கொடுத்துவிட்டு ஹாய்யாக இருக்கலாம்!

சாதாரணமாகவே, இந்தக் கடைகளைப் பார்த்தால், குட்டிப் பான் கடைகளிலுள்ள கூட்டமிருக்காது! ஆனாலும் கடையில் சிலர் படு பிஸியாக 'பான்' தயாரித்துக் கொண்டேயிருப்பார்கள்! எல்லாமே ஃபோனில் வரும் 'ஆர்டர்'களுக்காகத்தான்! திருமணம், பார்ட்டி, விழாக்கள் என்றால் இவர்களுக்கு குஷிதான்! தவிரவும் அரசியல், கலை, நிர்வாகம் போன்ற பிரிவிலிருக்கும் சில பல பிரபலங்கள் இவரது நிரந்தர வாடிக்கையாளர்கள்.

ஆளுக்குத் தகுந்த மாதிரி பான்;

அந்தஸ்தை

ஐந்திலிருந்து ஐந்நூறு வரை அதற்கு ஒரு விலை!

மகளிருக்கு மகாய்-மீட்டா போன்ற இனிப்பு வகை; 'குடிமகன்' இமேஜ் தெரியாமல், புனிதனாக வீட்டிற்குத் திரும்ப நினைக்கும் இளசுகளுக்கு 'மாவா'வகை; திருமணமாகாதவர்களுக்கு 'கல்கத்தா சாதா' போன்ற சாதாரணவகை; திருமணமானவர்களுக்கு 'பலாஸ்-மடாட்' போன்ற வயாகரா வகை என்று விதவிதமான வகைகள்.

கடைசி ரகம் ஒரு கிரிக்கெட் வீரரின் ஃபேவரிட் என்று கிசுகிசு பாணியில் பெயரை வெளியிடாமல் கூறும் முச்சட், பல விஷயங்களை கிசுகிசுப்பாகவே வைத்திருக்கிறார்-

இவரது வருவாய் பற்றி இன்கம் டாக்ஸ் அதிகாரிகள் மோப்பம் பிடித்திருக்கிறார்களா என்ற விவரம்,



கிராமத்திலிருந்து இருபது வருடங்களுக்கு முன்பு பிழைப்புத்தேடி மும்பை வந்தபோது, காய்கறிக் கடையைத்தான் ஆரம்பித்தார். 'பானு'க்கு இருந்த 'டிமாண்டை'க் கணித்து, 'ட்ராக்' மாறினார். அவருக்குப் பிறகு, அவரது நான்கு மகன்களான 'ஜூனியர் முச்சட்கள்' வியாபாரத்தை விஸ்தரித்தனர். மாற்றி மாற்றி அண்ணன், தம்பியர் கடையைக் கவனிக்கிறார்கள்.

நிர்ணயிக்கும் 'பான்!'

இவரைச் சுற்றியிருக்கும் பளபளப்பான ஆயிரத்தெட்டு டப்பாக்களில் என்ன வைத்திருக்கிறார் என்ற ரகசியம், இவரது 'ஸ்பெஷல் பான்'களை எங்கிருந்து வரவழைக்கிறார் என்ற உண்மை, மீசையை வளர்க்க என்ன உபயோகிக்கிறார் என்ற தகவல்... ஊஹூம்! மூச்!

எந்த ஒற்றர்களும் ஊடுருவ முடியாதபடி, இவரது பிஸினஸ் கோட்டை, சுற்றி அகழி வெட்டாத குறையாக படு பாதுகாப்பாக இருப்பதற்கு முக்கிய காரணம், இது ஒரு குடும்ப பிஸினஸ் என்பதுதான். நாலு அண்ணன் தம்பிகள், அவர்களுடைய பிள்ளைகள் என்று போதுமான கரங்கள் வியாபாரத்துக்குக் கை கொடுக்கின்றன.

பிஸினஸுக்கு வித்திட்டவர், யு.பி. பையா இனத்தைச் சார்ந்த ஷியாம் சரண்! காதுவரை மீசை நீண்டிருந்த இவர்தான் மூத்த முச்சட்! அலஹாபாத்திலுள்ள திவாரிபூர் மனைவி, மக்களெல்லாம் வழக்கம்போல் கிராமத்திலேயே...!

தற்சமயம் கடையை கவனிப்பவர் கிருபா சங்கர் திவாரி- அடுத்த தலைமுறை இளைஞர்கள் யாரும் மீசை வளர்க்கவில்லை- மீசையுள்ள மச்சானின் மீது பெண்களுக்கு ஆசை குறைச்சலாம்! வேட்டி ஜிப்பாவிலிருந்து, ஷார்ட்ஸ், ஷர்ட்டுக்கு மாறியுள்ளார்கள். திருமணத்துக்குப் பின் தான் வேட்டியும் மீசையுமாம்!

"எங்கள் தொழில் ரகசியமே, இலை தழைக்கும், சுண்ணாம்பு பாக்குக்குமுள்ள உறவை அளவோடு உறுதிப்படுத்துவதில்தான் ஒளிந்திருக்கிறது. வெற்றியின் ரகசியம், நிஜமான டாக்ஸி டிரைவரிலிருந்து, டாக்ஸி டிரைவராக நடிக்கும் டாப் ஸ்டார் வரை எல்லோரையும் நான் வணங்கும் இறைவனுக்குச் சமமாக மதிப்பது!" என்று இந்த ரகசியத்தை மட்டும் அம்பலமாக்குகிறார்!

— ஜெ. ராஜ்

அறிவுகெட்ட முண்டமேன்னு டைரக்டா திட்டலையே ஒழிய, பிடிச்சி கிழிகிழின்னு கிழிச்சிட்டார் மதுரவாயல் தா. பகவதி- என்னை.

எதுக்கு? வெண்பா formல ஒரு கவிதையோ, செய்யுளோ, பாட்டோ, பினாத்தலோ எழுதி, ரீடர்ஸையும் ட்ரை பண்ணுங்கன்னு சொல்லியிருந்தேனில்லை? அதுக்கு.

இலக்கணம் இல்லாம எதுக்கு வெண்பா? இப்படியெல்லாம் தரமான விஷத்தை சீப் ஆக்கிட்டா புகழேந்தி, அவ்வையார், காளமேகத்துக்கெல்லாம் என்ன மதிப்பு?ன்னு தொடங்கி, ஒரு ஃபுல்ஸ்கேப் முழுக்க 'அன்பொழுக'த் திட்டியிருக்கார். கொசுறா ஒரு இலக்கண சுத்த(மான்னு யாராவது மாங்கா, தேங்கா கணக்குப் பார்த்துச் சொல்லுங்க.) வெண்பா வேற!

வெண்பா எழுத
விரும்பும் சுமி ஓர்
உண்மை நிலையை
உணர்ந்திடுக -அண்மையில்
கல்வியில் தந்துள்ள காதற்ற
ஊசியினால்
இல்லையொரு பயனும்
இனி.

இலக்கணம் முக்கியமில்லைன்னு நான் கொடி பிடிக்கலை. லைட்டா, ஹ்யூமரஸா ஒரு விஷயத்தை சிம்பிளா கன்வே பண்ண, அந்த form. கலபமா ஒத்து வருதுன்னு சொன்னேன். மோர் ஓவர் முதல்ல form பிடிபட்டுடுச்சின்னா, பின்னால இலக்கணம் கத்துக்க சான்ஸ் கிடைச்சா, விருப்பமிருந்தா கத்துக்கலாமே?

சில விஷயங்கள்ல ரொம்ப Rigidஆ இருக்கறதால்தான் வெண்பா, 'கலிப்பா'ன்னா பசங்க கிளாஸை கட் அடிச்சிட்டு சிம்ரன் படம் பார்க்கப் போயிடறாங்க.

பை தி வே- நம்ம ரசிகர் மன்ற உறுப்பினர்கள் ரெண்டு பேர் அனுப்பியிருந்த இலக்கணமில்லாத வெண்பாக்களை ('வெறும் பா'ன்னு வெச்சுக்கலாமா மிஸ்டர் பகவதி?) இங்கே தரேன்:

- மீனா சங்கவி நக்மா சாக்ஷியுடன்
தேனாய் குஷ்பு தேவயானியும்- வாநிலவாய்
ரம்பா சிம்ரன் ரஸிகா இருக்கையிலே
ஏம்பா கவலை இனி?

(ஸ்ரீரங்கம் ஸ்ரீனிவாசன்)

- காசின்றி ஹோட்டலுக்குப் போனாலும் தோசையுடன்
பாஸந்தி, பரோட்டாவும் சாப்பிடலாம்-ஆனாலும்
காலாட்டிக் கொண்டு கணவான் போல் காட்டாதே
மாவட்ட வேண்டும், விதி!

(திருப்பரங்குன்றம் டி.கே. சுப்பிரமணியம்)

கடவுளே, கடவுளே,

என் ஃப்ரெண்ட் ஒருத்தி ரொம்ப கம்பல் பண்ணி ஒரு உடல்நலக் கருத்தரங்குக்கு இழுத்துட்டுப் போனா, போனவாரம். ஸ்டார் ஹோட்டல் ஏஸி ரூம்ல, பெண்கள் உடல்நலம் பற்றிப் பேச, பிரபலமான லேடி டாக்டர்ஸெல்லாம் வந்திருந்தாங்க. கருத்தரங்கம் ஆரம்பிக்கறதுக்கு முன்னால 'லைட்'டா(?) ஒரு டிபன். ரெண்டு சமோஸா, கிச்சடி, பட்டர் நான், பனீர்மசாலா, ஐஸ் க்ரீம், காப்பி. போறாது?

"பெண்களுக்கு வர்ற பெரும்பாலான உடல் நலக் குறைபாடுகளுக்குக் காரணம் கொழுப்புச் சத்து மிக்க உணவை நிறைய சாப்பிடறதுதான்"னு

ஆரம்பிச்சாங்க டாக்டர். பட்டர் நான், பனீரை கொஞ்ச நேரம் முன்னாடி தான் அவங்களும் ஒரு வெட்டு வெட்டியிருந்தாங்க!

கடவுளே, கடவுளே, கடவுளே (ரஜினி ஸ்டைலில் நூற்றெட்டு முறை சொல்லவும்.)

இன்டர்நெட்ல ஒரு விவகாரம் கிடைச்சுது. சாதாரணமா நாம உபயோகிக்கற 'ஷாம்பூ'க்களில் 'SLS' ன்னு(Sodium Laureth Sulphate) ஒரு பொருள் கலக்கறாங்களாம்– நல்லா நுரை வர்றதுக்காக.

"இந்த 'SLS' மகா பேஜார் பிடிச்ச விஷயம்: கார் வாஷ் பண்றதுக்கும் பெரிய பெரிய ஓர்க் ஷாப்களில் தரை க்ளீன் பண்றதுக்கும் இதை யூஸ் பண்றாங்க. இதை ஷாம்பூக்களில் மட்டுமில்லாம சில டூத் பேஸ்டுகள்லேயும் நல்லா நுரை வர்றதுக்காக சேர்க்கறாங்க. ஸைன்டிஃபிக்கா, இதனால கேன்ஸர் வர சான்ஸ் இருக்குன்னும் சொல்றாங்க. ஒரு ஷாம்பு கம்பெனில இது பத்திக் கேட்டேன். 'ஆமா,

கடவுளே...

சேர்க்கறோம். வேற வழி?'ன்னு பதில் சொல்றாங்க. எனக்கு 'பக்'குனு ஆகிப்போச்சு."ன்னு கங்கா ராமநாதன் 'நெட்'ல பத்தவெச்சிருக்காங்க.

கன்ஸ்யூமர் நலன் விரும்பிகள் அமைப்புங்கதான் இது பத்திக் கொஞ்சம் தீவிரமா விசாரிக்கணும். டைம் பீயிங், ஷாம்புவோ, பேஸ்டோ வாங்கும்போது 'SLS'கன்டென்ட் இருக்கான்னு பார்த்து, அதைத் தவிர்த்துடறது பெட்டர். (நான் சீயக்காய்க்கும் வேப்பங்குச்சிக்கும் மாறிடறதா முடிவு பண்ணிட்டேம்பா!)

பாகிஸ்தான், அமெரிக்காட்டேருந்து ஒரு போர் விமானம் வாங்கிச்சி. அமெரிக்க பைலட் ஒருத்தர் பாக் வந்து, அந்தப் போர் விமானத்தை எப்படி ஸ்டார்ட் பண்ணி மேல கொண்டு போறதுன்னு பாக் பைலட்டுக்குக் கத்துக் கொடுத்தார்.

சுமி சூப்பர் மார்க்கெட்:

இவரும் ஜோரா வண்டியக் கிளப்பி, பறந்தாரு. தென், இறங்கணுமே?

"இதை எப்படி இறக்கறதுன்னு சொல்லலையே?"ன்னு



அப்பத்தான் ஞாபகம் வந்தவரா வயர்லெஸ்ல அந்த அமெரிக்க பைலட் கிட்டக் கேட்டார்.

அதுக்கு அந்த யு.எஸ். ஆசாமியோட பதில்:

"அதைப் பத்தி நீ ஏன் கவலைப்படறே? அதை இந்தியன் பார்த்துக்குவான்!"

(இந்த ஜோக்கை அனுப்பி, சுமி ரசிகர் மன்றத்தில் புதிய உறுப்பினராகச் சேருபவர்– மேற்கு முகப்பேர் கே.கே. வெங்கடேசன்.

— சுமி

செய்திகள் வாசிப்பது சந்தியாவின் சிஷ்யர்கள்...

"**வ**ணக்கம்! இன்று காலை புதுடெல் லியில்..."

"வணக்கம்'ன்னு சொல்லிட்டு, சின்ன 'பாஸ்' கொடுங்க. அப்போது லேசா ஒரு புன்னகை. அதற்கப்புறம் 'இன்று காலை'ன்னு படிக்க ஆரம்பியுங்க.

அவர் படித்து முடித்த பின் இன்னொரு பெண்மணி வருகிறார். அமர்ந்து, படிக்க ஆரம் பிக்கும் முன்பாகவே "இரண்டு கைகளும், உடலுடன் ஒட்டின மாதிரி இருக்கட்டும்!"

மூன்றாவதாய் வரும் இளைஞர், கொடுக் கப்பட்ட தாளில் இருந்த செய்திகளை முழு வதுமாய்ப் படித்து முடிக்கிறார்.

'ரொம்ப நல்லாப் படிச்சீங்க. ஆனா, ஒரு பேப்பரில் இருப்பதைப் படிச்சு முடிச்சிட்டு, அடுத்த பேப்பருக்குப் போகிறபோது, முதல் பேப்பரை எடுத்துப் பக்கத்திலே வைக்கிறீர்கள். அது தவறு. படித்து முடித்த காகிதத்தை லேசாக, கவனம் சிதறாமல், நழுவ விட்டு விட வேண்டும். மற்றபடி உங்கள் செய்தி வாசிப்பு வெரிகுட்!"

அடுத்து வரும் பெண்மணி லேசான பதற்றத்துடன் படிக்கவே, "நெர்வஸ் ஆகவே கூடாது' ரிலாக்ஸ்!" என்று அட்வைஸ்.

இப்படியெல்லாம், யார் யாருக்கு யார் சொல்லிக் கொடுக்கிறார்கள்? என்று புரியாமல் திகைக்கிறீர்களா?

பிரபல தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளரான சந்தியா ராஜகோபா லும், அவரது கணவரான ராஜகோபா லும், ஆரம்பித்துள்ள 'சந்தியா-ராஜ கோபால் அகாடமி ஃபார் நியூஸ் ரீடிங்' என்ற பயிற்சி மையத்தை ஆரம்பித்துள் ளனர். அங்கு பயிற்சி பெறுபவர்கள் நியூஸ் படிக்கிறபோது செய்யும் தவறு களைத்தான் இப்படிச் சுட்டிக் காட்டித் திருத்துகிறார்கள். இங்கு, செய்தி வாசிக்க மட் டுமின்றி, அறிவிப்புகள் செய்வது எப்படி, இணைப்புரை எழுதுவது எப்படி என்றெல் லாம்கூட பயிற்சி தரப்படுகிறது. "இந்தியாவில் வேறு எங்குமே இது போன்ற ஒரு பயிற்சி மையம் இருப்பதாய்த் தெரியவில்லை" என் கிறார் ராஜகோபால்.

"இதுபோன்ற ஒரு மையத்தைத் துவக்கும் எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது?"

"என் கணவருடைய ஐடியாதான் இது!" என்கிறார் சந்தியா. "நான் கல்யாணம் மற்றும் பொது நிகழ்ச்சிகளுக்குப் போகிறபோது, பலரும் என்னிடம் வந்து, 'நான் நியூஸ் ரீடர் ஆக விரும் புகிறேன். அதற்கு என்ன செய்ய வேண்டும்? என்னென்ன தகுதி இருக்க வேண்டும்?' என்று ஆர்வமுடன் விசாரிப்பார்கள். சிலர், 'நியூஸ் படிப்பதற்கு நானாகவே பிராக்டீஸ் பண்ணிக் கொண்டிருக்கிறேன். உங்களிடம் ஒரு தடவை படித்துக் காட்டினால், என்னென்ன தவறுகள் செய்கிறேன்? அவற்றை எப்படி நிவர்த்திப்பது? என்று ஆலோசனை வழங்க இயலுமா? என்று கேட்பார்கள். தூர்தர்ஷனில்கூட, செய்தி வாசிக் கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை, சுமார் இரண்டு மாத காலம், செய்தி வாசிக்கும் நேரத்தில் நிலையத்துக்கு வரவழைத்து, செய்தி வாசிப்பதை நேரடியாக கவனிக்கிற பயிற்சி தருவார்கள். இவையெல்லாவற்றுக்கும் மேலாக, தனியார் சானல்களில் செய்தி ஒளிபரப்பு ஆரம்பமானதன் காரணமாக நியூஸ் ரீடர்களுக்கான தேவை அதிகரித்து விட்டது. இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டுதான் என் கணவர் இப்படி ஒரு பயிற்சி மையத்தை

• பயிற்சி வகுப்பில்...



ஆரம்பிக்க முன் வந்தார்"

"செய்தி வாசிக்க என்ன தகுதி வேண்டும்?"

"ஆங்கிலத்தில் சொன்னால் 'Pleasing personality' வேண்டும். அழகாக இருக்க வேண்டும் என்பது இதன் அர்த்தமில்லை. எப்படிப்பட்டவராய்' இருந்தாலும், அவர் தன்னை அப்படி மாற்றிக் கொள்ள முடியும். தமிழை தமிழாய் உச்சரிக்கத் தெரிய வேண்டும். குரலில் ஏற்ற, இறக்கங்களை தேவைக்கேற்ப சரியாக காட்டத் தெரிந்திருக்க வேண்டும். அழகாகவும் எளிமையாகவும் உடுத்துவதற்கான உணர்வு இயல்பாய் இருக்க வேண்டும். அதனால்தான் இந்தப் பயிற்சியில் மேக்கப், உடை பற்றிய ஆலோசனைகள் கூட வழங்குகிறோம்.



"என்னென்னவெல்லாம் இங்கே சொல்லித் தருகிறீர்கள்?"

"டீ.வி நிகழ்ச்சிகளின் தொகுப்பாளராக ஆக வேண்டும், அறிவிப்பாளர், செய்தி வாசிப்பவர் என்று பலவித ஆர்வம் கொண்டவர்கள் வருகிறார்கள். இவர்களில் பலர் டீ.வியில் ஒருமுறைகூட தோன்றிய அனுபவம் இல்லாதவர்கள்; சிலர் செய்தி வாசிப்பவர் பணிக்கு விண்ணப்பித்து, தேர்வாகாதவர்கள், இரண்டொருவர், ஒரு சில நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய அனுபவம் உடையவர்கள். யாராக இருந்தாலும் 'நம்மால் முடியும்' என்கிற தன்னம்பிக்கைதான் அடிப்படைத் தேவை' இங்கே தன்னம்பிக்கை டானிக் வழங்கும் வகுப்புகள் நடத்துகிறோம். செய்தி வாசிக்க, தொகுப்புரை, அறிவிப்புகள் செய்வதில் பயிற்சி உண்டு. நிஜமாகவே கேமரா வைத்து, அதன் முன் செய்தி வாசிக்கவும் செய்கிறோம். அப்போது அவர்கள் செய்கிற தவறுகளை நுணுக்கமாய் கவனித்துத் திருத்துகிறோம். வார இறுதி நாட்களில் பன்னிரெண்டு வகுப்புகள் கொண்டது இந்தப் பயிற்சி. முதல் பாட்ச்சில் பன்னிரெண்டு பேர் இருந்தார்கள். அடுத்ததில் பதினாறு பேர். இப்போது தொடங்கியுள்ள மூன்றாவது பாட்ச்சில் பதினைந்து பேர்!"

"இங்கே பயிற்சி பெறுகிறவர்கள் அனைவருமே செய்தி வாசிப்பாளராவது சாத்தியமா?"

"பயிற்சியின் கடைசி வகுப்பைத் தொடர்ந்து மாணவ, மாணவிகள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் ஆலோசனைகள் வழங்குகிறோம். அப்போது, அவரவருக்கு என்ன லைனில் விருப்பம், பயிற்சிக்குப் பின் அவரது திறமை இவற்றின் அடிப்படையில், செய்தி வாசிப்பு, தொகுப்புரை அறிவிப்பு செய்தல், ஸ்கிரிப்ட் எழுதுதல் என எதில் பிரகாசிக்க சாத்தியமுள்ளதோ அதை எடுத்துச் சொல்லி, ஆலோசனை தருகிறோம்!"



• சந்தியா - ராஜகோபால்...

இப்போது செய்தி வாசித்துக் கொண்டிருக்கிறவர்களைக்கூட இது போன்ற பயிற்சிக்கு அனுப்ப வேண்டியது ரொம்ப அவசியம் என்று தோன்றுகிறது என்று நீங்கள் முணுமுணுக்கிறீர்களா! உங்கள் முணுமுணுப்பின் சப்தம் தூர்தர்ஷன் வரை போய் விழட்டும்!

— எம். பாரதி

அட்டை வண்ணப்படமும் படங்களும்: **யோகா**

ப்ரியமுடன்



'டர்' படத்தில் ஷாருக்கான் ஏற்றது போன்ற (ஆன்ட்டி) ஹீரோ பாத்திரத்தை விஜய்க்கு அளித்திருக்கிறார்கள்! அலட்சியமாகவே மின்னுகிறார்!

விபத்தில் அடிபட்ட கௌசல்யாவுக்கு ரத்தம் கொடுத்து உதவுகிறார் விஜய்யின் நண்பன் வசந்தகுமார். ஜெய்ப்பூரிலிருந்து சென்னை வரும் கௌசல்யா நேரில் பாராத அவருக்கு நன்றி சொல்ல முயல, ஏற்கெனவே கௌசல்யா மீது காதலை வளர்த்துக் கொண்டிருக்கும் விஜய், தான் தான் வசந்தகுமார் என்று பொய் கூற, இவரும் நாளடைவில் விஜய்யைக் காதலிக்கத் தொடங்குகிறார். விஷயமறிந்ததும் கௌசல்யாவிடம் உண்மையைக் கூறப் போவதாகக் கிளம்பும் அவரது அப்பா ஜெய்கணேஷும், நிஜ வசந்தகுமாரும் இறக்கின்றனர். வெறித்தனமாகக் காதலிக்கும் விஜய்யைக் கடைசியில் போலீஸ் வளைக்க, குண்டடிபட்டு அவர் இறக்கிறார்.

கதை, திரைக்கதை இரண்டிலும் மிக சிரத்தை காட்டப்பட்டிருப்பது புரிகிறது. புலனாய்வு செய்யும் சி.பி.ஐ. அதிகாரியாக நாசர். அவருக்கு ஓர் அசட்டு உதவியாளர். இந்த அளவுக்கு சொத்தையான ரோலில் நாசர் நடிப்பாரா (உண்மையில் அவர் தோன்றியிருக்கிறார், அவ்வளவே) என்ற கேள்வி எழுகிறது!

காதலியின் அப்பாவிடம், நண்பனிடம், க்ளைமாக்ஸில் காதலியிடம் என்று மூன்று முறை விஜய் தன்னிலை விளக்கங்கள் கொடுக்க வேண்டிய கட்டாயம்! அந்த இடங்களில் அதிக போரடிக்காமல் இருக்க பட்டுக்கோட்டை பிரபாகரின் வசனங்கள் நறுக்காகவும், கொஞ்சம் கவிதைத்தனத்துடனும் கைகொடுக்கின்றன. "நீ அடிச்சது வலிக்கலே. ஆனா அடிச்சது நீன்றதுதான் வலிக்குது."

"நீ ஒரு ஃப்ராட். என் உயிர் உள்ள வரை உனக்கும் என் மகளுக்கும் கல்யாணம் நடக்காது" என்று ஜெய்கணேஷ் கூறியதும், சடாரென்று வெறியில் விஜய் அவரை மேலேயிருந்து கீழே தள்ளிவிட்டு, "என்ன செய்யறோம்னே எனக்கு அப்போ தெரியாமப் போச்சு" என்று பிற்பாடு சமாதானம் வேறு! மிகவும் கண்மூடித்தனமான காதல் என்று வைத்துக் கொண்டாலும் அதற்கு அடுத்த காட்சியிலேயே வீடு முழுவதும் தேடிவிட்டு, "அங்கிள் எங்கே?" என்று காதலியிடம் வெகு அக்கறையாகக் (எந்த விதக் குற்றவுணர்வும் இல்லாமல்) கேட்பது அவரை ஒரு நயவஞ்சகனாக அல்லவா காட்டுகிறது!

கௌசல்யா ஸ்கோப் உள்ள ஒரு பாத்திரத்தில் வெளுத்து வாங்குகிறார். ஒரு ஹீரோயின், ஹீரோவை இவ்வளவு ஆக்ரோஷமாகத் தொடர்ந்து கட்டையால் விளாசுவது தமிழ்ப் படத்துக்குப் புதுசு!

பாடல்களைப் பொறுத்தவரை எல்லாம் 'கடப்பட்ட' டியூன்கள் என்பதால் தேவாவைப் பற்றிச் சொல்லுவது பாவம்! விஜய்க்கு வழக்கமான விலுக் விலுக் நடன அசைவுகள். "இந்தப் பட ஷூட்டிங்கிலே விஜய் அடி பட்டுக்கிட்டது ஸ்டண்ட் காட்சியிலா? டூயட் காட்சியிலா?" என்று சந்தேகம் எழுகிறது. ●

— ஜி.

தொலைந்து மீண்ட

தமிழ் மொழியில் மகோன்னதமான சரித்திர நாவல்களை எழுதிய பேராசிரியர் கல்கி எவ்வாறு அழியாத புகழைப் பெற்றுள்ளாரோ, அவ்வாறே பிரெஞ்சு மொழியில் பிரம்மாண்டமான சரித்திர நாவல்களையும், பிரமிக்க வைக்கும் நவீனங்களையும் எழுதி உலகப் புகழ் பெற்றவர் அலெக்ஸாந்தர் தூமா. 1852-க்கும், 1856-க்கும் இடைப்பட்ட காலத்தில் ரியூரின் நகரத்திலிருந்து வெளிவந்த பத்திரிகையொன்றில் அவர் தொடராக எழுதி வந்த "ஸவோய் ராஜ மாளிகை" (La Maison Royale de Savoie) என்ற நவீனம், 150 ஆண்டுகளுக்குப் பின்னர் சென்ற ஜூன் மாதம் பாரிஸ் நகரத்தில் முதல் தடவையாக புத்தக உருவில் வெளியாகியிருக்கிறது.

உலகப் பிரசித்தி பெற்ற ஒரு நாவலாசிரியரின் முக்கியமானதொரு நாவல் ஒன்றரை நூற்றாண்டு காலம் காணாமல் போய் விட்டதன் மர்மம் என்ன? பிரான்ஸ் தேசத்தில் நெப்போலியன் ஆட்சிக்கு வந்ததும், ஆளும் வர்க்கத்திற்கும் தூமாவுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக தூமா 1852-ல் நாடு கடத்தப்பட்டு, ரியூரின் நகரில் வாழ்ந்த காலத்தில் எழுதப்பட்ட நவீனம் இது. அவர் எழுதிய இக்கதை, 1550-க்கும் 1850-க்கும் இடைப்பட்ட காலத்தின் ஸவோய் ராஜ பரம்பரையில் நடைபெற்ற சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டது.

இச் சிறு நாடு இத்தாலியர்களுடன் பகைத்துக் கொண்டு 1860-ல் பிரான்ஸ் தேசத்துடன் தன்னை இணைத்துக் கொண்டது. தூமா இந்த ராஜ பரம்பரையின் புகழ் பாடியதை அன்றைய இத்தாலிய மன்னராலும் சரி, பிரான்ஸின் அன்றைய ஆளும் வர்க்கத்தினராலும் சரி சகிக்க முடியவில்லை! அரசியல் காரணங்களுக்காகவே இந்த நாவல் அமுக்கப்பட்டிருப்பதாக இலக்கிய விமர்சகர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள்.

கால வெள்ளத்தில் அமுங்கிப் போய்க் கிடந்த இந்த தூமா நாவலைக் கண்டு பிடித்தவர் ஆந்திரே கில்லாட் என்னும் பிரெஞ்சு சரித்திர ஆசிரியர். சென்ற ஆண்டில் ரியூரின் நகரத்திலுள்ள ஒரு பழைய புத்தகக் கடையை அலசிக் கொண்டிருந்த இந்த ஆராய்ச்சியாளருக்கு, இந்த அதிசயம் காத்துக் கிடந்தது. 150 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு வாசகர் இக் கதை வெளிவந்த "லே கான்ஸ்டிடியூஷனல்" (Le Constitutionnel) பத்திரிகையின் பிரதிகளை ஒவ்வொன்றாகச் சேர்த்து, நாவலின் நான்கு பாகங்களையும் பைண்டு செய்து, நான்கு பெரிய புத்தகங்களாக்கியிருந்தார். பாரிஸில் உள்ள தூமா மியூசியத்தின் காப்பாளர்களுக்கே இப்படி ஒரு நாவல் இருப்பது பிரமிப்பு மிக்கதாக இருந்தது.

எண்பத்திரண்டு நீண்ட நாவல்களையும் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களையும் எழுதிப் பெரும் புகழ் சேர்த்த அலெக்ஸாந்தர் தூமா, 1802-ம் ஆண்டு பிறந்தார். தமது நான்காம் வயதில் தந்தையாரை இழந்த தூமா, கல்வி கற்ற ஆண்டுகள் ஒரு சில தான். தமது பதினாறாவது வயதில், பின்னர் பிரான்ஸ் தேசத்து மன்னராக வரவிருக்கும் லூயி-பிலிப் பின் அரண்மனையில் நூல் நிலைய உதவியாளனாகச் சேர்ந்த தூமா, இரவு பகலாகப் பல்வேறு நூல்களையும் படித்தார். 1820-ம் ஆண்டிலிருந்து 1839-ம் ஆண்டுவரை-இருபது ஆண்டு காலம் பல நாடகங்களை எழுதினார். 1829-ல் அவர் எழுதிய 'ஹென்றி III' என்ற நாடகம் பாரிஸ் நகரமெங்கும் அமோக வரவேற்பைப் பெற்றது.

1839-ம் ஆண்டிலிருந்து சரித்திர நாவல்களை எழுத ஆரம்பித்தார் தூமா. பிரபலமான அவரது நாவல்கள் பத்திரிகைகளில் தொடர் கதைகளாக வெளிவந்தன. அவரது கதைகளுக்கான சரித்திர ஆதாரங்களை ஆகஸ்டி மார்க்கே என்ற சரித்திர



தூமா நாவல்

ஆசிரியர் சேகரித்துக் கொடுத்தார். பாத்திரங்களைப் படைத்து, சம்பவங்களைக் கோத்து, தமது விறுவிறுப்பான கதை சொல்லும் பாணியில் பிய்த்து வாங்கினார் தூமா.

1844–ம் ஆண்டு தூமா புகழின் உச்சியில் இருந்த காலம். பாரிஸ் நகரப் பத்திரிகைகளான "சிக்லின்", "தேபாட்ஸ் ஜேர்னல்" இரண்டும் அவரது "மூன்று துப்பாக்கி வீரர்கள்"; "மாந்தே கிறிஸ்தோவின் மன்னன்" ஆகிய இரு நெடு நாவல்களையும் ஒரே சமயத்தில் தொடர் கதைகளாக வெளியிட்டன. வாய்மை, நேர்மை, தூய்மை ஆகிய குணங்களுடன் நீதிக்கும் நேர்மைக்கும் போரிடும் போர் வீரர்களின் கதை ஒன்று- தனது குடும்பத்தைப் பூண்டோடு அழித்தவர்களைப் பழிவாங்கும் தாந்தேயின் அசாத்திய வீரம் மற்றது–பிரஞ்சு நாட்டு வாசகர்களின் சிந்தையைக் கலக்கியது. நகரத்துக்கு நகரம், கிராமத்துக்குக் கிராமம், பத்திரிகைக் கடைகளுக்கு முன்பு- பாரிஸிலிருந்து பத்திரிகை கொண்டு வரும் குதிரை வண்டிகளை எதிர்பார்த்து- வாசகர் கூட்டம் முண்டியடித்துக் கொண்டு நிற்கும். ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்பு உலகில் எந்த ஒரு எழுத்தாளனுக்கும் இப்படி ஒரு ரசிகர் கூட்டம் இருந்ததாகச் சரித்திரமே இல்லை!

தூமாவின் பெரிய பலம் அவரது கதை சொல்லும் பாணி. ஆங்கிலத்தில் வால்டர் ஸ்காட் போன்ற சரித்திர நாவலாசிரியர்கள் பல அத்தியாயங்களை சரித்திரப் பின்னணியை வர்ணிப்பதிலும், பாத்திரங்களின் குணாதியங்களை அலசுவதிலும் செலவிடுவார்கள். தூமா அப்படியல்ல. சுவாரஸ்யமான அல்லது திகில் ஏற்படுத்தக் கூடிய ஒரு சம்பவத்தில் கதை ஆரம்பமாகும். கதை நடந்து கொண்டிருக்கும்போதே அதனூடே சரித்திரப் பின்னணியும், பாத்திரங்களின் குணாதிசயங்களும் இழையோடிக் கொண்டு வரும். அடிக்கடி நிகழும் சம்பவங்கள், எதிர்பாராத திருப்பங்கள், அடுத்தது என்ன என ஆவலூட்டும் வண்ணம் அமைந்த கதையமைப்பு, பிரமிக்க வைக்கும் காட்சி வர்ணனைகளுடன் பிரம்மாண்டமானதொரு கதையைச் சொல்லும் லாகவம்–ஆகியன தூமாவை ஒரு நிகரற்ற நாவலாசிரியர் ஆக்கின. "மூன்று துப்பாக்கி வீரர்கள்", "மாந்தே கிறிஸ்தோவின் மன்னன்" இரண்டு நாவல்களும் அவை வெளிவந்த ஓர் ஆண்டு காலத்திற்குள் பத்துக்கும் மேற்பட்ட பிற மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்பட்டன.

தூமாவின் நாவல்கள் பல மொழிகளில் பிரபலமான திரைப் படங்களாகவும் வெளிவந்திருக்கின்றன. தமிழில், 'கார்ஸிக்கன் சகோதரர்கள்' அபூர்வ சகோதரர்கள் எனவும், 'மாந்தே கிறிஸ்தோவின் மன்னன்' வஞ்சிக் கோட்டை வாலிபனாகவும், 'முகமூடி மனிதன்' உத்தம புத்திரன் என்ற பெயரிலும், 'மூன்று துப்பாக்கி வீரர்கள்' விஜயபுரி வீரன் என்றும் வெளிவந்தன!

லண்டனிலிருந்து: **எஸ். தியாகராஜன்**

எப்போதும் படுத்ததும் தூங்கி விடும் எனக்கு இன்று தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தேன். தூக்கம்தான் வரு வேனா என்றது. இத்தனை நாள் எந்த பாரமும் இதயத்தை அழுத்தாததால் படுத்ததும் உறங்கி விட முடிந்தது. இன்று நெஞ்சு முழுக்க பாரம். அதோடு பயம்.

சித்ராவைப் பற்றின பயம். அவள் அப்பாவைப் பற்றின பயம். நாளை அவர்களை எதிர்கொள்ள வேண்டிவரும் போது, நான் எத்தனை கேவலமான வனாய்க் கருதப்படுவேன் என்ற பயம். இம்சை தூங்கவிடாமல் செய்தது.

எழுந்து உட்கார்ந்தேன். ஒரு சிகரெட் பிடித்தால் தேவலை என்று தோன்றியது. சிகரெட் டப்பாவை எடுத்தேன். சிகரெட் டப்பா காலியாகி இருந்தது.

சித்ரா இருந்தால் சிகரெட் பாக்கெட் டெல்லாம் வாங்கி வைக்க விடமாட்டாள். "இதென்ன கெட்ட பழக்கம். வெளியில் சிகரெட் பிடிக்கலாம். அது கூட எனக்குத் தெரியாம பிடிக்கிறதா இருக்கட்டும். வீடு - சிகரெட் பிடிக்க தடை செய்யப்பட்ட பகுதி!" என்று சிரிப்பாள். இப்படித்தான் என் விஷயத்தில் மூக்கை நுழைக்க ஆரம் பித்தாள். பிறகு ஒவ்வொரு விஷயத்திற்காக வும் கண்டிப்பு விதித்தாள். கட்டுப்பாடு விதித்தாள்.

கல்யாணமான புதிதில் மனைவி மீது இருந்த மோகத்தில் சிரித்துக் கொண்டே யாவற்றையும் சகித்துக் கொண்டேன். சில சமயம் ரொம்பவும் அத்து மீறினாள். நண்பன் ஒருவன் - அவன் நண்பன் மட்டு மல்ல, அலுவலகத்தில் எனக்கு சினி யரும் கூட. சிகரெட் ரொம்பப் பிடிப்பான்.

வீட்டுக்கு வருவான். அவன் போகும் வரை ஹால் புகை மண்டலமாய் இருக் கும். இவளுக்கு பயந்து பயந்துதான், அவன் இருக்கும்போது மட்டும் சிகரெட் பிடிப்பேன். ஒரு நாள் என்ன செய்தாள் - ஒரு பெரிய அட்டையில் 'சிகரெட் பிடிக்காமைக்கு நன்றி' என்று எழுதி ஹாலில் தொங்கவிட்டாள். வருபவர் களின் பார்வையில் அது விழும். நான் அந்த அட்டையைக் கழற்றிவிட எண்ணி இருந்தேன். ஆனால் மறந்து விட்டேன். வழக்கம் போல் நண்பன் வந்து இருந்தான்.

போர்டை பார்த்தவனின் முகம் செத்துப் போனது. ஆனாலும் சிக ரெட்டை எடுத்தான். காப்பி கொடுக்க வந்த இவள் "போர்டை பார்க்கலயா சார்?" என்று சிரித்தவாறே விஷமத் தனத்துடன் கேட்டாள். வாழைப் பழத்தில் ஊசி இறக்குவது மாதிரி என்பார்களே. இவள் அப்படித்தான். நண்பன் காப்பி கூட குடிக்காமல் கோபித்துக் கொண்டு போய்விட்டான். அதுவும் சொல்லிக் கொள்ளாமல். நாளை அவன் முகத்தில் நான் விழிக்க வேண்டாமா. எனக்குக் கோபம் வந்தது. எழுந்து சடார் என்று அறைந்தேன்.

சித்ரா இதை எதிர்பார்க்கவில்லை. கல்யாணமாகி ஆறுமாசம் ஆகி விட்டது. இதுவரை அவளைக் கடிந்து கொண்டது கூட இல்லை. அவள் அழுதவாறு உள்ளே போய்விட்டாள்.



எனக்கும் கூட வருத்தமாய்த்தான் இருந்தது. ஆனால் நண்பனின் முன்னால் அவமானப்படுத்தி விட்டாளே... என்ன செய்வது! என்னை சிகரெட் பிடிக்கக் கூடாது என்கிறாள். சரி. இவனைச் சொல்ல இவளுக்கென்ன உரிமை இருக்கிறது.

இவளது கெட்ட நேரமோ இல்லை எனது கெட்ட நேரமோ தெரியவில்லை. அடுத்த வந்த தினங்களில் இருவருக்கும் எதன் காரணத்தாலாவது மனஸ்தாபம் ஏற்பட்ட வண்ணமே இருந்தது. சொல்லி வைத்த மாதிரி. முன்னெல்லாம் யார் மீதும் யாரும் கோபித்துக் கொண்டதே கிடையாது. சில சமயம் அவளாவது என்னைக் கடிந்து கொள்வாள். நான் பேசாமல் இருந்து விடுவேன். எனக்கு அவ்வளவாய் கோபம் வராது. ஆபீஸில் கூட சொல்வார்கள், "உங்களுக்குக் கோபமே வராதா சார்" என்று.

இவள் கூட தன் அப்பா, அம்மாவிடம் சொல்லி இருக்கிறாள். "அவருக்கு கோபமே வராதும்மா... காலையில் ரொம்ப நேரமா தூங்கறார்ன்னு ஒரு நாள் ஒரு செம்பு தண்ணிய மேல ஊத்தி விட்டேன். நா தண்ணி ஊத்தினது தெரியும். இருந்தாலும் கேட்கிறார்... மழை பெய்யுதா... வீடு ஒழுகுதா?" என்று சிரிப்பாள்.

அப்படி இருந்தவன் தான் - எதனாலோ தொடர்ந்து இந்த மூன்று நாட்களாய் எதற்காகவாவது கை நீட்டி விடுகிறேன். எப்போதும் என் துணிகளை நானே தான் துவைப்பேன். சிறு வயதில் இருந்தே அப்படித் தான். அதனால் கல்யாணத்துக்குப் பின்னும் நான்தான் துவைத்துக் கொண்டேன். திடீர் என்று என் மனப்போக்கு மாறி சித்ராவை துவைக்கும்படி சொன்னேன். "இத்தனை நாள் நீங்க தானே





துவைச்சீங்க?"

"ஆமா... இனி நீதான் துவைக்கணும். தின்னுட்டு, தின்னுட்டு டீ.வி பார்த்துட்டு தூங்கறதால் உனக்குக் கொழுப்பு ஏறிடுச்சு. இந்த வேலையெல்லாம் பார்த்தா கொழுப்பாவது குறையும்!" என்றேன். நாக்கில் சனி நின்று பேசியது. பதிலுக்கு அவள் ஏதாவது பேச வேண்டும். அவளை உதைக்க வேண்டும்... இது தான் நான் எதிர்பார்த்தது! அவ்வாறே நிகழ்ந்தது. நன்றாக அடி வாங்கினாள்.

"எவனோ ஒருத்தனுக்காக என் கிட்ட சண்டை போட்டுட்டு அடிக்கிறீங்க. அவனோடவே குடும்பம் நடத்துங்க. நா வரேன்" என்று மாலையில் கிளம்பிச் சென்று விட்டாள்.

அவள் போகும்போது எனக்கொன்றும் தோன்றவில்லை. நேரம் ஆக, ஆக பயமாய் இருந்தது. பல்வேறு விதமான பயங்கள்.

முதல் பயம், இவள் ஒழுங்காய் ஊர் போய்ச் சேர வேண்டுமே என்று. அவள் கிளம்பியது மாலை ஆறரை மணிக்கு. இங்கிருந்து அவள் ஊருக்கு ஐந்தரை மணி நேரம் பஸ் பிரயாணம். ஏழு மணிக்குப் பஸ் கிளம்பினாலும், பன்னிரெண்டு மணிக்குப் போய் இறங்குவாள். நேரங்கெட்ட நேரத்தில் இறங்குவாள். பஸ் ஸ்டாண்ட்டுக்கு பக்கத்தில்தான் வீடு என்றாலும் - பன்னிரெண்டு மணிக்கு ஒரு பெண் பாதுகாப்பாய்ப் போய் விட முடியுமா?

அடுத்து இரண்டாவது பயம், ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் அர்த்த ராத்திரியில் இவள் போய் இறங்கியதும் அவர்கள் என்னமோ, ஏதோ என்று கவலையடைவார்கள். இவள் கண்களை கசக்கிக் கொண்டு நிற்பாள். 'கிளிய வளர்த்துப் பூனை கையில் கொடுத்துட்டோமே!' என்று அத்தை புலம்புவாள். அவர்களின் வீட்டில் மீனாட்சி ஆட்சி. எது ஒன்று என்றாலும் அத்தைதான் பேசுவாள், முடிவெடுப்பாள். நாளை அவளை எதிர் கொள்ள வேண்டும். எப்படி எதிர்கொள்ளப் போகிறேன்.

சித்ராவுக்கு இரண்டு தம்பியும், ஒரு தங்கையும். அவர்களுக்கு என் மீது அலாதி ப்ரியம். ஊருக்குப் போனால் என்னைச் சுற்றி நின்று கொள்வார்கள். சிரித்து சிரித்துப் பேசுவார்கள். நாளை அந்த மரியாதை இருக்காது. புழுவைப் பார்ப்பது போல் பார்ப்பார்கள்.

யோசிக்கையில் என் மீது எரிச்சலாய் உள்ளது. அவள் போனதும் சட் என்று எனது மனசு மாறி இருந்தால் கூட பஸ் ஸ்டாண்டில் அவளைச் சந்தித்து மன்னிப்புக் கேட்டு அழைத்து வந்து இருப்பேன். இப்போது ஊருக்குப் போயிருப்பாள். மணி ஒன்றாகி விட்டது. வயிறு பசித்தது.

இவளது ஞாபகத்தில் இரவு சாப்பிடவில்லை. சாப்பாடு இருக்காது என்று தோன்றியது. அவள் கிளம்பும் போது சமையலறையில் எதையோ உருட்டிக் கொண்டு இருந்தாள். நான் சாப்பிட்டாலும் சாப்பிடுவேன் என்று சாப்பாட்டைக் கொட்டி இருந்தாலும் கொட்டி இருப்பாள். அப்படிச் செய்பவள்தான். பட்டினி கிடக்கட்டுமே என்று நினைப்பவள்தான்.

வயிறு ரொம்பவும் பசிக்கவே கிச்சனுக்குள் நுழைந்தேன். எல்லாம் பாத்திரங்களும் காலியாய் இருந்தன. அடுப்பு அருகே ஹாட் பேக் இருந்தது. ஹாட் பேக்கை இங்கு ஏன் வைத்திருக்கிறாள்? திறந்தேன். சாதமும் குழம்பும் இருந்தது. கோபித்துக் கொண்டு போனாலும் - போகும்போது கூட வைத்து ஹாட் பேக்கில் வைத்துவிட்டுத்தான் போயிருக்கிறாள்.

மானசீகமாய் முதல் முறையாய் அவ

ளிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டேன். ஆனால் சாப்பிடவில்லை. எனக்கு நானே தண்டனை கொடுக்கும் விதமாய் சாப்பிடாமல் படுத்தேன். காலை அவளைப் போய் கூப்பிட வேண்டும். யார் என்ன சொன்னால் என்ன. ஒரு தடவை ஒரு தவறைச் செய்தால் மன்னிக்கக் கூடாதா? இனி இவ்வாறு நேராது. என்னை நான் சுத்தப்படுத்திக் கொண்டால், நான் ஏன் இனி யாரையும் நோகடிக்கப் போகிறேன். லேசாய் நிம்மதி தோன்ற உறக்கம் வந்தது.

விடிந்ததும் முதல் வேலையாய் குளிக்காமல் கூட கிளம்பினேன். சித்ராவை பார்த்து, அவளது புன்னகையைத் தரிசித்தால்தான் எனக்கு நிம்மதியும், சந்தோஷமும். பன்னிரெண்டு மணிக்கு மேல் பஸ் ஊரை அடைந்தது. இன்று ஞாயிற்றுக் கிழமை. எல்லோரும் வீட்டில் இருப்பார்கள்.

வீடு இருந்த தெருவைத் தொட்டு விட்டேன். பயமாய் இருந்தது. சித்ராவின் வீட்டு வாசலில் யாரோ நின்றார்கள். சித்ராவின் அப்பாதான். என்னைப் பார்த்து விட்டார் போலும். தலையைக் குனிந்து கொண்டேன். வீட்டை நெருங்கி விட்டேன். "வாங்க மாப்பிள்ளை வாங்க!" என்று உள்ளே போனார். உள்ளே போனேன். எல்லோரும் இருந்தார்கள். எழுந்தார்கள்.

சித்ராவை மட்டும் காணோம். உள்ளே இருக்கலாம். "என்ன மாப்பிள்ளை, இப்படித்தான் பண்றதா? அவதான் எங்களைப் பார்க்கணும்னு அடம் பிடிச்சா - நீங்க அனுப்பறதா? உங்களுக்கு வேலை இருந்தா அதை முடிச்சிட்டு ரெண்டு பேரும் சேர்ந்து வர வேண்டியது தானே! நேரங்கெட்ட நேரத்துல தனியா அனுப்பி... அத்தைதான் பேசினாள். "கல்யாணமாகி ஆறு மாசம் ஆச்சு. இன்னும் இவ குழந்தையா... இன்னும் இவளுக்கு அம்மா ஞாபகமா... நீங்க இவளுக்கு ரொம்பத்தான் செல்லம் கொடுக்கறீங்க!" என்று பேசிக் கொண்டு போனாள்.

சித்ரா எதுவுமே இவர்களிடம் சொல்லவில்லையா! சித்ரா உள்ளே இருந்து வந்தாள். "வாங்க" என்று சிரித்தாள்.

அந்தச் சிரிப்பு ஓங்கி என்னை அறைவது போல் இருந்தது. ●

அசத்திய செவ்வந்தி!



◆ 'செவ்வந்தி' ஆர்ப்பாட்டமில்லாத அமைதியான காதல் கதை. நேர்த்தியான எழுத்துக்களால் கிராமத்துச் சூழலைக் கண்முன் நிறுத்தியிருந்தார் பாரதி பாலன். மகனின் உள்ளுணர்வைப் படித்து விட்டாற்போல அவனது காதலுக்குத் துணை நிற்கும் அப்பாவின் பாத்திரப்படைப்பு முற்றிலும் வித்தியாசம் கலந்த நேர்த்தி. கதைக்கு கம்பீரம் தந்த பாத்திரம் அது.

பரமக்குடி. பா. உஷாராணி.

◆ அழகிய கிராமியப் பின்னணியில் ஒரு பட்டதாரி இளைஞனின் வேலையில்லாத் திண்டாட்டத்தை மிக நாசுக்காகக் காண்பித்து – தந்தையின் உறவை அதிகம் தெரிவிக்காமல் உணர்வுகளை மேம்படுத்தி நூலிழையாய்க் காதலையும் சொல்லியிருப்பது மிக அழகு!

பள்ளி பாளையம். கே. ரமேஷ்.

◆ உண்மையான அன்பும், மனிதமும் எப்படிக் காதலாக உருமாறுகிறது, முகிழ்க்கிறது என்பதை மண் வாசனை கெடாது மிகவும் நேர்த்தியாகப் படைத்திருந்தார் பாரதிபாலன். அறிமுக நாவலாசிரியர் எனும் சுவடே தெரியாதது அவரின் எழுத்துக்கோர் சிறப்பு! ஓவியர் ஸ்யாமின் கை வண்ணமும், யோகாவின் கேமரா வண்ணமும் நாவலுக்கு தனிப் பொலிவையளித்தன.

நெய்வேலி. எஸ். இந்துமதி.

◆ "செவ்வந்தி" மூலம் பாரதி பாலன் தமக்கென்று ஒரு பெரிய வாசகர் வட்டத்தை ஈர்த்து விட்டார்.

கும்பகோணம். வி. கிருஷ்ணசாமி.

◆ கதைக்கு உயிரோவியமாய் செவ்வந்தி. (புகைப்படம்) ஒவ்வொரு வாரமும் பல்வேறு முகபாவங்களில் எங்களை அசத்தி விட்டார்! அந்தப் பெண்ணுக்குப் பாராட்டுக்கள்!

முத்துப்பேட்டை. ஆ. மேரீஸ் கென்னடி.

எழுதப்படாத கதை!



'முல்லை' பத்திரிகை அலுவலகம்.

தொலைபேசி ஒலிக்க உதவி ஆசிரியர் எடுத்தார். "ஹலோ?"

"முல்லை பத்திரிகைதானே?"

"ஆமாம். நான் உதவி ஆசிரியர் பேசறேன். நீங்க?"

"சார் நான்தான் நடிகை வளர்மதி!"

வளர்மதி ஐந்து வருடங்களுக்கு முன் நம்பர் ஒன்னாக இருந்தவர். இப்போது அவ்வளவாகப் பட வாய்ப்புகள் இல்லை.

"சொல்லுங்க மேடம், என்ன விஷயம்?"

"என்னுடைய வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை, நான் இந்தத் திரையுலகில் நுழைந்த கதையை, அதற்காக நான் சந்தித்த அவமானங்கள், துன்பங்களைச் சொல்றேன். அதை உங்க பத்திரிகையில வெளியிடணும்."

"உண்மையாகவா?" என்ற உதவி ஆசிரியர் வியந்து போனார்.

"ஆமாம் சார்."

"ஆசிரியர் கொஞ்ச நேரத்துல வந்துடுவார். அவர் வந்ததும் அவரோட டிஸ்கஸ் பண்ணிட்டுச் சொல்றேன்!"

"ஓ.கே. சார்!"

வளர்மதியைப் பற்றி எவ்வளவோ கிசுகிசுக்கள் வந்துள்ளன. இப்போது அவள் கதையைச் சொன்னால் அதில் பல விஐபிக்கள் மாட்டுவார்கள். இதைத் தொடராக வெளியிட்டால் பத்திரிகையின் விற்பனை உயரும்!

உதவி ஆசிரியர் மனம் குதூகலித்துக் கொண்டிருக்க, அரை மணி நேரத்தில் ஆசிரியர் வந்தார்.

"சார் ஒரு சந்தோஷமான விஷயம்" என்று தொடங்கியவர் முழுவதையும் சொன்னார்.

பொறுமையாகக் கேட்டுக் கொண்ட ஆசிரியர், வளர்மதிக்கு போன் செய்தார்.

"ஹலோ வளர்மதி மேடம் இருக்காங்களா?"

"பேசறேன்."

"நீங்கதானா! நான் முல்லை பத்திரிகை ஆசிரியர். என்னோட உதவி ஆசிரியர் விஷயத்தைச் சொன்னார். ஸாரி மேடம். உங்க கதையை வெளியிட விருப்பமில்லை."

கேட்டுக் கொண்டிருந்த உதவி ஆசிரியர் திடுக்கிட்டார்.

"நீங்க சொல்றது சரி மேடம். உங்க கதையை வெளியிடறது மூலம் பல பேரின் முகமூடி கிழிபடும்தான். ஆனா கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. ஏற்கெனவே மக்கள் மத்தியில் நடிகை என்றால் ஒரு தவறான அபிப்ராயம் இருக்கு. இப்ப உங்க கதையை வெளியிடறது மூலமா அது மேலும் வலுப்படும். எத்தனையோ நடிகைகள் இப்பவும் ஒழுக்கமா இருக்காங்க. இந்தக் கதையைப் படிக்கறவங்களுக்கு ஒழுக்கமான நடிகை மீதும் தவறான கண்ணோட்டம்தான் விழும். இது தேவையா?"

எதிர்முனையில் நீண்ட நேரம் மௌனம். பிறகு, "ஸாரி சார், ஏதோ ஒரு விரக்தியில் இப்படி ஒரு முடிவை எடுத்துட்டேன். அது தவறுன்னு புரியுது. என் அவலம் என்னோடே போகட்டும்!" என்ற எதிர்முனை வைக்கப்பட்டது.


ஆசிரியர் நிமிர்ந்து உதவி ஆசிரியரை நோக்கினார்.

"சார் நீங்க எடுத்த முடிவு..."

"ரொம்ப சரி. வளர்மதி கதையை வெளியிடறதால நம்ம பத்திரிகையோட விற்பனை அதிகரிக்கும்தான். ஆனா அது எத்தனை பேர் மனதில் விரசத்தையும் அந்தத் துறைக்கு வர நினைக்கிறவங்களுக்குப் பயத்தையும் ஏற்படுத்தும்ன்னு யோசிச்சுப் பாருங்க."

"உண்மைதான் சார்" என்றார் உதவி ஆசிரியர்.

— ஆரணி யுவராஜ்



ஐம்பத்தாறாம் அத்தியாயம்

அந்தப்புர சம்பவம்

பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் காஞ்சியில் மகேந்திர பல்லவ சக்கரவர்த்தி அரசு புரிந்த காலத்தில் நாடெங்கும் மகா பாரதக் கதையைப் படிப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார். பௌத்த சமண மதங்களின் பிரசாரத்தினால் மக்கள் சாதுக்களாகப் போயிருந்த தமிழ்நாட்டில் மீண்டும் வீர உணர்ச்சி தளிர்த்துப் பரவ வேண்டும் என்பதற்காக அந்த ஏற்பாடு செய்தார். பாரதக் கதை படிப்பதற்கென்றே பல ஊர்களில் பாரத மண்டபங்கள் கட்டினார். அவர் தொடங்கிய ஏற்பாடு இன்னமும் தொண்டை மண்டலத்தில் தடைப்படாமல் நடந்து வந்தது. இரவில் மக்கள் மண்டபங்களிலோ திறந்த வெளியிலோ கூடிப் பாரதக் கதை கேட்டார்கள். பாரதப் பெருங் கதையையும் பாரதத்திலுள்ள கிளைக் கதைகளையும் பாட்டிலும் பண்ணிலும் வசனத்திலும் அமைத்து வீராவேசத்துடன் சொல்லக் கூடிய பாடினிகள் பலர் தோன்றினார்கள்.

அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை சென்றிருந்தபோது மணிபுரியை அடுத்த வனத்தில் மணிபுரி



கல்கி கலெக்ஷன்

அமரர் கல்கி

ராஜகுமாரியான சித்ராங்கியைக் கண்டான். இருவரும் காதல் கொண்டார்கள். சித்ராங்கிக்கு அரவான் என்னும் அருமைப் புதல்வன் பிறந்தான். மலைநாட்டுக் கோமகளுக்கு அர்ச்சுனனால் பிறந்த மகனாதலால் அரவான் மகா வீரனாயிருந்தான். பாரத யுத்தம் நடக்கப் போகிறது என்று அறிந்து அவனும் பாண்டவர் படையில் சேர வந்து சேர்ந்தான். போர் தொடங்குவதற்கு முன்னால் சகல இலட்சணங்களும் பொருந்திய மகா வீரனான இளைஞன் ஒருவனைக் களப்பலி கொடுக்க வேண்டும் என்ற பேச்சு வந்த போது, "இதோ நான் இருக்கிறேன்; என்னைக் களப்பலியாகக் கொடுங்கள்!'' என்று அரவான் முன்வந்தான். அவனைக் காட்டிலும் சிறந்த வீரன் யாரும் பாண்டவர் பக்கத்தில் இல்லாதபடியால், தானாக முன் வந்த அரவானையே பலி கொடுக்க வேண்டியதாயிற்று.

தன்னுடைய கட்சியின் வெற்றிக்காகத் தன் உயிரைத் தியாகம் செய்த வீர அரவானின் கதை தமிழ் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. துரோபதை அம்மனுக்குக் கோயில் கட்டிய இடங்களிலெல்லாம் பக்கத்தில் அரவானுக்கும் கோயில் கட்டி திருவிழா நடத்தினார்கள்.

மாமல்லபுரத்து ஐந்து ரதங்களின் அருகில் அன்றிரவு நடந்த அரவான் கதை முடிவடைந்து விட்டதாகத் தோன்றியது. "மூன்று உலகமும் உடைய சுந்தர சோழ சக்கரவர்த்தி வாழ்க!'' "கோப்பரகேசரி ஆதித்த கரிகாலர் வாழ்க!''என்று பல குரல்களில் எழுந்த கோஷங்கள் காற்றிலே மிதந்து வந்தன. கதை கேட்டுக் கொண்டிருந்தவர்கள் எழுந்து கலையத் தொடங்கினார்கள்.

"கதை முடிந்து விட்டது. மலையமான் சிறிது நேரத்தில் திரும்பி வந்து விடுவார்'' என்றான் கரிகாலன்.

"அரவான் கதை முடிந்தது; ஆனால் தாங்கள் சொல்லி வந்த கதை இன்னும் முடியவில்லையே?'' என்றான் பார்த்திபன்.

"இந்தப் பிராயத்தில் மலையமானின் மனோ திடத்தைப் பார்! இன்னமும் நடுநிசி வரையில் கண் விழித்துக் கதை கேட்கப் போகிறார் பார்!'' என்றான் கரிகாலன்.

"தொண்டு கிழமாகிற வரையில் உயிரோடிருப்பது அவ்வளவு அதிசயமான காரியமா! ஊரில் எத்தனையோ கிழவர்கள் இருக்கிறார்கள். இரவில் தூக்கம் பிடியாமல் கதை கேட்கப் போகிறார்கள்...!''

"திருக்கோவலூர் மிலாடுடையாரை அப்படிச் சாதாரணக் கிழவர்களோடு சேர்த்து விடுகிறாயா? எத்தனை போர்க்களங்களைப் பார்த்தவர் அவர்? மலையமானின் வயதில் நாம் உயிரோடிருப்போமா என்பதே சந்தேகம். இருந்தாலும், அவரைப் போல் திடமாயிருக்க மாட்டோம்.''

"அரசே! பழைய காலத்து மனிதர்கள திடமாயிருப்பதற்குக் காரணம் இருக்கிறது...''

"அது என்ன காரணம்?''

"அவர்கள் பெண்களின் மோகவலையில் சிக்குவதில்லை. கேவலம் ஓர் அர்ச்சகரின் மகளிடம் மனத்தைப் பறிகொடுத்துவிட்டு அவளை நினைத்து உருகிக் கொண்டிருப்பதில்லை. அப்படி எந்தப் பெண்ணிடமாவது மனம் சென்றால் அவள் கூந்தலைப் பற்றி இழுத்துக் கொண்டு வந்து அந்தப்புரத்தில் சேர்த்து விட்டு, வேறு வேலையைப் பார்ப்பார்கள்...!''

''பார்த்திபா! நந்தினி உண்மையில் அர்ச்சகர் வீட்டுப் பெண் அல்ல; அவளுடைய பிறப்பைக் குறித்து ஏதோ ஓர் இரகசியம் இருக்க வேண்டும்...!''

"நந்தினி யாருடைய மகளாயிருந்தால் என்ன? அர்ச்சகர் மகளாயிருந்தால் என்ன? அரசர் மகளாயிருந்தால் என்ன? அல்லது அநாதைப் பெண்ணாயிருந்தால் தான் என்ன? அந்த இன்னொரு கிழவர் பெரிய பழுவேட்டரையரைப் பாருங்கள்! எங்கேயோ வழியில் அவளைப் பார்த்தார்; உடனே இழுத்துக் கொண்டு வந்து எட்டோடு ஒன்பது என்று அந்தப்புரத்தில் அடைத்தார்...''

"நண்பா! அதை நினைத்தால் எனக்கு அதிசயமாகத்தான் இருக்கிறது...!''

"எதை நினைத்தால்? அந்தக் கிழவர் எப்படி இவளுடைய வலையில் சிக்கினார் என்பதைத்தானே?''

"இல்லை. இல்லை! ஒரு காலத்தில் என்னைக் காதலித்ததாகச் சொன்னவள், பிறகு வீர பாண்டியனைக் காதலித்து

அவன் உயிரைக் காப்பாற்ற முயன்றவள், இந்தத் தொண்டு கிழவரை மணந்து கொள்ள எவ்வாறு சம்மதித்தாள்? அதை நினைத்தால்தான் அதிசயமாயிருக்கிறது."

"எனக்கு அது ஒன்றும் அதிசயமாகத் தோன்றவில்லை, ஐயா! தங்களுடைய செயலை நினைத்தால்தான் அதிசயமாயிருக்கிறது! சோழ குலத்தின் பரம வைரியான பாண்டியன்- தோல்வியடைந்ததும் ஓடி-ஒளியும் கோழையினும் கோழையானாலும் 'வீர பாண்டியன்' என்று பெயர் சூட்டிக் கொண்டவன்- அவனுக்கு அடைக்கலம் கொடுத்து உயிர்ப்பிச்சை கேட்டவனைத் தாங்கள் சும்மா விட்டுவிட்டு வந்தீர்களே? அதை எண்ணினால்தான் அதிசயத்திலும் அதிசயமாயிருக்கிறது. ஒன்று அவனையும் அங்கேயே கத்தியால் வெட்டிப் போட்டிருக்க வேண்டும்; அதற்கு விருப்பமில்லாவிட்டால் காலையும் கையையும் சேர்த்துக் கட்டிச் சிறைப்படுத்தி வந்திருக்க வேண்டும்! இந்த இரண்டில் ஒன்று செய்யாமல் சும்மா விட்டு விட்டு வந்தீர்களே...! இப்போது எனக்குக் கூட ஞாபகம் வருகிறது, அரசே! அந்தக் குடிசையின் வாசலில் தாங்கள் வீர பாண்டியன் உடலைத் தூக்கிக் கொண்டு வந்து போட்டீர்கள். நாங்கள் அனைவரும் வெறிகொண்டவர்களைப் போல் வெற்றி முழக்கம் செய்தோம். அதற்கு நடுவில் குடிசைக்குள்ளேயிருந்து விம்மல் சத்தம் ஒன்று வந்தது. 'அது யார்?' என்று நான் கேட்டேன். 'யாரோ அர்ச்சகர் குடும்பத்துப் பெண்கள். ஏற்கெனவே அவர்கள் பீதியடைந்து கதிகலங்கிப் போயிருக்கிறார்கள். நீங்கள் யாரும் உள்ளே போக வேண்டாம்!'' என்றீர்கள். வெற்றி வெறியில் இருந்த நாங்களும் அதைப் பொருட்படுத்தவில்லை. உடனே எல்லோருமாக வீர பாண்டியனுடைய தலையை எடுத்துக் கொண்டு கிளம்பினோம். தாங்களும் எங்களுடன் வந்தீர்கள். ஆனால் எங்கள் களிப்பிலும் கொண்டாட்டத்திலும் அவ்வளவாகத் தாங்கள் கலந்து கொள்ளவில்லை. உற்சாகம் குன்றிக் காணப்பட்டீர்கள். நான்



காரணம் கேட்டேன். தாங்கள் ஏதோ சமாதானம் சொன்னீர்கள். தங்களுக்கு ஏதேனும் பலமான காயம் பட்டிருக்குமோ என்று நான் சந்தேகித்துக் கேட்டது கூட எனக்கு இப்போது ஞாபகம் வருகிறது!" என்றான் பார்த்திபேந்திரன்.

"என் உடம்பில் ஒன்றும் காயம் படவில்லை, பார்த்திபா! உள்ளத்தில் என்றும் ஆறாத காயம் பட்டு விட்டது. வீர பாண்டியன் படுத்துக் கிடந்த கட்டிலுக்கு முன்னால் வந்து அவள் கைகூப்பி என்னிடம் உயிர்ப் பிச்சை கேட்ட காட்சி என் மனத்தை விட்டு அகலவில்லை. 'ஐயோ! அவள் கேட்டதைக் கொடுக்காமல் போய் விட்டோமே!' என்று என் மனம் பதை பதைத்தது. என் உயிரைக் கொடுப்பதின் மூலம் வீர பாண்டியனை உயிர்ப்பித்து அவளிடம் சேர்க்க முடியுமானால் அப்படியே நான் செய்திருப்பேன். இது முடியாதபடியால் என்னை நானே நொந்து கொண்டேன். பார்த்திபா! நம்முடைய வல்லமைகளைப் பற்றி நாம் எவ்வளவோ நினைத்துக் கொள்கிறோம். நம்மால் ஆகாத காரியம் ஒன்றுமேயில்லை என்று கருதி இறுமாப்பு அடைகிறோம். 'அரசர்களிடம் மகா விஷ்ணுவின் அம்சம் இருக்கிறது' என்று ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்திருப்பதைக் கேட்டு விட்டு, அதைக் கூட உண்மையென்று நம்பி விடுகிறோம். ஆனால், உடலை விட்டுப் பிரிந்து போன ஆவியைத் திரும்பக் கொண்டு வரும் வல்லமை நமக்கு உண்டா? அரச குலத்தில் பிறந்த யாருக்காவது இருந்திருக்கிறதா? நம்மால் உயிரை வாங்கத்தான் முடியும்; ஆனால் உயிரைக் கொடுக்கும் சக்தி மனிதர்களாய்ப் பிறந்த யாருக்கும் இல்லை...!"

"அப்படி இல்லாமலிருப்பதே மிக நல்லது. அந்த வல்லமை தங்களுக்கு இருந்திருந்தால், எவ்வளவு தவறான காரியம் நடந்து போயிருக்கும்? பாண்டியனுக்கு மறுபடியும் உயிரைக் கொடுத்திருப்பீர்கள். அவன் மீண்டும் எங்கேயாவது மலைப் பொந்தில் போய் ஒளிந்திருப்பான். பாண்டிய நாட்டு யுத்தம் ஒருவேளை இன்னும் நடந்து கொண்டிருக்கும்! இவ்வளவும் ஒரு பெண்ணின் பொய்க் கண்ணீருக்காக!" என்றான் பார்த்திபேந்திரன்.

"பல்லவா! நீ பெண் குலத்தை வெறுக்கும் துர்ப்பாக்கியசாலி! காதல் என்றால் இன்னதென்று நீ அறிய மாட்டாய்! அதனாலேயே இவ்விதம் பேசுகிறாய்!"

"ஆம்; நான் எந்தப் பெண்ணுடைய கண் வலையிலும் சிக்கியதில்லைதான். ஆனால் தங்கள் அந்தரங்கத்துக்குரிய நண்பன் வந்தியத்தேவன் மஞ்சள் பூசிய முகம் எதைக் கண்டாலும் மயங்கிப் பல்லை இளிப்பவன். ஆகையினாலேயே அவனைத் தங்களுக்கு என்னைக் காட்டிலும் பிடித்திருக்கிறது, இல்லையா, அரசே!"

"ஆகா! கடைசியில் வந்தியத்தேவனிடம் வந்து விட்டாய் அல்லவா? ஏது, இத்தனை நேரம் அவனை மறந்து விட்டாயே என்று பார்த்தேன்!"

"ஆம், அவனைப் பற்றி உண்மையைச் சொன்னால் தங்களுக்குக் கசப்பாகவே இருக்கும். அந்தப் பேச்சை விட்டு விடுகிறேன். பிறகு என்ன நடந்தது, அரசே! நந்தினியை மறுபடியும் தாங்கள் சந்திக்கவே இல்லையா? வீர பாண்டியனுக்காக உருகினவள் எப்படிக் கிழவர் பழுவேட்டரையரை மணந்தாள் என்று அவளைக் கேட்கவே இல்லையா?"

"வீர பாண்டியனைக் கொன்ற இரவில் வெற்றிக் கோலாகலங்களுக்குப் பிறகு நீங்கள் எல்லாரும் பாசறைகளில் படுத்துத் தூங்கினீர்கள். எனக்கோ தூக்கம் வரவேயில்லை. அவளை மறுபடியும் பார்க்க வேண்டும் என்று என் உடம்பிலுள்ள ஒவ்வொரு நரம்பும் துடித்தது. அவளைப் பார்த்து ஏதேனும் சமாதானம் சொல்ல வேண்டும், மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று விரும்பினேன். மற்றொரு சமயம் அவள் பேரில் எனக்குப் பொங்கி எழுந்த கோபத்தைக் கொட்ட வேண்டும் என்று ஆவேசம் உண்டாயிற்று. எப்படியாவது அவளைப் பார்த்தாலொழிய மனநிம்மதி ஏற்படாது, சோழ நாட்டுக்குத் திரும்பிப் போக முடியாது என்று தோன்றியது. ஆகையால், நள்ளிரவில் நீங்கள் யாரும் அறியாமல் பாசறையிலிருந்து புறப்பட்டுக் குதிரை ஏறிச் சென்றேன். வைகை நதியின் நடுவிலிருந்த தீவை அடைந்தேன். மனம் பதைபதைக்க, உடம்பெல்லாம் நடுங்க, கால்கள் தள்ளாட, குதிரையிலிருந்து இறங்கி, மெள்ள மெள்ள நடந்து பெருமாள் கோயிலுக்கு அருகில் சென்றேன். அங்கேயிருந்த குடிசைகள் எல்லாம்

எரிந்து சாம்பலாகிக் கிடப்பதைக் கண்டேன். ஒரு வயோதிகரும் வயோதிக ஸ்திரீயும் எரிந்த குடிசைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து புலம்பிக் கொண்டிருந்தார்கள். இன்னும் கொஞ்சம் நெருங்கிச் சென்று பார்த்ததில் அவர்கள்தான் முன்னொரு தடவை நந்தினியைப் பழையாறை அரண்மனைத் தோட்டத்துக்கு அழைத்து வந்தவர்கள் என்று தெரிந்தது. என்னைப் பார்த்ததும் அவர்களுடைய துக்கமும் பீதியும் பன்மடங்கு ஆயின. முதலில் அவர்களால் எதுவுமே பேச முடியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அவர்களைத் தைரியப்படுத்தி விசாரித்தேன். ஆற்றுக்கு அக்கரையில் இருந்த கிராமத்தில் அவர்களுடைய மூத்த குமாரி இருந்தாளாம். அவளுக்குப் பிரசவ காலம் என்று அறிந்து அவளைப் பார்த்து வரப் போயிருந்தார்களாம். நந்தினி அவர்களுடன் வர மறுத்து விட்டாளாம். மனம் போனபடி நடந்து பழக்கமுள்ள அந்தப் பிடிவாதக் காரப் பெண்ணை ஒன்றும் செய்ய முடியாமல் அவர்கள் மட்டும் போய் விட்டுத் திரும்பி வந்தார்களாம். வழியில் யாரோ சில முரடர்கள் ஒரு பெண்ணைக் காலையும் கையையும் கட்டி, எரிந்து கொண்டிருந்த சிதையில் பலவந்தமாகப் போட முயன்றதை அவர்கள் பார்த்தார்களாம். யுத்த காலத்தில் இத்தகைய விபரீதங்கள் நடப்பது இயல்பு என்று எண்ணி அவர்களுக்கு அருகில் போகவும் பயந்து கொண்டு விரைவாக இங்கே வந்து சேர்ந்தார்களாம். வந்து பார்த்தால் குடிசைகள் பற்றி எரிந்து கிடந்தனவாம். நந்தினியையும் காணவில்லையாம். இந்த விவரத்தைச் சொல்லிவிட்டு அர்ச்சகரும் அவர் மனைவியும், 'இளவரசே! எங்கள் மகள் எங்கே? எங்கள் அருமைக் குமாரி எங்கே?' என்று கதறினார்கள். அவர்கள் நந்தினியின் உண்மைப் பெற்றோர்கள் அல்லவென்று எனக்கு முன்னமே தெரிந்திருந்தது. இப்போது அது சர்வ நிச்சயமாயிற்று. உண்மையில் பெற்றவர்களாயிருந்தால் இப்படித் தனியாக விட்டு விட்டுப் போயிருப்பார்களா? ஆகையால் அவர்கள் பேரில் எனக்கு இரக்கமோ அனுதாபமோ உண்டாகவில்லை. நந்தினியின் கதியைப் பற்றிச் சொல்ல முடியாத துக்கம் ஏற்பட்டு நெஞ்சை அடைத்தது. 'உங்கள் மகள் எரிந்த சிதையைத் தேடிப் போய் நீங்களும் எரிந்து செத்துப் போங்கள்!' என்று வயிற்றெரிச்சல் தீர அவர்களைச் சபித்து விட்டு, திரும்பிப் பொழுது விடிவதற்குள் பாசறைக்கு வந்து சேர்ந்தேன். நீங்கள் எல்லாரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தீர்கள். நான் போனது, திரும்பி வந்தது ஒன்றும் உங்களில் யாருக்கும் தெரியாது...''

"ஆம்; இளவரசே! தெரியாதுதான். அதற்குப் பிறகும் இத்தனை காலமாக இதையெல்லாம் தங்கள் மனத்திலேயே வைத்துக் கொண்டிருந்ததை நினைத்தால் வியப்பாயிருக்கிறது. சிநேக தர்மத்துக்கு இவ்வளவு மாறாகத் தாங்கள் நடந்து கொள்வீர்கள் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. தங்களுடைய நிலையில் நான் இருந்திருந்தால் தங்களிடம் சொல்லாமல் இருந்திருக்க மாட்டேன்'' என்றான் பார்த்திபன்.

"ஆனால் நீ என்னுடைய நிலையில் இல்லையே, பார்த்திபா! இந்த உலகில் யாருமே என்னுடைய நிலையில் இருந்திருக்க முடியாது. என் நிலையில் இருந்திருந்தால், நீ எப்படி நடந்து கொண்டிருப்பாய் என்று யார் சொல்ல முடியும்?'' என்றான் கரிகாலன்.

"அரசே! நடந்து போனதைப் பற்றி இப்போது நமக்குள் விவாதம் வேண்டாம். அப்புறம் என்ன நடந்தது? நந்தினியைப் பிறகு எப்போது பார்த்தீர்கள்? பழுவூர் இளையராணி ஆனபிறகா? அதற்கு முன்னமேயா?''

"அதற்கு முன்னால் நான் பார்த்திருந்தால், அவள் பழுவூர் ராணி ஆகியிருக்க மாட்டாள். பழுவேட்டரையரின் கலியாணம் நடந்தபோது நானும் நீயும் ஊரில் இல்லை. அந்தச் செய்தி வந்தபோது நாம் இருவரும் அருவருப்போடு பேசிக் கொண்டது உனக்கு நினைவில் இருக்குமே? அதற்குச் சில நாளைக்குப் பிறகு எனக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் நடந்தது. அடுத்த பட்டம் யாருக்கு என்பதைப் பற்றிச் சந்தேகம் எதுவும் இருக்கக் கூடாது என்றுதான் என் தந்தையும் பாட்டியும் மற்ற பெரியோர்களும் சேர்ந்து அந்த ஏற்பாடு செய்தார்கள். மதுராந்தகனுக்கு யாராவது துர்ப் போதனை செய்து தூபம்

போட்டுவிடப் போகிறார்கள் என்ற பயம் அவர்களுக்கு இருந்ததோ என்னமோ? இளவரசுப் பட்டம் கட்டியதோடு, பர கேசரப் பட்டம் அளித்து என் பெயரா லேயே கல்வெட்டு சாஸனம் ஏற்படுத்தும் உரிமையையும் அளித்தார்கள். 'இனி இச் சோழ சாம்ராஜ்யத்தை ஆளும் பொறுப்பு முழுதும் உனக்கே' என்று என் அருமைத் தந்தை மனதார, வாயாரக் கூறினார். அதை நாட்டார், நகரத்தார், அமைச்சர் கள், தளபதிகள் அனைவரும் ஒப்புக் கொண்டு ஜயகோஷம் செய்தார்கள். இந்தக் கோலாகலத்தில் நான் நந்தினியை அடியோடு மறந்திருந்தேன். ஆனால் பட் டாபிஷேகச் சடங்கு நடந்து முடிந்த சிறிது நேரத்துக்கெல்லாம் அவளை நான் என் றும் மறக்க முடியாத சம்பவம் நேர்ந்தது. பழைமையான சோழர் குலத்து மணி மகுடத்துடன் என்னைச் சக்கரவர்த்தி அந்தப்புரத்துக்கு அழைத்துப் போனார். என் அன்னையிடமும் பாட்டியிடமும் மற்ற அந்தப்புர மாதரிடமும் ஆசி பெறு வதற்காக அழைத்துப் போனார். என் னைத் தொடர்ந்து என் சகோதரனும் முதன் மந்திரியும் பழுவேட்டரையர்களும் வந்தார்கள். அந்தப்புரத்தில் வயது மிகுந்த தாய்மார்களோடு, என் தங்கையும் அவளு டைய தோழிகளும் மற்றும் பல இள மங்கையரும் கூட்டமாக நின்றார்கள். எல்லாரும் ஆடை ஆபரணங்களினால் ஜொலித்துக் கொண்டு மகிழ்ச்சியினால் மலர்ந்த முகங்களோடு எங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு நின் றார்கள். ஆனால் அத்தனை முகங்களி லும் ஒரே ஒரு முகந்தான் என் கண்ணுக் குத் தெரிந்தது. அது நந்தினியின் முகந் தான். எரிந்து சாம்பராய்ப் போனாள் என்று நான் எண்ணியிருந்த என் இதய தேவதைதான் அவள்! அந்த அரண்மனை அந்தப்புரத்துக்குள் அவள் எப்படி வந்தாள்? அவ்வளவு பிரமாதமான ஆடை அலங்காரங்களுடன் ராணிகளுக்குள் நடுநாயகமான மகாராணியாக அங்கே எப்படி நிற்கிறாள்? அவள் முகத்தில்தான் என்ன மந்தகாஸம்? அவளுடைய சௌந் தரியம் முன்னைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமாயிருப்பது எப்படி? சில கண நேரத்திற்குள் என் உள்ளம் பற்பல ஆகாசக் கோட்டைகளைக் கட்டிவிட் டது! சோழ சாம்ராஜ்யத்திற்கு உரியவன் என்று நான் முடி சூட்டிக் கொண்ட அன் றைய தினம் உண்மையிலேயே என் வாழ் நாளில் அதிர்ஷ்ட தினம் ஆகப் போகிறதா? என் உள்ளத்தைக் கவர்ந்த ராணியை என் பட்ட மகிஷியாகவும் அடையப் போகிறேனா? ஏதோ, ஓர் அதி சயமான இந்திர ஜாலத்தினால், மந்திர சக்தியினால், அவ்விதம் நடக்கப் போகிறதா...? இப்படி நான் எண்ணிக் கொண்டிருக்கையில் என் அன்னை வான மாதேவி முன்னால் இரண்டு அடி நடந்து வந்து 'குழந்தாய்!' என்று சொல்லி என்னை ஆசீர்வதித்து உச்சி மோந்தாள்! அதே சமயத்தில் யாரும் எதிர்பாராத அச் சம்பவம் நடந்து விட்டது. என் தந்தை 'ஆ!' என்று ஒரு கூச்சலிட்டு விட்டுத் திடீரென்று தரையில் சுருண்டு விழுந்து மூர்ச்சை அடைந்தார். உடனே, அவ் விடத்தில் பெருங்குழப்பமாகிவிட்டது. நானும் மற்ற எல்லாரும் சக்கரவர்த்தி யைத் தூக்கி உட்கார வைத்து மூர்ச்சை தெளிவிப்பதில் கவனம் செலுத்தினோம். என் அன்னையையும், பாட்டி செம்பியன் மாதேவியையுந் தவிர மற்ற மாதர் அனை வரும் உள்ளே சென்று விட்டார்கள். தந் தைக்குச் சீக்கிரத்தில் மூர்ச்சை தெளிந்து விட்டது. என் சகோதரி குந்தவையைத் தனி இடத்துக்கு நான் அழைத்துச் சென்று, 'நந்தினி அங்கே எப்படி வந்தாள்?' என்று கேட்டேன். நந்தினி பெரிய பழுவேட்டரையரை மணந்து கொண்டு இப்போது பழுவூர் இளைய ராணியாக விளங்குகிறாள் என்று குந் தவை சொன்னாள். என் நெஞ்சில் கூரிய ஈட்டி பாய்ந்தது. நண்பா! போர்க்களங் களில் எத்தனையோ முறை நான் காயம் பட்டதுண்டு. ஆனால், 'நந்தினிதான் பழுவூர் இளையராணி' என்று குந்தவை கூறியதனால் என் நெஞ்சில் ஏற்பட்ட காயம் இன்னும் ஆறவில்லை!' என்று ஆதித்த கரிகாலன் கூறித் தன்னுடைய நெஞ்சை அமுக்கிப் பிடித்துக் கொண் டான். நெஞ்சில் அவனுக்கு இன்னும் வலி இருந்து வந்தது என்பது நன்றாய்த் தெரிந் தது.

ஐம்பத்தேழாம் அத்தியாயம்

மாயமோகினி

ஆரம்பத்திலிருந்து அவ்வளவாக அனுதாபம் இல்லாமலே கரிகாலன் கதையைக் கேட்டுக் கொண்டு வந்த பார்த்திபனுக்கும் இப்போது நெஞ்சு உருகி விட்டது. தன்னுடைய கண்களில் துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

"அரசே! ஒரு பெண்ணின் பேரில் ஏற்பட்ட காதலினால் இப்படிப்பட்ட துன்பம் உண்டாகக் கூடும் என்று நான் கனவிலும் கருதியதில்லை! இளவரசுப் பட்டாபிஷேகம் நடந்த அன்று இப்படி ஓர் அனுபவம் தங்களுக்கு நேர்ந்தது என்று எங்களுக்கெல்லாம் தெரியாது. ஆகையால், தாங்கள் மனச்சோர்வுடன் இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டோம். என்னவெல்லாமோ பரிகாசப் பேச்சுகள் பேசித் தங்களைச் சந்தோஷப்



படுத்தப் பார்த்தோம். அதெல்லாம் இப்போது எனக்கு நினைவு வருகிறது!" என்றான்.

"ஆம்; நீங்கள் பரிகாசப் பேச்சுப் பேசினீர்கள். என்னை உற்சாகப்படுத்தப் பார்த்தீர்கள். என்னுடைய ஆட்சிக் காலத்தில் நான் செய்யப் போகும் மகத் தான காரியங்களைப் பற்றிப் பேசினீர்கள். இலங்கையிலிருந்து இமயம் வரையில் சோழ சாம்ராஜ்யத்தை அன்றைய தினமே விஸ்தரித்து விட்டீர்கள்! இன்னும், கடல் கடந்து சென்றும் இராஜ்யங்களைக் கைப் பற்றினீர்கள். அந்தப் பேச்செல்லாம் எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. அவ்வளவும் எனக்கு எவ்வளவு துன்ப மளித்தது என்பதும் நினைவிருக் கிறது. பிறகு ஒரு நாள் என்னை நந்தினி பழுவூர் அரண்மனைக் குக் கூப்பிட்டு அனுப்பினாள். போகலாமா, வேண்டாமா என்று என் மனத்தில் ஒரு போராட்டம் எழுந்தது. கடைசியில், போவதென்று முடிவு செய்தேன். பல விஷயங்களில் எனக்குத் தோன்றியிருந்த



ஐயங்களை அவளைக் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பினேன். அவளுடைய பிறப்பின் உண்மையைத் தெரிந்து கொள்ள விரும்பினேன். அந்தப்புரத்தில் என் தந்தை அன்று மூர்ச்சை அடைந்து விழுந்ததற்கும் அங்கே நந்தினியை அவர் அகஸ்மாத்தாகக் கண்டதற்கும் ஏதேனும் சம்பந்தம்



இருக்குமோ என்ற சந்தேகங்கூட என் மனத்தில் தோன்றியிருந்தது. அன்றைய தினம் சக்கரவர்த்திக்கு விரைவில் மூர்ச்சை தெளிந்து விட்டதாயினும் மறுபடி அவர் பழைய ஆரோக்கியத்தை அடையவேயில்லை என்பது உனக்கு நினைவிருக்கும். நந்தினியுடன் பேசுவதிலிருந்து எனக்கு அதுவரை விளங்காத மர்மம் ஏதேனும் வெளியாகலாம் என்று எண்ணினேன். இதையெல்லாம் ஒரு வியாஜமாக வைத்துக் கொண்டேனே தவிர, உண்மையில் நான் சென்ற காரணம், அவளிடமிருந்த காந்த சக்திதான். வேறு காரணங்களைக் கற்பித்து என்னை நானே ஏமாற்றிக் கொண்டு சென்றேன். பழுவேட்டரையர் ஊரில் இல்லை. அவருடைய அரண்மனையில் என்னைத் தடுப்பாரும் இல்லை; எனக்கும் நந்தினிக்கும் ஏற்பட்டிருந்த பழைய சிநேகிதத்தைப் பற்றி அங்கே அறிந்தவர்களும் இல்லை. இளவரசுப் பட்டம் கட்டிக் கொண்ட ராஜகுமாரன் பழுவூர் அரண்மனை ராணிமார்களிடம் ஆசி பெறுவதற்காக வருவதாகவே நினைத்தார்கள். அரண்மனைத் தோட்டத்தில் உள்ள லதா மண்டபத்தில் நந்தினியை நான் சந்தித்தேன். பார்த்திபா! கடற்பிரயாணம் செய்வோரின் அனுபவங்களை நீ கேட்டிருக்கிறாய் அல்லவா? சமுத்திரத்தில் சில இடங்களில் அளவில்லாத சக்தியுடனும் வேகத்துடனும் கூடிய நீரோட்டங்கள் இருக்குமாம். அந்த நீரோட்டங்களில் கப்பல்கள் அகப்பட்டுக் கொண்டால் சிறிது நேரத்தில் சுக்குச் சுக்காகப் போய்விடுமாம். நந்தினியின் முன்னிலையில் நான் இருந்தபோது, கடல் நீரோட்டத்தில் அகப்பட்டுக் கொண்ட கப்பலின் கதியை அடைந்தேன். என் உடல், உள்ளம், இருதயம்-எல்லாம் ஆயிரம் சுக்கல்களாகி விட்டன. என்னுடைய நாவிலே வந்த வார்த்தைகள் எனக்கே வியப்பை அளித்தன! 'ஐயோ! இது என்ன இப்படிப் பேசுகிறோம்?' என்று நெஞ்சில் ஒரு பக்கம் தோன்றிக் கொண்டிருந்தபோது, வாய் ஏதேதோ உளறிக் கொண்டிருந்தது. எனக்கு இளவரசுப் பட்டம் சூட்டியதைப் பற்றி நந்தினி தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தாள்.

'எனக்கு அதில் ஒன்றும் மகிழ்ச்சி இல்லை!' என்றேன்.

ஏன்?' என்று கேட்டாள்.

'இது என்ன கேள்வி கேட்கிறாய்? எனக்கு எவ்வாறு மகிழ்ச்சி இருக்கும்? நீதான் இப்படி அநியாயம் செய்து விட்டாயே?' என்றேன். நான் சொல்வது அவளுக்கு விளங்காதது போல நடித்தாள். இவ்விதம் பேச்சு வளர்ந்து கொண்டே போயிற்று. என் அன்பை நிராகரித்தது பற்றியும், வீர பாண்டியனைக் காதலித்தது பற்றியும் அவள் மீது நான் குற்றம் சாட்டினேன். கிழவர் பழுவேட்டரையரை மணந்தது பற்றியும் குத்தலாகப் பேசினேன்.

'இளவரசே! முதலில் தாங்கள் என் காதலைக் கொன்றீர்கள்; பிறகு என்னைக் காதலித்தவனை என் கண் முன்னால் கொன்றீர்கள்; என்னையும் கொன்றாலொழியத் தங்கள் மனம் திருப்தியடையாது போலிருக்கிறது. நான் உயிரோடிருப்பதே தங்களுக்குப் பிடிக்கவில்லை. நல்லது; என்னையும் கொன்று தங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்!' என்று சொல்லித் தன்னுடைய இடுப்பில் செருகியிருந்த சிறிய கத்தியை எடுத்து நீட்டினாள்.

'நான் ஏன் உன்னைக் கொல்கிறேன்? நீயல்லவா என்னை உயிரோடு வதைத்துக் கொண்டிருக்கிறாய்!' என்றேன்.

கடைசியில், இப்போது நினைத்துப் பார்த்தாலும் வெட்கம் தருகிற வார்த்தைகளை என் வாய் சொல்லிற்று. 'இன்னமுங்கூட மோசம் ஒன்றும் நேர்ந்துவிடவில்லை. ஒரு வார்த்தை சொல்லு! இந்தக் கிழவனை விட்டு விட்டு வந்துவிடுவதாகச் சொல்லு! உனக்காக நான் இந்த ராஜ்யத்தை விட்டு வந்துவிடுகிறேன். இருவரும் கப்பல் ஏறிக் கடல் கடந்து தூர தேசத்துக்குப் போய் விடுவோம்!' என்றேன்.

நந்தினி அதைக் கேட்டுப் பயங்கரமாகச் சிரித்தாள். அதை நினைத்தால் இப்போது கூட எனக்கு ரோமம் சிலிர்க்கிறது. 'கடல் கடந்து தூர தேசத்துக்குப் போய் நாம் என்ன செய்வது என்கிறீர்கள்? விறகு வெட்டிப் பிழைக்கவா? அல்லது வாழைத் தோட்டம் போட்டுப் பிழைக்கவா?' என்றாள். 'அதெல்லாம் உனக்குப் பிடிக்காதுதான்! அர்ச்சகர் வீட்டில் வளர்ந்தவள் பழுவூர் ராணி ஆகி விட்டாய் அல்லவா?' என்றேன்.

'இதோடு திருப்தியடைவதாக என்

ணம் இல்லை. சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் சக்கரவர்த்தினியாக வீற்றிருப்பதாக உத்தேசம். தங்களுக்கு இஷ்டமிருந்தால் சொல்லுங்கள். பழுவேட்டரையர் இருவரையும் கொன்றுவிட்டு, சுந்தர சோழரைச் சிறையில் அடைத்து விட்டு, சக்கரவர்த்தியாகி என்னைத் தங்கள் பட்டமகிஷியாக்கிக் கொள்கிறதாயிருந்தால் சொல்லுங்கள்!' என்றாள். 'ஐயோ! என்ன பயங்கரமான வார்த்தைகளைச் சொல்கிறாய்?' என்றேன். 'காயமடைந்து படுத்துக் கிடந்த பாண்டியனை என் கண் முன்னால் கொன்றது பயங்கரமான காரியமில்லையா?' என்று நந்தினி கேட்டாள். இதனால் என் குரோதம் கொழுந்து விடத் தொடங்கியது. ஏதேதோ வெறி கொண்ட வார்த்தைகளை உளறி அவளை நிந்தித்துவிட்டுக் கிளம்பினேன். அப்போதும் அவள் என்னை விடவில்லை. 'இளவரசே! எப்போதாவது தங்களுடைய மனத்தை மாற்றிக் கொண்டால் என்னிடம் திரும்பி வாருங்கள். என்னைச் சக்கரவர்த்தினியாக்கிக் கொள்ளத் தங்கள் மனம் இடம் கொடுக்கும் போது வாருங்கள்!' என்றாள். அன்று அவளை விட்டுப் பிரிந்தவன் பிறகு அவளைப் பார்க்கவே இல்லை!' என்றான் ஆதித்த கரிகாலன்.

இதையெல்லாம் கேட்டுப் பயங்கரமும் திகைப்பும் அடைந்த பார்த்திபேந்திரன், "அரசே! இப்படியும் ஒரு ராட்சஸி உலகில் இருக்க முடியுமா? அவளைத் தாங்கள் மறுபடி சந்திக்காததே நல்லதாய்ப் போயிற்று!" என்று கூறிப் பெருமூச்சு விட்டான்.

"அவளை நான் போய்ப் பார்க்கவில்லை என்பது சரிதான்! ஆனால் அவள் என்னை விட்டபாடில்லை. பல்லவா! இரவும் பகலும் என்னைச் சுற்றிச் சுற்றி வந்து என்னை வதைக்கிறாள். பகலில் நினைவிலே வருகிறாள். இரவில் கனவிலே வருகிறாள். ஒரு சமயம் முகத்தில் மோகனப் புன்னகையுடன் என்னைக் கட்டி அணைத்து முத்தம் கொடுக்க வருகிறாள். இன்னொரு சமயம் கையில் கூரிய கத்தியுடன் என்னைக் குத்திக் கொல்ல வருகிறாள். ஒரு சமயம் கண்களில் கண்ணீர் பெருக்கி விம்மிக் கொண்டு வருகிறாள். வேறொரு சமயம் தலைவிரி கோலமாய்க் கன்னங்களைக் கைவிரல்களினால் பிறாண்டிக் கொண்டும் அலறி அழுது கொண்டும் வருகிறாள். ஒரு சமயம் பைத்தியம் பிடித்தவளைப் போல் பயங்கரமாய்ச் சிரித்துக் கொண்டு வருகிறாள். இன்னொரு சமயம் அமைதியான முகத்துடன் ஆறுதல் சொல்ல வருகிறாள். கடவுளே! அந்தப் பாதகி என்னை எப்படித்தான் வதைக்கிறாள் என்று சொல்லி முடியாது. இன்று மாலை பாட்டன் கூறியது நினைவிருக்கிறதா! நான் ஏன் தஞ்சை போகக் கூடாது என்பதற்கு ஏதேதோ காரணம் கூறினார். உண்மையில் நான் தஞ்சை போகாமலிருப்பதற்கும் என் தந்தையைக் காஞ்சிக்கு வரவழைக்க விரும்புவதற்கும் காரணம், நந்தினிதான்..."

"அரசே! கேவலம் ஒரு பெண்ணுக்குப் பயந்து கொண்டா தஞ்சைக்குப் போகாமலிருக்கிறீர்கள்? அப்படி அவள் என்ன தான் செய்து விடுவாள்? வஞ்சனையாக விஷம் வைத்துத் தங்களைக் கொன்று விடுவாள் என்று அஞ்சுகிறீர்களா?...."

"இல்லை, பார்த்திபா, இல்லை! இன்னமும் என்னை நீ நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை. அவள் என்னைக் கொன்று விடுவாள் என்பதற்காக நான் அஞ்சவில்லை. அவளுடைய இஷ்டப்படி என்னைச் செய்ய வைத்து விடுவாளோ என்றுதான் பயப்படுகிறேன். 'உன் தந்தையைச் சிறையில் போடு!' உன் தங்கையை நாட்டை விட்டுத் துரத்து!' 'இந்தக் கிழவனைக் கொன்று என்னைச் சிம்மாசனத்தில் ஏற்று!' என்று அந்த மாயமோகினி மறுமுறை சொன்னால், எனக்கு அப்படியெல்லாம் செய்யத் தோன்றிவிடுமோ என்று பயப்படுகிறேன். நண்பா! ஒன்று நந்தினி சாக வேண்டும்; அல்லது நான் சாகவேண்டும்; அல்லது இரண்டு பேரும் சாக வேண்டும். இல்லாவிடில் இந்த ஜன்மத்தில் எனக்கு மன அமைதி கிடையாது!" என்றான் கரிகாலன்.

"அரசே! இது என்ன பேச்சு? தாங்கள் ஏன் சாக வேண்டும்? எனக்கு அனுமதி கொடுங்கள்! இலங்கைக்கு அப்புறம் போகிறேன். உடனே தஞ்சாவூர் சென்று அவளைக் கொன்றுவிட்டு வருகிறேன். ஸ்திரீ ஹத்தி தோஷம் எனக்கு வந்தால் வரட்டும்..."

"அப்படி ஏதாவது செய்தால் உன்னை என் பரம வைரியாகக் கருதுவேன்.



நந்தினியைக் கொல்லத் தான் வேண்டுமென்றால், என்னுடைய இந்தக் கையினாலேயே அவளைக் கொல்லுவேன். கொன்றுவிட்டு என்னையும் கொன்று கொண்டு மாளுவேன்! வேறொருவர் அவளுடைய சுண்டு விரலின் நகத்துக்குக் கேடு செய்வதையும் என்னால் பொறுக்க முடியாது! நண்பா! நீ நந்தினியை மறந்துவிடு! அவளைப் பற்றி நான் சொன்னதெல்லாவற்றையும் மறந்துவிடு! பாட்டன் சொன்னபடி நீ நாளைக்கே புறப்பட்டு இலங்கைக்குப் போ! என் சகோதரன் அருள் மொழியை எப்படியாவது வற்புறுத்தி இங்கே அழைத்து வா! அவனை இங்கே இருக்கச் செய்வோம். பாட்டனும் பேரனும் யோசித்து என்ன வேணுமோ செய்து கொள்ளட்டும். நாம் இலங்கைக்குச் செல்வோம். மீண்டும் கப்பல் ஏறிப் பெரும்படையுடன் கீழைக் கடல்களில் செல்வோம். சாவகம், புஷ்பகம், கடாரம் முதலிய தேசங்களுக்குச் சென்று வெற்றிக் கொடி நாட்டுவோம். பிறகு மேற்கே திரும்புவோம். அரபு, பாரஸீகம், மிசிரம் முதலிய நாடுகளுக்குச் சென்று அங்கெல்லாம் தமிழர் வீரத்தையும் புலிக் கொடியையும் நிலை நாட்டுவோம். பார்த்திபா! அந்த நாடுகளில் எல்லாம் கற்பு என்னும் கட்டுப்பாடு இந்த நாட்டில் உள்ளது போல் கிடையாது என்பது உனக்குத் தெரியுமா? அரசர்கள் தங்கள் இஷ்டம்போல் அவர்களுடைய ஆட்சியின் கீழ் உள்ள எந்தப் பெண்ணையும் அழைத்துச் சென்று அந்தப்புரத்தில் சேர்த்துக் கொள்வார்



களாம்!...'' என்றான் கரிகாலன்.

பார்த்திபன் இதற்கு மறுமொழி சொல்லுவதற்குள் திருக்கோவலூர் மலையமான் அங்கு வந்து சேர்ந்தார். "அரவான் கதையைப் போல் அற்புதமான கதை இந்த உலகத்திலேயே கிடையாது. நீ இப்போது சொல்லிக் கொண்டிருந்த எந்த நாட்டிலும் கிடையாது. ஆனால் இன்னுமா நீங்கள் தூங்காமல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? பார்த்திபேந்திரா! நாளைக்கு இலங்கைக்குப் புறப்பட வேண்டும் என்பது உனக்கு நினைவிருக்கிறதல்லவா!" என்றார்.

''அதைப் பற்றித்தான் தூங்காமல் பேசிக் கொண்டிருக்கிறோம்!'' என்றான் பார்த்திபேந்திரன்.

(பொன்னியின் செல்வன் முதல் பாகம் முற்றிற்று. அடுத்த இதழில் இரண்டாம் பாகம் ஆரம்பமாகிறது.)





சினிமாவும் சர்க்காரும்

தென்னிந்திய ஸ்டுடியோ சொந்தக்காரர் சங்கத்தின் தலைவர் ஸ்ரீ எஸ்.எஸ். வாஸன் சமீப காலத்தில் ஸினிமாத் தொழிலின் பொருளாதார நுட்பங்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்து வருகிறார். ஸினிமாத் தொழிலினால் சர்க்கார் எவ்வளவு லாபம் அடைந்து வருகிறார்கள் என்பதையும், அதே சமயத்தில் தமாஷா வரி ஸினிமாத் தொழிலை எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்பதையும் புள்ளி விவரங்களுடன் வெளியிட்டு வருகிறார். ஜனவரி 26 சினிமா டெக்னிஷியன்களின் சங்கத்தில் அவர் செய்த பிரசங்கத்தில் மேற்படி விவரங்களைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்.

சாதாரணமாக இக் காலத்தில் ஒரு படம் எடுப்பதற்கு ஐந்து லட்சம் செலவாகிறது. இந்த மூலதனம் கடன் வாங்கப்பட்டதாயிருந்தால் வட்டியுடன் ஐந்தரை லட்சம் ஆகிறது. இந்த ஐந்தரை லட்சம் மூலதனத்தை, ஸினிமாத் தொழிலில் துணிந்து போட்டவருக்கு ஒரு லட்சம் லாபம் வேண்டாமா! வேண்டியதுதான். இவ்வாறு ஆறரை லட்சம் ஸினிமா முதலாளிக்குச் சேர வேண்டுமானால் சர்க்காருக்குக் கொடுக்கும் வருமான வரியோடு சேர்த்துப் பத்தரை லட்ச ரூபாய் அவருக்குக் கிடைக்க வேண்டும். மேலும் இரண்டு லட்ச ரூபாய் பட விநியோகம் செய்யும் கம்பெனிக்குக் கொடுக்க வேண்டும். கொட்டகைகளில் படம் காட்டும் கொட்டகை முதலாளிகள் டிக்கட் வசூலில் பாதிதான் பட முதலாளிகளுக்குக் கொடுப்பார்கள். ஆகையால் மொத்தம் 25 லட்ச ரூபாய் வசூலாக வேண்டும். இத்துடன் கொட்டகைகளில் ஸினிமா டிக்கட்டுகளுடன் சேர்த்துச் சர்க்கார் சார்பில் வாங்கப்படும் தமாஷா வரியைச் சேர்த்துக் கொள்ளுங்கள். அது ஒன்பது லட்சம் ஆகிறது.

ஆகக் கூடி, ஒரு படத்தைப் பார்க்கும் ஜனங்கள் 34 லட்ச ரூபாய் கொடுத்தால்தான், படம் எடுத்தவருக்கு முதலில் கடன் வாங்கிய மூலதனத்தைத் தவிர ஒரு லட்ச ரூபாய் லாபம் கிடைக்கும்.

ஒரு தமிழ்ப் படத்துக்கு மொத்தம் 34 லட்ச ரூபாய் தமிழ் மக்கள் கொடுக்க வேண்டுமென்றால், தமிழ் நாட்டில் கிழவர்களையும் குழந்தைகளையும் நீக்கி ஏறக்குறைய வயது வந்தவர்களெல்லாம் பார்த்தாக வேண்டும். அல்லது பார்த்தவர்களே திருப்பித் திருப்பிப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தவர்களே திருப்பித் திருப்பிப் பார்க்க வேண்டுமென்றால், படத்தில் மிகக் கவர்ச்சிகரமான அம்சங்களை வைத்தாக வேண்டும். இல்லாவிட்டால், பார்க்க மாட்டார்கள்.

சுமாரான வெற்றி தரக்கூடிய சாதாரண படங்களுக்குத்தான் இந்தப் புள்ளி விவரங்கள் பொருந்தும். "சந்திரலேகா" போன்ற முப்பது லட்சம் செலவில் எடுக்கப்பட்ட படமாயிருந்தால், இதற்குப் பன்மடங்கு பணம் ஜனங்கள் கொடுத்தாக வேண்டும். அதற்குத் தமிழ் நாட்டில் உள்ளவர்கள் மட்டும் பார்த்தால் போதாது. வட நாட்டாரும் பார்த்தாக வேண்டும். அதாவது கோடிக் கணக்கான ஜனங்கள் திரும்பத் திரும்பப் பார்த்தாக வேண்டும். அப்போதுதான் அத்தகைய செலவு மிகுந்த படத்துக்குப் போட்ட



பணத்துக்கு மேலே லாபம் கிடைக்கும்.

பட முதலாளிக்குப் போட்ட பணமும் லாபமும் கிடைக்கிறதோ, என்னமோ, சர்க்காருக்குத் தமாஷா வரி மட்டும் நிச்சயம் கிடைத்து விடுகிறது.

எடுக்கும் படங்களில் அநேகம் வெற்றி அடைவதில்லை; போட்ட மூலதனம் முழுதும்கூட வருவதில்லை; ஆயினும் வசூலாகும் வரையில் சர்க்காரின் தமாஷா வரிப் பங்கு மட்டும் கிடைத்து விடுகிறது.

"சந்திரலேகா" படத்தின் மூலம் சர்க்கார் அடைந்திருக்கும் வரி வருமானத்தை இன்னொரு சந்தர்ப்பத்தில் ஸ்ரீ எஸ்.எஸ். வாஸன் வெளியிட்டார். வருமான வரி மூலம் மத்திய சர்க்காரும் தமாஷா வரிகள் மூலம் மாகாண சர்க்கார்களும் அப் படத்தினால் சுமார் இரண்டரைக் கோடி ரூபாய் வருமானம் அடைந்திருக்கிறார்கள் என்று கூறினார்.

அமரர் கல்கி

மற்றொரு 'பாக்ஸ் ஆபீஸ்' வெற்றியான "சம்சாரம்" படத்தின் மூலமும் அவ்வளவு வருமானம் மத்திய சர்க்காரும் மாகாண சர்க்கார்களும் அடைந்திருக்கக் கூடும்.

இம்மாதிரியே வெற்றிகரமாக ஓடிய மற்றும் பல படங்களும் சாதாரணமாக ஓடிய படங்களுடன் கூடப் பல்வேறு சர்க்கார்களுக்கு ஏராளமான வருமானம் அளித்து வந்திருக்கின்றன.

"இப்படியெல்லாம் கோடிக் கணக்கில் சர்க்காருக்கு நாங்கள் வருமானம் கொடுத்து வந்திருக்கிறோம். அப்படியிருக்க, எங்களுக்குச் சர்க்கார் நன்றி செலுத்திப் பாராட்டுவதற்குப் பதிலாக மேலும் மேலும் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி வருகிறார்களே?" என்று ஸினிமா அதிபர்கள் குறைபடுவது இயல்பேயாகும்.

இவ்வளவு பெரிய வருமானத்தைச் சர்க்காருக்கு அளிக்கக் கூடிய ஒரு தொழிலை சர்க்கார் பிரதிநிதிகள் அலட்சியம் செய்ய முடியாது. அலட்சியம் செய்வது யுக்தமும் ஆகாது.

இந்திய சர்க்காரும் சரி, மாகாண சர்க்காரும் சரி, வருமானப் பெருக்கத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டவர்களானால், ஸினிமாத் தொழில் சம்பந்தமான எல்லாவிதக் கட்டுப்பாடுகளையும் தணிக்கை விதிகளையும் எடுத்துவிட முன் வருவார்கள். "எப்படியாவது உங்கள் இஷ்டப்படி கவர்ச்சிகரமான படங்களைப் பிடித்து வெளியிடுங்கள். எங்களுக்கும் நிறைய வருமானத்தைச் சம்பாதித்துக் கொடுங்கள்" என்று ஸினிமா அதிபர்களுக்குச் சொல்லி விடுவார்கள்.

ஆனால் இன்று நமது அரசாங்கங்களை நடத்தி வருகிறவர்களில் பலர் காந்திய வழிகளில் பயிற்சி பெற்று வந்தவர்கள். பண வருவாயை மட்டும் முக்கியமாகக் கருதுகிறவர்கள் அல்ல. தேச முன்னேற்றமும் மக்களின் தார்மிக

முன்னேற்றமும் அவர்களுக்குப் பிரதானமானவை.

சென்னை இராஜ்ய சர்க்கார் வருஷந்தோறும் மதுவிலக்குச் சட்டங் காரணமாகப் பதினெட்டுக் கோடி ரூபாய் வருமானத்தை இழந்து வருவது ஒன்றே இதற்கு அத்தாட்சியாகும்.

இன்று மதுவிலக்கை ரத்து செய்து விட்டால் சென்னை சர்க்காரின் பொருளாதாரக் கஷ்டங்கள் எல்லாம் ஒரே அடியில் தீர்ந்து போய்விடும். ஆயினும் மதுவிலக்குச் சட்டத்தை எடுக்க முடியாது என்று உறுதியாக இருந்து வருகிறார்கள்.

ஆகையால் பண வருமானத்தை மட்டும் முக்கியமாகக் கருதி இப்போதுள்ள மத்திய சர்க்காரும் இராஜ்ய சர்க்கார்களும் ஸினிமாத் தொழிலுக்குச் சலுகை காட்ட மாட்டார்கள்.

அதே சமயத்தில், ஸினிமாத் தொழில் மதுபானத்தைப் போன்ற சமூகத் தீமை உண்டாக்கும் சாதனம் அல்ல. ஸினிமாவை சமூக முன்னேற்றத்துக்கு மிகச் சிறந்த சாதனமாகப் பயன்படுத்தக் கூடும். நமது சர்க்கார் பிரதிநிதிகள் பலரும் இதை உணர்ந்திருக்கிறார்கள். ஸ்ரீ கேஸ்கர் உணர்ந்திருக்கிறார் என்பது அவருடைய பேச்சின் போக்கிலிருந்து நன்கு வெளியாகியிருக்கிறது.

ஆதலின் ஸினிமாத் தொழிலில் ஈடுபட்டவர்களும் சர்க்கார் பிரதிநிதிகளும் அடிக்கடி கலந்து பேசி அபிப்பிராயப் பரிவர்த்தனை செய்து கொள்வதினால் இரு சாராருக்கும் நன்மை உண்டு; இரு சாராருக்கும் லாபமும் உண்டு.

சமீபத்தில் ஸினிமா சம்பந்தமாக நடந்த விவாதங்கள், பேச்சுக்கள் இவற்றின் மூலம் ஓர் உண்மை சிறிதும் சந்தேகத்துக்கிடமின்றி வெளியாகியிருக்கின்றது. அதை இங்கே முக்கியமாக எடுத்துக் காட்ட விரும்புகிறோம்:–

தேச முன்னேற்றத்துக்கும் சமூக முன்னேற்றத்துக்கும் உகந்த முறையில் எடுக்கும் நல்ல படங்கள் ஜன ரஞ்சகமான படங்களாகவும் அமைந்தால், அவை ஸினிமாத் தொழிலில் சிரத்தை கொண்ட அனைவருக்கும் நலம் அளிக்கின்றன.

1. ஸினிமா முதலாளிகள் போட்ட முதலையும் எடுத்து அதற்கு மேல் ஆதாயமும் அடைகிறார்கள்.

2. ஸினிமாக் கொட்டகைக்காரர்களும் நல்ல வருமானம் அடைகிறார்கள்.

3. ஸினிமாவில் நடித்தவர்கள் பணத்துடன் பெயரும் புகழும் பெறுகிறார்கள்.

4. மத்திய சர்க்காரும் மாகாண சர்க்கார்களும் வருமான வரி, தமாஷா வரிகளின் மூலம் நல்ல வருவாய் பெறுகிறார்கள். இவ்விதம் ஸினிமா மூலம் சர்க்கார் அடையும் வருமானத்தைச் சமூக முன்னேற்றத் திட்டங்களுக்குப் பயன்படுத்தலாம்.

5. நல்ல ஸினிமாப் படங்கள் பொது மக்களுக்கு உல்லாஸப் பொழுது போக்காகப் பயன்படுகின்றன. வாழ்க்கையில் உள்ள கஷ்டங்களைச் சிறிது நேரமாவது மறந்து உற்சாகமாக இருக்க உதவுகின்றன. கலைச் சிறப்பு வாய்ந்த படமாகவும் இருந்து விட்டால் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாகிறது.

ஆதலின், ஸினிமாப் பட முதலாளிகள், தொழில் நிபுணர்கள், நடிகர்கள் அனைவரும் கவனம் செலுத்த வேண்டிய விஷயம், ஒழுக்கக்கேடு உண்டாக்காத நல்ல படங்களை ஜன ரஞ்சகமாகவும் எடுப்பதற்கு என்ன வழி என்பதுதான்.

இத்துறையில் ஸினிமாத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்தும்போது, ஸினிமாவின் மூலம் நல்ல வருமானம் பெற்று வரும் அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் அவர்களுடன் பூரணமாக ஒத்துழைப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

(கல்கி, பிப்ரவரி 8, 1953)



• ஹெலி பொப்...

பூமிக்கு நீர் வார்ப்பது யார்?

பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய 'தூமகேது' ஒன்று – அதாவது வால் நட்சத்திரம் அன்றைய சோழ சாம்ராஜ்யத்துக்கு ஏற்படுத்திய அனர்த்தங்களைத் தமது 'பொன்னியின் செல்வன்' நாவலில் அமரர் கல்கி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். அந்தக் காலத்தில் அப்படியொரு நம்பிக்கை! தூமகேது தோன்றுவதே தீமை தருமெனில் – அவை நமது பூமி மீது மோதினால் என்னவாகும்? நமது பூமி ஒரு கணப் பொழுதில் சாம்பலாகப் போய்விடாதா...?

ஷூமேக்கர் லெவி; ஹெலி பொப்; ஹாலே போன்ற பிரும்மாண்டமான தூமகேதுகள் தங்கள் பாதையில் இருந்து விலகிப் பூமியில் மோதினால், நாமும், நமது இப்புவியும் இருந்த இடம் தெரியாமல் வெட்ட வெளியில் ஆவியாகிப் போய் விடுவோம்.

ஆனால் நமது வீட்டின் பருமனை ஒத்த சிறிய வால் வெள்ளிகள் நிமிடத்துக்கு இருபது என்கிற வீதத்தில் பூமியின் வளிமண்டல எல்லையுள் நுழைந்த வண்ணம் இருக்கின்றன. 1986ல், 'லூயிஸ் ஃபிராங்க்' என்னும் அயோவா பல்கலைக் கழக இயற்பியல் விஞ்ஞானியால் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இந் நிகழ்வு, இன்று ஏனைய விஞ்ஞானிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. என்றாலும், நமது பூமி அழிந்து போய் விடவில்லை! மாறாக, பூமியைச் சூழ்ந்துள்ள பெரும் நீர்ப் பரப்பின் தோற்றம் குறித்த புதிய சிந்தனைக்கு இது வித்திட்டிருக்கிறது.

'லூயிஸ் பிராங்க்' – எக்ஸ்புளோரர் 1-ன் தகவல்களின் அடிப்படையில் கணித்துக் கூறியவை யாவும் சரியானவையே என்பதை 1996ல் விண்ணில் ஏவப்பட்ட 'போலார்' செயற்கைக்கோள் அளித்த தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன. நிமிடம் ஒன்றுக்கு இருபது என்னும் கணக்கில் வருடத்தில் சுமார் பத்து மில்லியன் சின்னச் சின்ன வால் நட்சத்திரங்கள் பூமண்டலத்தின் புவியீர்ப்பு எல்லைக்குள் அத்து மீறிப் பிரவேசிக்கின்றன என்னும் 'திடுக்கிடும்' தகவலை போலார் செயற்கைக் கோள் 'பிட்டு' வைத்திருக்கிறது.

இப்படி பூமியின் புற வெளி எல்லையில் பிரவேசிக்கும் இத் தூமகேதுகள் யாவும், தரையில் இருந்து 600 முதல் 15,000

எம்.பி. ஆனார்; என்ன செய்தார்?

“கோவையில் இப்போது தொழில் நெருக்கடி, பயங்கரவாதத்தை விட படு மோசம். இரண்டுமுறை கூடின பாராளுமன்றக் கூட்டத் தொடரில் இது சம்பந்தமாய் ஏதும் பேசினீர்களா...?'' என்று கோவை எம்.பி.யான (பா.ஜ.க) ராதாகிருஷ்ணனிடம் கேட்டோம்.



''யூரியா விலை ஏற்றப்படுவதாக' எங்கள் நிதியமைச்சர் பட்ஜெட் உரையை வாசித்தவுடனேயே முதல் எம்.பி.யாக இதற்கு எதிர்க்கருத்துச் சொன்னேன். இது ஏற்கெனவே கட்டுபடியாகாத விலையின் காரணமாக அல்லலுற்றுக் கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு மேலும் கடுமையான சுமையை ஏற்றுவதாக இருக்கும்; எனவே இந்த விலையுயர்வை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தின முதல் எம்.பி. நான்தான்...''

''இங்குள்ள சிறு நூற்பாலைகள் ஏராளமான கோரிக்கைகளை முன் வைத்துக் கதவடைப்பு நடத்தின. ஏற்கெனவே இருந்த ஐக்கிய முன்னணி அரசு, வேறு மாதிரியான நெருக்கடிகள் கொடுத்துள்ளதாகத் தகவல்கள்... அந்த நெருக்கடிகளைக் களைய என்னென்ன முயற்சிகள் எடுத்துள்ளீர்கள்...?''

''சிறு நூற்பாலைகளைப் பொறுத்த அளவில் ஐ.மு. அரசும், அவ்வரசின் நிதியமைச்சராகப் பணியாற்றிய சிதம்பரமும் மிகுந்த பாரபட்சமாகத்தான் நடந்து கொண்டார்கள் என்பதை, இப்போதைய நிதி அமைச்சரிடத்திலே எடுத்துக் கூறினேன். யார் யாருக்கெல்லாம் நீங்கள் சிறு தொழிலுக்காக – 50 லட்சம் ரூபாய் வரையிலான டர்ன் ஓவருக்கு – எக்ஸைஸ் டூட்டியிலிருந்து விலக்கு அளித்துள்ளீர்களோ, அதேபோல் இந்த சிறு நூற்பாலைத் தொழில்களுக்கும், விலக்கு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இதை பட்ஜெட் விவாத உரையின்போதும் நான் வலியுறுத்திப் பேசியுள்ளேன்!''

சந்திப்பு, படம்: கா.சு.வேலாயுதன்

மைல் உயரத்திலேயே... சிதறி அழிந்து போய் விடுகின்றன. இவ்வாறு சிதறும் இவை நீராவியாக மாறிக் 'கரும்புள்ளி'களாகத் தோற்றம் தருவதாக விண்வெளியில் இருந்து பூமிக்கு அனுப்பி வைக்கப்படும் 'ஒளிப் படங்கள்' புலப்படுத்து கின்றன.

பொதுவாக வால் நட்சத்திரங்கள் எத்தனை பிரும்மாண்டமான 'சைஸில்' இருந்தாலும் – அவை பஞ்சுப் பொதிகளைப் போன்று மிருதுவான பனித்துமிகளால் ஆனவையே! பல மில்லியன் பனித்துமிகள் ஒன்று திரண்டு உருவாகிய இப் பனிக்குவியல் புவியின் வளிப் பிரதேசத்தினுள் நுழையும் போது மித மிஞ்சிய உராய்வின் காரணமாக நீராவியாக மாறி விடுகிறது. இவ்வாறு மாற்றமுறும் நீராவி – சுமார் 10,000 வருடங்களில் நமது பூமித் தரையில் ஒரு அங்குல உயரத்திற்கு நீர்ப் பரப்பினைத் தோற்றுவிக்கப் போதுமானதாக உள்ளதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

நமது பூமியின் வயது சுமார் 4 பில்லியன் ஆண்டுகள் (4000 மில்லியன் அல்லது 400 கோடி). ஆகையால், பூமி தோன்றியதில் இருந்து இன்று வரை 'மினித் தூமகேதுகளின் (சுமார் இருபது டன் முதல் 40 டன் வரை எடையுள்ளவை) மோதலால் உருவான நீரின் அளவு, இன்று பூமிப் பந்தின் கடல் பிராந்தியத்தில் நிறைந்திருக்கும் நீரின் அளவுக்குச் சமமானதாகும் எனச் சொல்லப்படுகிறது. எனவே பூமியின் பிறப்பில் இருந்து அதற்கு நீர் வார்த்து, அதனை குளிர்விக்கும் பணியை இத் தூமகேதுகளே செய்கின்றன என்னும் புதிய சிந்தனை வானியலாளர்களிடையே வலுப்பெற்று வருகிறது!

'நீரின்றி அமையாது உலகு' அல்லவா? எனவே.... உயிர் வாழ்வுக்கு மிக மிக அவசியமான நீரினை நமக்களிக்கும் தூமகேதுகளுக்கு உண்மையில் நாம் நன்றி சொல்ல வேண்டும்.

ஆனாலும் ஒரு சந்தேகம்! நிமிடத்துக்கு இருபது எனும் கணக்கில் இத்தூமகேதுகள் மோதுவதால், நமது செயற்கைக் கோள்கள், விண்வெளி ஓடங்கள் போன்றவை இவற்றால் தாக்கப்படும் வாய்ப்பு உருவாகாதா? அந்த நிலை இப்போதைக்கு இல்லை. எனினும் ஆயிரம் விண்கலங்கள் நமது பூமியின் மேல் சுற்றி வருமாயின் பத்து வருடங்களுக்கு ஒன்று எனும் விகிதத்தில் இவை தாக்கப்படக் கூடிய வாய்ப்பு இருக்கிறது!

ஆயிரம் அனுப்பப்பட்ட பிறகு கவலைப்படலாம். இப்போதே எதற்கு?

— சர்வசித்தன்



THE REPLACEMENT KILLERS

ஆசியாவின் பிரபல அன்டர்வர்ல்ட் டான் 'வே' என்பவனின் ஒரே லட்சியம் தலைமைக் காவலரின் ஏழு வயதுச் சிறுவனை தீர்த்துக் கட்ட வேண்டும் என்பது தான்! காரணம் போதை மருந்துக் கடத்தல் நிகழ்ச்சி ஒன்றில் ஏற்பட்ட கைகலப்பில் இவனது மகன் இறக்க, அந்தக் காவலர் காரணமாக இருந்து விடுவது தான். ஜான்லீ என்பவனை இதற்காக நியமிக்கிறான் வே.

ஆனால் கடைசி நிமிடத்தில் மனசாட்சி குரல் கொடுக்க, சிறுவனைத் தப்பவிட்டு விடுகிறான் ஜான்லீ. அதே சமயம் இனியும் அங்கு தங்கினால், தான் உத்தரவை மீறிய தற்காகக் கொலை செய்யப்பட்டு விடுவோம் என்பது புரிந்திருக்கிறது அவனுக்கு. உடனே தன் தாயகமான சீனாவுக்கு (அங்கே வசிக்கும் தன் அம்மா மற்றும் தங்கையின் உயிருக்கு ஆபத்து வந்து விடக் கூடாதே என்ற கவலைவேறு) திரும்ப முயற்சி செய்கிறான். இதற்காகப் போலி பாஸ்போர்ட்களைத் தயார் செய்யும் பெண் ஒருத்தியை அணுகுகிறான். ஆனால் இருவரையும் மோப்பம் பிடித்துத் துரத்துகின்றனர் 'வே'யின் ஆட்கள். பல சாகசங்களுக்குப் பிறகு மன்ஹட்டனிலிருந்து தப்புகிறான் நாயகன்.

திருமணமாகாத கதாநாயகன். கடைசிவரை கதாநாயகியைக் காதலிக்கவோ சல்லாபம் செய்யவோ இல்லை என்பதில் ஒரு வித்தியாசம். தாக்குதலிலும் அங்கங்கே மனிதாபிமானம் எட்டிப் பார்க்கிறது. மற்றபடி ஓட்டம், கார் சேஸிங் போன்ற பல காட்சிகள் சிறப்பாகவே எடுபட்டாலும் "ஐயோ எத்தனை படங்களில் இதையே பார்ப்பது?" என்ற அலுப்பும் பெரிதாக எழுகிறது. பழகின கதைக்கோடுதான். ஆனால் அதை அப்படி இப்படி அலைய விடாமல் நேர்க்கோட்டில் செலுத்தியதற்காகப் பாராட்ட வேண்டும்.

— ஜி.

நான் உன்னை சுவாசிக்கிறேன்

பட்டுக்கோட்டை பிரபாகர்

காதல் டைரிக் குறிப்பு :

காதலை மிகச் சுலபமாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

காதலியைப் புரிந்து கொள்ளத்தான் தாமதமாகிறது.

ஆஃப்செட் இயந்திரத்தை சரிசெய்வதற்கான உத்தரவுகளைக் கொடுத்தபடி சுறுசுறுப்பாக நின்ற சர்வீஸ் என்ஜினீயரிடம் வந்தான் அரவிந்த்.

"குட்மார்னிங் சார். முக்கால்வாசி வேலைகள் முடிஞ்சது. இன்னும் ஒரு மணி நேரத்தில உங்க மிஷின் ரெடியாகிடும்" என்று புன்னகைத்தான் அவன்.

"ஒரு லட்சம் பணம் செலுத்தி கன்ஃபர்ம் செஞ்சாத்தான் சர்வீஸ் வொர்க் எடுத்துக்க முடியும்னு சொல்லிட்டுப் போனீங்களே..."

"அதான் கட்டிட்டீங்களே..."

"எப்போ... நான்...?"

"இன்னிக்கு மார்னிங் கேஷ் பேமெண்ட் ஆகி, ஆபீஸ்ல சொன்னதாலதானே நாங்க புது சிலிண்டரோட வந்து வேலையை ஆரம்பிச்சோம். ரசீது கூட கொண்டு வந்து உங்க ஸ்டாஃப் சீனிவாசன்கிட்ட ஒப்படைச்சேனே? என்ன கன்ஃப்யூஷன் உங்களுக்கு?"

அரவிந்த் அலுவலக அறைக்குள் வந்து, "சீனு, கேஷ் கட்டினதா ரசீது கொடுத்தாங்களா என்ன?" என்றான்.

சீனு ரசீதை எடுத்துக் கொடுத்து, "என்ன சார் நீங்களே இப்படிக் கேக்கறீங்க? நீங்கதானே கட்டியிருக்கணும்?" என்றான்.

"இல்லை சீனு. நான் இன்னும் பணம் புரட்டலை. அதுக்காகத்தான் பல பேரைப் பார்த்துட்டு வர்றேன்."

"அப்படியா சார்?" என்றான் சீனு ஆச்சரியமாக, "சார் ஒருவேளை..."

"சொல்லு."

"வழக்கமா உங்களைப் பார்க்க வருவாங்களே பிருந்தான்னு. அவங்க காலைல வந்தாங்க. கம்பெனி சர்வீஸ் ஆபீஸ் அட்ரஸ், அப்புறம் பிரிண்ட்டிங் ஆர்டர் கேன்ஸல் செஞ்ச பார்ட்டியோட அட்ரஸ் எல்லாம் என்கிட்ட கேட்டு வாங்கிட்டுப் போனாங்க."

"ஐ ஸீ?" என்றான்.

"ஹலோ அரவிந்த்" என்று பிருந்தா உள்ளே வர, சீனு நாசூக்காக வெளியேறினான்.

"எல்லாம் உன் வேலைதானா பிருந்தா?"

"எது?"

"பணம் கட்டி மிஷினை சர்வீஸ் பண்ண ஏற்பாடு செஞ்சது?"

"அய்யோ! என்கிட்ட ஏது அவ்வளவு பணம்?"

"சீரியஸா சொல்லு."

"சரி, சீரியஸா ஒரு விஷயம் சொல்லட்டுமா? நான் என் வேலையை ராஜினாமா செஞ்சிட்டேன்."

"ஏன்?"


"அது கொஞ்சம் உப்புசப்பில்லாத வேலை. அதைவிட உறைப்பா, காரமா சவாலா ஒரு வேலை கிடைச்சிருக்கே. அதாவது இந்த பிரஸ் நிர்வாகப் பொறுப்பை உங்களைக் கேக்காம அதிகப் பிரசங்கித்தனமா நானே எடுத்துக்கிட்டேன். நான் இதை நிர்வாகம் பண்றதில உங்களுக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லையே?"

"என்ன பிருந்தா இது? உனக்கு இல்லாத உரிமையா? நீ போய் பணம் கட்டிட்டு வந்தியா?"

"இல்லை. அது என் பணம் இல்லை."

"அப்புறம்?"

"ஒரு மாசத்தில முதல் தவணை கட்டணும்னு சேட்டு புது கண்டிஷன்



போட்டுருக்கார்னு நேத்து நீங்க போன்ல சொன்னப்புறம் உங்க தொழில்ல தீவிரமா பொறுப்பு எடுத்துக்கறதுன்னு முடிவெடுத்தேன். அந்த கண்டிஷனை நிறைவேத்தணும்னா முதல்ல மிஷின் ஓடியாகணும். அதுக்கு ஏற்பாடு செய்ய வேண்டியது ஒரு மானேஜரோட முதல் கடமை இல்லையா?"

"என்ன செஞ்சே?"

"மெஷினை சர்வீஸ் பண்ண ஏற்பாடு செஞ்சேன். ஆர்டரை கேன்சல் செஞ்ச பார்ட்டிகளை பர்சனலா சந்திச்சி பக்குவமா எடுத்துச் சொன்னேன். விஜயலட்சுமி டிரேடர்சையும், ரகுவீர் கம்பெனியையும் சமாதானப்படுத்திட்டேன். விஜயலட்சுமிக்கு நாளைக்குக் காலையில டெலிவரின்னும், ரகுவீருக்கு நாளைக்கு ஈவினிங் டெலிவரின்னும் ப்ராமிஸ் பண்ணிருக்கேன். கொஞ்ச நேரத்தில சர்வீஸ் முடிச்சுட்டாங்கன்னா நான் சொன்னபடி டெலிவரி கொடுத்துடலாமில்லையா அரவிந்த்? வொர்க்கர்ஸ் எல்லாரையும் இன்னிக்கு நைட் டூட்டி பார்க்கச் சொல்லுங்க. நாமும் பக்கத்திலேயே இருக்கணும்."

பேசிக் கொண்டே போன அவள் அருகில் நெருங்கி வந்தான்.

"நீ சொல்றதெல்லாம் ரொம்ப உற்சாகமா இருக்கு பிருந்தா. எனக்குள்ளே தலையெடுத்திருந்த அவநம்பிக்கை காணாமப் போயிடுச்சி. நிஜமா சொல்லு, உன்கிட்ட பர்சனலா அவ்வளவு சேமிப்பு இருந்திச்சா?"

"இல்லை."

"பின்னே எப்படி?"

27





"என்னை மாதிரியே உங்களுக்கு உரிமை உள்ள ஒருத்தர்தான் இப்போ உதவி செஞ்சிருக்காங்க. இந்தப் பணத்தை நீங்க திருப்பித் தரணும்னு கூட அவசியமில்லைன்னு சொன்னாங்க. அப்படி அன்பளிப்பா வாங்கிக்கறது உங்க தன்மானத்தைப் பாதிக்கும்னா எப்ப முடியுமோ அப்ப நிதானமா திருப்பித் தரச் சொன்னாங்க – வட்டி எதுவும் இல்லாம."

"யாரு பிருந்தா"

"உங்க அக்கா யாமினி."

அதிர்ந்து போய் அசையாமல் நின்றான்.

"நானும், உங்க ஃபிரெண்ட் சந்துருவும் போய் அவங்களை சந்திச்சோம். நிலைமையைச் சொன்னோம். ரொம்ப ஃபீல் செஞ்சாங்க. உடனே சரின்னு சொன்னாங்க. உங்ககிட்ட சொன்னா யாமினியைப் பார்க்க வேணாம்னு சொல்வீங்களோன்னுதான் சொல்லாம பார்த்தோம்."

அரவிந்த் அமைதியாக நாற்காலியில் அமர்ந்தான்.

"நாங்க செஞ்சது தப்பா அரவிந்த்?"

மௌனமாகத் தலையை குறுக்கில் அசைத்தான்.

"நான் செஞ்சதுதான் தப்பு. அக்காவை நானே போய்ப் பார்த்திருக்கணும். நான் யாரையும் சரியாப் புரிஞ்சுக்கலை. பிருந்தா, நான் இப்பவே போய் யாமினியைப் பார்த்துப் பேசிட்டு வந்துடறேன்" என்று எழுந்தான்.

யாமினியின் அலுவலக அறைக்குள் வந்த அரவிந்த் அவளிடம் வந்து, "அக்கா... அக்கா..." என்றான். அதற்கு மேல் வார்த்தை வராமல் குரல் தழுதழுத்தது.

"ஏய்! என்னடா இது? முதல்ல உக்காரு" என்று அவன் கையைப் பிடித்து உட்கார வைத்தாள் யாமினி.

"அக்கா... நான் எத்தனையோ தடவை உன் முகத்துக்கு நேரா அலட்சியப்படுத்திப் பேசியிருக்கேன். வார்த்தையாலேயே பல தடவை காயப்படுத்தியிருக்கேன். ஆனாலும் நீ இப்போ..."

"நார்மலா இரு அரவிந்த். எவ்வளவு ஆர்வத்தோட நீ இந்தத் தொழிலை ஆரம்பிச்சிருக்கேன்னு எனக்குத் தெரியும். திடுதிப்புன்னு எல்லாத்தையும் இழக்கற சூழ்நிலைன்னா யாராலதான் தாங்கிக்க முடியும்? அப்பப்போ நானும் உன் மேல ஆத்திரப்பட்டிருக்கேன். அதுக்காக உன்னை நடுவிதில விட்டுட முடியுமா? நீ யாருடா? என் தம்பிடா. நமக்குள்ளே ஆயிரம் அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். ஆனா அடிப்படையான உறவு அறுந்துடுமா? இல்லை, பாசம் போயிடுமா? இந்த மாதிரி சூழ்நிலையில உதவலைன்னா அப்புறம் உறவுக்கே அர்த்தமில்லை அரவிந்த்" என்றாள் யாமினி.

"தேங்க்ஸ்க்கா. இந்த நன்றி எல்லாம் நீ செஞ்சிருக்கற இந்த உதவிக்கு ஈடாகாதுக்கா. உன்கிட்ட மோசமா நடந்துக்கிட்டதுக்கெல்லாம் மனப்பூர்வமா மன்னிப்பு கேட்டுக்கறேன்க்கா. நூறு தடவை ஸாரி சொல்லணும்."

"என்ன இது, அசட்டுத்தனமா. விடு. நான் எதுவும் பெரிசா செஞ்சிடலை. இப்போ உனக்கு உதவி செய்யற நிலைமையில வசதியோட என்னை வெச்சிருக்கிற கடவுளுக்குத்தான் நான் நன்றி சொன்னேன். காப்பி சாப்பிடறியா?"

"சாப்பிடறேன்" என்றான் உற்சாகமாக அரவிந்த்.

"தொழிலை மட்டும்தான் ரகசியமா ஆரம்பிச்சேன்னு நினைச்சேன். உன் காதலையும் ரகசியமாவே வெச்சிட்டியே. வெரி நைஸ் கர்ள் அரவிந்த். உன் மேல என்ன ஒரு ஈடுபாடு இருந்தா இவ்வளவு பொறுப்பா... யு ஆர் லக்கிடா."

அரவிந்த மெதுவாகப் புன்னகைத்தான்.

ஒலித்த போனை எடுத்தான் அரவிந்த்.

''அரவிந்த், பெங்களூர்லேர்ந்து இளங்கோ பேசறேன்ப்பா.''

''சொல்லுங்கண்ணா, எப்படி இருக்கீங்க?''

''ஃபைன். யாமினி போன் செஞ்சா, விஷயம் கேள்விப்பட்டு ரொம்ப வருத்தமா இருந்திச்சி. தைரியமா இரு. எல்லாம் சரி செஞ்சுடுவேதானே?''

''இனிமே எல்லாம் சரியாய்டும்னு நம்பிக்கை இருக்குண்ணே.''

''வொர்க்கிங் கேபிடல் ஏதாச்சும் தேவைப்படுமா? என்னால ரெண்டு ரூபா வரைக்கும் உனக்கு ஹெல்ப் பண்ண முடியும். ஒண்ணும் தயங்காதே. மெதுவா திருப்பித் தரலாம்.''

''இல்லைண்ணே. இப்போ எதுவும் தேவைப்படலை. நீங்க கேட்டது ரொம்ப சந்தோஷம்.''

''அப்புறம்... இங்கே ரெண்டு மூணு கம்பெனி சேர்மன்ஸ் கிட்ட பேசினேன். அவங்களோட ஹவுஸ் ஜர்னல் பிரிண்ட் பண்ற ஆர்டரை உனக்குத் தர சம்மதிச்சிருக்காங்க. பெரிய பார்ட்டீஸ். ரெகுலர் ஆர்டர். பக்கா பேமெண்ட். வர்ற ஸண்டே நீ பெங்களூர் வந்தியின்னா இந்த ஆர்டர்சை நான் உனக்கு கன்ஃபர்ம் பண்ணித் தர்றேன் அரவிந்த்.''

''ரொம்ப தேங்ஸ்ண்ணே. கண்டிப்பா வர்றேன். எனக்காக நீங்க மெனக்கெட்டு.''

''அதெல்லாம் எதுவும் இல்லை. நீயும் நானும் ஃபிசிகலா தூரமா பிரிஞ்சி இருக்கோம். அதனாலேயே பல சந்தர்ப்பத்தில மனசில உள்ள ஃபீலிங்சை சரியா எக்ஸ்பிரஸ் பண்ண முடியாமப் போகுது. நீ நல்லா வர வேண்டியவன் அரவிந்த். வருவே. சண்டே வர்றியா?''

''கண்டிப்பா வர்றேண்ணே.''

''வர்றப்போ பிருந்தாவையும் கூட்டிட்டு வா. உன் செலக்ஷனை நான் பார்க்கணும். உங்க ரெண்டு பேருக்கும் ஒரு பார்ட்டி தரணும். டோன்ட் பீ ஷை. யாமினி விவரமா சொன்னா. அழைச்சுட்டு வர்றியா?''


''சரி'' என்றான் குதூகலமாக.

தன் ஃப்ளாட்டின் அழைப்பு மணியை அழுத்தி விட்டுக் காத்திருந்தான் அரவிந்த். கதவைத் திறக்கப் போவது அப்பாவா? அம்மாவா?

காலையில் பிரஸ்சுக்கு நிர்மலா போன் செய்து, ''அப்பா உங்களை வீட்டுக்கு வரச் சொன்னார். ஏதோ பேசணுமாம்'' என்று சொன்னதிலிருந்தே, 'ஏன்?' என்கிற கேள்வி அவனைத் துளைத்துக் கொண்டிருந்தது.

கதவை அம்மா திறந்து, ''வாடா அரவிந்த்'' என்றாள் முகமலர்ந்து. ஹாலில் அப்பா அமர்ந்திருந்தார். நிர்மலா டீ.வி.யை அணைத்துச் சிரித்தாள்.

அப்பாவின் அருகில் வந்து தயக்கமாக, ''அப்பா!'' என்றான்.



''உக்காருப்பா'' என்ற அவரின் குரலில் இருந்த சாந்தம் அவனை ஆச்சரியம் கொள்ள வைத்தது.

''பரவால்லைப்பா'' என்றான் உட்காராமல்.

''ஏண்டா, எவ்வளவு பிரச்னை வந்தாலும் என்கிட்ட வரவே கூடாதுன்னு அப்படி என்னடா வறட்டு வைராக்கியம்?''

''அப்படியெல்லாம் எதுவும் இல்லைப்பா.''

''எந்தக் குடும்பத்திலப்பா கோபதாபம் இல்லை? வயசாயிட்டா வார்த்தையை அதிகப்படியான உரிமையில கோவிச்சுக்கறப்போ நிதானம் தவறிடுது. தோளுக்கு மேல உசந்துட்டா தோழனா நினைக்கணும்னு மத்தவங்களுக்கு அறிவுரை



''கூட்டணித் தலைவர்களுக்கு முன்னாடி கொஞ்சம் பேர் போறாங்களே யாரது?''

''அவங்கதான் வழிகாட்டும் குழு.''

– மகாராம் திருப்பதி

வேணா சொல்லலாம். கடைப்பிடிக்கிறது கஷ்டம். 'நான் பெத்த புள்ளை என் வார்த்தையை மீறி நடந்துக்கறதா?'ன்னு ரோஷம் வந்து தொலைச்சிடுது. நம்ம புள்ளைங்க நல்லா இருக்கணும்னு ஒரு எண்ணம்தானே எந்த அப்பாவுக்கும் இருக்க முடியும்? எப்படி இருக்கறது நல்லா இருக்கறதாகும்றதிலதான் கருத்து வேறுபாடு வந்து தொலைக்குது. பரவால்லை, உக்காருடா'' என்றார் சோமசுந்தரம்.

தயங்கி நாற்காலி முனையில் அமர்ந்து இவ்வளவு இதமாகப் பேசும் அப்பாவை நெகிழ்வோடு பார்த்துக் கொண்டிருந்தான் அரவிந்த்.

"எப்படி இருக்கு இப்போ பிரஸ்? நடுவுல நடந்ததெல்லாம் தெரியும்."

''மும்முரமா போராடிக்கிட்டிருக்கேன்ப்பா. நிறைய ஆர்டர்ஸ் கிடைச்சிருக்கு.''

"ஆனாலும் சேட்டுகிட்ட பட்ட கடன் முழுக்க அசல், வட்டியோட அடைச்சதுக்கப்புறம்தானே நீ நிம்மதியா மூச்சு விட முடியும்? அப்புறம்தானே தொழில்ல ஏதாச்சும் லாபம் பார்க்க முடியும்?''

"ஆமாம்ப்பா."

"நிர்மலா, எடுத்துட்டு வா அதை."

நிர்மலா கொண்டு வந்த பிரவுன் கவரை வாங்கி அவனிடம் நீட்டினார்.

"என்னப்பா?"

"வாங்கிப் பாரு. நீ சேட்டுக்கு எழுதிக் கொடுத்த எல்லாப் பத்திரமும் சரியா இருக்கான்னு பாரு."

"அப்பா!" என்றான் திகைத்து.

"மெஷினை உன் பேருக்கு மாத்தி எழுதி சேட்டு கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிற பத்திரமும் இருக்கும் பாரு."

எல்லாப் பத்திரங்களையும் பார்த்து எதுவும் புரியாமல் திணறினான்.

"காலைலதான் நானும் சந்துருவும் போய் சேட்டைப் பார்த்தோம். நாளது தேதி வரைக்கும் அசல், வட்டி கொடுத்து மொத்தமா செட்டில் செஞ்சிட்டேன். வேளச்சேரில வாங்கிப் போட்டிருந்த கிரவுண்டை வித்துட்டேன்ப்பா. அதை உன் பங்குக்கு ஒதுக்கறதாத்தான் இருந்தேன். உனக்குச் சேர வேண்டிய சொத்துதான். நிர்மலா கல்யாணம் முடிஞ்சதும் எல்லாம் முறையா செட்டில் செய்யலாம்னு இருந்தேன். அதுவரைக்கும் தள்ளிப் போட்டா நீ வட்டி கட்டியே தேய்ஞ்சுடுவேன்னு புரிஞ்சுது. எப்ப செஞ்சா என்னன்னு இறங்கிட்டேன். பதினஞ்சி லட்சத்துக்கு அதை வித்தேன். சேட்டுக்கு செட்டில் செஞ்சது போக மிச்சப் பணத்தை பேங்க்ல உன் கணக்கில கட்டிட்டேன். இனிமே உன் சொந்த முதலீடா நினைச்சி சுதந்திரமா தொழில் செய்யலாம். யாருக்கும் வட்டி கட்ட வேண்டியதில்லைப்பா."

"அப்பா!" என்று அழுகையுடன் அவர் காலில் விழுந்தான் அரவிந்த்.

"எந்திரிப்பா" என்று முதுகைத் தடவினார். எழுப்பி அருகில் அமர வைத்துக் கொண்டார், "இந்த ஒரு வாரத்தில என்னை என் பிடிவாதத்திலேர்ந்து இறங்கி வரச் செஞ்சதும், அனுபவத்தில வராத சில பக்குவத்தை அறிவுரையில எனக்குக் கொடுத்ததும் என் மருமகதான் அரவிந்த். நாலு தடவை சந்துருவோட வந்து என்னை சந்திச்சா. என்ன முழிக்கிறே? நான் பிருந்தாவைத்தான் சொல்றேன்" என்றார்.

"பிருந்தா? அவ... இங்க... வந்து..." நம்ப முடியாமல் கேட்டான்.

"நீயா அழைச்சுட்டு வந்து அறிமுகப் படுத்த வேண்டிய அண்ணி, தானா வந்து

அறிமுகப்படுத்திக்கிட்டு, பாசம்ன்னா என்ன, அன்புன்னா என்னன்னு தினம் ஒரு லெக்சர்தான்!" என்றாள் நிர்மலா.

எதுவுமே பேசுவதற்கு இல்லாமல் உருகிப் போயிருந்தான் அரவிந்த்.

கடற்கரையில் அலைகளின் படையெடுப்பு தொடர்ந்து கொண்டிருக்க, எதிரெதிராக அமர்ந்திருந்தார்கள் அரவிந்தும், பிருந்தாவும்.

"என்ன அரவிந்த், என் முகத்தையே பார்த்துட்டிருக்கீங்க?"

"வார்த்தை தேடறேன் பிருந்தா. உன்னைப் பத்தி இப்ப என் மனசுல பொங்கற ஃபீலிங்சுக்கு சரியான வார்த்தை கிடைக்கலை. அன்புங்கிறதும், உறவுங்கறதும் எவ்வளவு அழுத்தமான, ஆதாரமான, பலமான விஷயங்கள்ன்னு எனக்குப் புரிய வெச்சிருக்கியே... உனக்கு..."

"நன்றி சொல்லணுமா?"

"அது அந்நியப்படுத்தும். ஆனா வேற என்ன சொல்றதுன்னு புரியலை. குடும்பத்தில உள்ளவங்களுக்கு கண்டிப்பா பாசம் இருக்கு. அதை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலயும் வெளிப்படுத்தணும்னு அவசியமில்லை. அப்படி எதிர்பார்க்கிறப்போதான் பிரச்னையே ஆரம்பிக்குது. இதைப் புரிஞ்சுக்க உதவின மோசமான சூழ்நிலைக்குக் கூட நான் நன்றி சொல்லத் தயாரா இருக்கேன்."

"இப்படி எல்லாத்துக்கும் நன்றி சொல்றதை விட்டுட்டு மேற்கொண்டு தொழிலை எப்படி டெவலப் செய்யலாம்னு யோசிச்சாலாவது பிரயோஜனம் உண்டு."

"இப்ப எனக்குப் பணவெறி போயிடுச்சி பிருந்தா."

"ஆனா தொழில் வெறி இருக்கணும் அரவிந்த். கோடி கோடியா மூட்டை கட்டறதுக்காகத் தொழில் வளர்க்க வேணாம். இன்னிக்கு ஏழு பேர் நம்மகிட்ட வேலை பார்க்கறாங்க. எழுநூறு பேருக்கு வேலை கொடுக்கற நோக்கம் வெச்சிக்கிட்டு தொழிலை வளர்க்கலாமே. இந்தச் சமுதாயத்துக்கு பண உதவி ரொம்பத் தேவைப்படுதே அரவிந்த். அதுக்காக தொழிலை வளர்க்கலாமே. நோக்கம்தான் நியாயமானதா இருக்கணும்" என்றாள் பிருந்தா.

அவள் வலது கையை மெதுவாக எடுத்து, உயர்த்தி மென்மையாக முத்தமிட்டு, "கண்டிப்பா நம்மால முடியும்" என்றான் அரவிந்த்.

(முற்றும்)

அட, இவங்க ஜப்பானாங்க!



அண்மையில், பிரான்சில் அர்ஜென்டினா–ஜப்பான் அணிகளுக்கு இடையேயான கால்பந்து போட்டி நடைபெற்று முடிந்ததும் துப்புரவுப் பணியில் ஸ்டேடியத்தின் பணியாளர்கள் ஈடுபட்டனர். அப்போது, ஜப்பான் வீரர்களும், ரசிகர்களும் புழங்கிய பகுதியில் குப்பையே சிறிதளவும் இல்லாதது கண்டு அவர்கள் வியப்படைந்ததாக பாரிசிலிருந்து வெளியாகும் விளையாட்டுப் பத்திரிகை தெரிவித்துள்ளது. சிகரெட் பிடிக்கும் ஜப்பானிய ரசிகர்கள் சிலர் பாக்கெட்டில் வைத்துக் கொள்ளக் கூடிய ஆஷ்–ட்ரேயை கையோடு கொண்டு வந்தனராம். பயன்படுத்தியதும் தூக்கி எறியக் கூடிய குப்பை கூளங்களை தாங்கள் கொண்டு வந்திருக்கும் 'குப்பை பைகளிலேயே' நிரப்பி வெளியே எடுத்துச் சென்று விடுகின்றனராம் ஜப்பானியர்கள். சுத்தம் சுகம் தரும் என்பதை ஜப்பானியர்கள் நன்கு உணர்ந்துள்ளதோடு, அதைத் தமது நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகள் செல்லும் போதும் சிரத்தையுடன் கடைப்பிடித்து வருகின்றனர்.

நன்றி: **தினமணி,**
தகவல்: **ஜி. இந்திரா**

ஏழைமை என்பது தாற்காலிகக் கோளாறு. ஆனால் அதிகப்படியான செல்வச் செழிப்பு என்பது நீண்ட நெடும் நோயாகும்.

- பிரெஞ்சுப் பழமொழி

தகவல்: கோபி. நாகராஜன்

'அம்மா'வுக்கு ஜலதோஷம்

வாஜ்பாய் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார். அத்வானி வருகிறார்...

அத்வானி : நூறு நாளை வெற்றிகரமா ஓட்டியாச்சு. அப்படியும் எதுக்குத் தலையைக் கையில தாங்கிக்கிட்டு யோசனை பண்ணறீங்க?

வாஜ்பாயி : அடுத்த நூறாவது நாள் வெற்றிகரமா ஓடுமாங்கறதுதான் என் கவலை.

அத்வானி : கவலையை விடுங்க. சர்தார் பட்டேல் மாதிரி உள்துறை அமைச்சர் நான் இருக்கிற வரை உங்களுக்கு ஒரு பிரச்னையும் இல்லே! – சென்னையிலிருந்து அம்மா போன் கால் வராத வரை.

வாஜ்பாயி : பிரச்னையே அம்மாதானே! போன் பண்ணினாலும் பிரச்னை. பண்ணலேன்னாலும் பிரச்னை. வந்தாலும் பிரச்னை, வரலேன்னாலும் பிரச்னை.

அத்வானி : மம்தாவும் கூடத்தான் வரல்லே! பிளேனை மிஸ் பண்ணிட்டாங்களாம். அம்மாவுக்குப் பாவம், அன்னிக்குன்னு பார்த்து உடம்பு சரியில்லாமப் போச்சு.

வாஜ்பாயி : உடம்பு சரியா இருந்தா, அவங்களும் பிளேனை நிச்சயம் மிஸ் பண்ணியிருப்பாங்களோ என்னவோ!

அத்வானி : இந்த மாதிரி பேசித்தான் கெடுத்துக்கறீங்க. பிரச்னையைப் பெரிசு பண்றதுல உங்களை விட்டா வேற யாரும் இருக்க மாட்டாங்க.

வாஜ்பாயி : ஐயோ, என்ன கோயமுத்தூர் குண்டா தூக்கிப் போடறீங்க?

அத்வானி : ஆமா. சேடப்பட்டி முத்தையா விலகின உடனே அந்த இடத்துக்கு திண்டுக்கல் சீனிவாசனைப் போடறதா அம்மா சொன்னதைக் கேட்டீங்களா?

வாஜ்பாயி : அதெப்படி போட முடியும்?

அத்வானி : போட்டிருந்தீங்கன்னா அம்மா கோபம் கொஞ்சம் குறைஞ்சிருக்கும். நீங்க என்னடான்னா, அம்மா அங்க பப்ளிக்கா அனவுன்ஸ் பண்ணினதுக்குக் கொஞ்சம் கூட வெயிட் கொடுக்காம அம்போன்னு வுட்டுட்டீங்க. அவமரியாதை பண்ணிட்டீங்க. அம்மாவுக்குக் கோபம் வருமா, வராதா?

வாஜ்பாயி : அதை யாருமே எங்கிட்ட சொல்லலியே? ஜனார்த்தனத்துக்கு அடிஷனல் சார்ஜ் கொடுத்து, பட்ஜெட் பிரசன்ட் பண்றபோது யஷ்வந்த் சின்ஹா கூடவே கையைக் கட்டிக்கிட்டு நிக்க வச்சு, எல்லா டீவியிலயும் காமிக்கலே? அம்மா சந்தோஷப்பட்டாங்கன்னு இல்ல நினைச்சேன்!


அத்வானி : நீங்க நினைச்சா ஆச்சா? இப்ப பாருங்க, வாழப்பாடி ராமமூர்த்தி பிரஸ் மீட்டுல பேசியிருக்கறதை. அ.தி.மு.க. அமைச்சர்கள் எல்லாம் சுதந்தரமா இயங்க முடியலியாம்...

வாஜ்பாயி : கரெக்ட்! எல்லாரும் அம்மா கண்ட்ரோல்ல இருந்தா எப்படி சுதந்தரமா இயங்க முடியும்? வாழப்பாடி ஈஸ் ரைட்.

அத்வானி : ஐயோ, நாமதான் அவங்க சுதந்தரமா செயல்பட விடாம தடுக்கறோம்கிறார். அ.தி.மு.க. அமைச்சர்களுக்கு வேண்டிய உதவி ஆட்களை அவங்களே தேர்ந்தெடுத்துக்கக் கூட முடியலியாம்!

வாஜ்பாயி : தம்பிதுரையைக் கேளுங்க. அத்தனை கவர்ன்மெண்ட் வக்கில்களும் அ.தி.மு.க. அத்தனை போர்ட் டிரஸ்ட் ஆளுங்களும் அ.தி.மு.க. உண்டா, இல்லியா?

அத்வானி : வாழப்பாடி பிரஸ் மீட் நடந்த இடம் சென்னை. இப்படி எதையானும் சொல்லலேன்னா அம்மாவத் திருப்திப்படுத்திட முடியுமா? உடுங்க. வாழப்பாடிக்குப் பதில் சொல்றேன்னு ஏடாகூடமா எதையானும் சொல்லி வச்சிடாதீங்க. என்னைப் பாருங்க! எனக்கு ரத்தக் கொதிப்புன்னாங்க அம்மா. வசதியான



பா.ஜ.க வுக்குத் தலைவலி!

ஞாபக மறதிக்காரன்னாங்க. தேச விரோதின்னு சொல்லாம, தேசப் பாதுகாப்புக்கு விரோதின்னாங்க. எல்லாத்தையும் இந்தக் காதுல வாங்கி, அந்தக் காதுல வுட்டுட்டேன்.

வாஜ்பாயி : அட, எனக்கும்தான் ரெண்டு காது இருக்கு. ஆனா என்னால மூடியல்லியே! நீங்க எந்தக் காதால வாங்கி எந்தக் காதால உடறீங்க? வலதா, இடதா?

அத்வானி : எல்லாம் அம்மா உங்களுக்கு எந்தப் பக்கம் உக்கார்ந்து பேசறாங்க என்கிறதைப் பொறுத்து இருக்கு. இல்லேன்னா, ரிசீவரை நீங்க எந்தக் காதுல வச்சுட்டுக் கேக்கறீங்கறதைப் பொறுத்து இருக்கு.

வாஜ்பாயி : ரொம்ப சிம்பிளா சொல்லிட்டீங்க. ஆனா ரெண்டு காது ஜவ்வுமே கிழியற மாதிரி இல்லே 356, 356ன்னு கத்தறாங்க!

அத்வானி : மூணும் அஞ்சும் எட்டு. எட்டும் ஆறும் பதினாலு. ஒண்ணும் நாலும் அஞ்சு. அம்மாவோட அதிர்ஷ்ட நம்பர் இப்போ அஞ்சு. அதனாலதான் அத்தக் கெட்டியாப் புடிச்சிட்டிருக்காங்க.

(ஆர்.எஸ்.எஸ். தலைவர் குஷாபாவ் தாக்ரே வருகிறார்.)

குஷாபாவ் : 356 தடவை சொன்னாலும் 356 ஐப் பிரயோகம் பண்ணக் கூடாது தான். ஆனா தமிழ்நாட்டுல சட்டம் – ஒழுங்கு திருப்திகரமா இல்லேன்னு அப்பப்ப சொல்லிக்கிட்டே இருக்கணும். அது போதும். நீங்க எப்படியோ, தெரியாது. நான் சொல்லிடறேன்!

வாஜ்பாயி : பார்த்தீங்களா, சட்டம் ஒழுங்கு திருப்திகரமா இல்லேங்கறீங்க. ஆனா 356ஐப் பிரயோகிக்கக் கூடாதுன்னும் கூடவே சொல்லறீங்க. நான் எதை ஏத்துக்கறது? குழப்பறீங்களே போட்டு!

அத்வானி : இதுல குழப்பத்துக்கே இடமில்லே. சட்டம் – ஒழுங்கு சரியா இல்லேங்கறது அம்மாவைத் திருப்திப்படுத்த. 356ஐப் பிரயோகிக்க மாட்டோம்னு சொல்



''அடுத்த பட்டிமன்றத்திற்கு தலைப்பு என்ன கொடுக்கலாம்?''

''வாலியை ராமன் மறைந்திருந்து கொன்றது சரியா, தவறா என்று அடிக்கடி விவாதிப்பது சரியா, தவறானு வைக்கலாமே!''

– என்.வி. ரமணி



''தேவாரத்துக்கும் திருவாசகத்துக்கும் என்ன வித்தியாசம் குருவே?''

''திருவாசகத்திற்கு பயங்கர மீசை எதுவும் கிடையாது.... அது ஒன்னுதான் வித்தியாசம்!''

– உ. ராஜாஜி



''ஏண்டி பக்கத்து வீட்டு மாலா வந்து உன் மாமியாருடன் சண்டை போட்டு விட்டுப் போறா?''

''அவளுடைய மாமியார் ஊரில் இல்லையாம். பிராக்டிஸ் விட்டுப் போயிடக் கூடாதுபாரு!''

– லலிதா செல்லப்பா

றது ஜயாவைத் திருப்திப்படுத்த.

வாஜ்பாயி : ஜயான்னா? டாக்டர் ராமதாசா?

குஷாபாவ் : நீங்க 13-நாள் பிரதமர் மாதிரிதான் இன்னமும் பேசறீங்க. 100 நாள் பிரதமரோட மெச்சூரிடியோட பேசறதா தெரியலே. ஜயான்னா ஜனாதிபதி. இது கூடத் தெரியாதா?

வாஜ்பாயி : சட்டம் – ஒழுங்கு சரியா இல்லேன்னு எதை வச்சுச் சொல்லறீங்க?

குஷாபாவ் : ஒழுங்கா இருக்கா இல்லியாங்கறது பிரச்னை இல்லே. எது ஈஸியா இருக்குன்னுதானே பார்க்கணும்? நாம்பளே சட்டம் ஒழுங்கு சரியில்லேன்னா அம்மாவுக்குச் சந்தோஷம். 356ஐ அநாவசியமா உபயோகிக்க மாட்டோம்னா எதிர்க்கட்சிகள் நம்மகிட்டே கொஞ்சம் சிம்பதி, மரியாதை எல்லாம் காட்டும். இல்லியா? ஆட்சியைக் கலைக்காமலே ரெண்டு குரூப்பையும் கண்ட்ரோல்ல வச்சிருக்கலாம்!

அத்வானி : எதுக்கும் ஜஸ்வந்த சிங்கை அம்மாவப் பார்க்கப் போயிடச் சொல்லுங்க. ஆனா, போன உடனே 'உடம்பு எப்படி இருக்கு'னு எடுத்த எடுப்புல கேட்டுட வேணாம்னு சொல்லி வையுங்க.

வாஜ்பாயி : ஐ.நா., அமெரிக்கா எல்லாம் கூட ஜஸ்வந்த் போயி ஆளுங்களைப் பார்த்துப் பேசிட்டு வந்துருவார். அம்மாவைப் பார்க்கறதுதான் பிராப்ளம். போயஸ் கார்டனுக்கு போன் பண்ணினா நோ ரெஸ்பான்ஸ். பையனூர் பங்களாவுக்குப் பண்ணினாலும் அதே ரிப்ளைதான்! அதான் நம்ப மாப்ளையை அனுப்பப் போறேன்!

அத்வானி : 356 விஷயத்துல வை.கோ. அம்மா பக்கம் இல்லே. ஸ்ரீலங்கா விஷயத்துல வாழப்பாடி அம்மா பக்கம் இல்லே. டாக்டர் ஐயா ஓவரா ரியாக்ட் பண்ண மாட்டார். ஸோ, அம்மா இப்போதக்கி பெரிசா பிரச்னை எதுவும் உண்டாக்க மாட்டாங்கன்னு நினைக்கறேன்.

வாஜ்பாயி : ஒரு வாரம் சிம்லாவுல நிம்மதியா இருந்தேன்... அது மாதிரி எனக்கு வெளிநாடு போற சான்ஸ் எதுவும் இப்ப இல்லியா?

அத்வானி : ஏன் இல்லாம? சார்க் மாநாடு அது – இதுன்னு ஏதானும் ஒண்ணு வந்துக்கிட்டே இருக்கும். ஆனா அங்க நவாஸ் ஷெரீப்பை சமாளிக்கணும்!

வாஜ்பாயி : ஆ! அது பெட்டர். அவர் பேநஸீரை எப்படிச் சமாளிக்கறார்னு ரெண்டு மூணு டிப்ஸ் கேட்டுத் தெரிஞ்சுக்கலாமே!... ●

கற்பனை : **சாருகேசி**

வட்டமேஜை

✉ "சமீப காலமாக (மூப்பனார் மாதிரி) மௌனத்தையே கடைப் பிடித்து வரும் எங்கள் சூப்பர் ஸ்டாரின் அமைதிக்கும் ஓர் அர்த் தம் இருப்பதை உமது வாயிலாக அறிந்து கொண்டதும், மனசு எப்படியெல்லாம் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தது தெரியுமா...? ஆக, அந்த ஆண்டவன் சொல்கிறபோது இந்த அருணாசலம் தம் மகிமையை வெளிப்படுத் துவார் போலிருக்கு...! கவர் ஸ்டோரி - கலக்கல் ஸ்டோரிதான்...!
கும்பகோணம், ஆர். ஷண்முகம்.

✉ "'தாயின் மணிக்கொடி' படத்தில் நிவே திதா இறந்து போகிற மாதிரியான காட்சிக்கு டப்பிங் நடந்த அன்றுதான் அவரது மரணச் செய்தி வந்தது' என அர்ஜுன் கூறியிருந் ததைப் படித்ததும் மனம் அப்படியே ஒரு கணம் கனத்துப் போயிற்று!
போடிநாயக்கனூர், எஸ். சையது முகமது.

✉ 'கள்ளன்' முதல் சிறுகதை என்று நம்ப முடியாத அளவுக்குச் சுவையாக எழுதி யிருந்த நாராயண பிள்ளையின் எழுத்தாற் றலை எண்ணி வியக்கும்போது, கதையின் சுவை சிறிதும் குன்றாமல் மொழி பெயர்த் திருந்த ராஜனையும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.
திருவெறும்பூர், என். சம்பத்.

✉ வாஜ்பேயி அரசுக்கு எத்தனை மார்க் என பிரபலங்கள் மட்டும்தான் போட வேண்டுமா? ஏன்... வாசகர்கள் போட்டால் என்னவாம்? வம்பு பிடித்த கூட்டணிக் கட்சி களைச் சமாளித்து வருவதற்கு 90 மார்க், ஊழலற்ற நிர்வாகத்துக்காக 60 மார்க், அணு குண்டு வெடித்து, நாட்டை இக்கட்டான சூழ்நிலைக்கு ஆட்படுத்தியதால் 0 மார்க், வெளிநாட்டு உதவிகளை இழந்த நிலையில் மத்திய அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை அறுபதாக்கிச் சுமார் 10,000 கோடி ரூபாய்ச் செலவை இரண்டாண்டுகள் தள்ளிப் போட்ட புத்திசாலித்தனத்துக் காக ஒரு 10 மார்க். ஆக மொத்தத்தில் 42.2%
பெங்களூர்-16, அ. சங்கரன்.

✉ காது வளர்க்கும் கலை பற்றிய கட்டு ரையில் கம்ப்யூட்டர் படிக்கும் கல்லூரி மாணவி சுதாவிடம் 'அதுவே மீண்டும் ஃபேஷனானால்?' என்று கேட்ட தற்குப் பதில் கொடுத்த அவர், கூடவே "போட் டோவுக்கு போஸ் கொடுத்தா கம்ப் யூட்டரிலே என் படத்துக்கே தண்டட்டி மாட்டினாலும் மாட்டிடுவீங்களே' என்று சொல்லி உங்க நிருபருக்கே காது குத்திட்டாங்களே!
சென்னை - 14, அய்யாறு வாசுதேவன்.

நாங்க ரெடீ நீங்க ரெடியா?

✉ ஒரு கட்சி, ஆதரவை வாபஸ் பெற்று தேர்தல் வருமானால் அக்கட்சியை மக்கள் மன்னிக்க மாட்டார்கள் என்றும், மாற்று ஆட்சி ஏற்பட வாய்ப்பே இடையாது என்றும், மறுபடி தேர்தலை எக்கட்சியும் விரும்ப வில்லை என்றும் உறுதிபடக் கூறும் ஜனா. கிருஷ்ணமூர்த்தி, அ.தி.மு.க. ஆதரவைத் தூக்கி எறிய வேண் டியதை விட்டு விட்டு, ஜெய லலிதாவின் ஆட்டத்துக்குத் தப்பாமல் தாளம் போடலாமா?
மதுரை, வி.சிவா.

✉ 'வீட்டில் ஒரு டாக்டர்' என்ற தலைப்பில் 'கல்கி'யுடன் வந்த இல வச இணைப்பு, உண்மையாகவே வீட்டிற்கு ஒரு டாக்டர் வந்த இருப் பினை ஏற்படுத்தியது. மிகுந்த பாராட் டுக்கள்!
அய்யலூர், வி.பி. சுப்பிரமணி.

✉ தூர் வாரும் பணிகளில் முறை கேடுகள் என்று சதா செய்தி வந்து கொண்டிருக்கும்போது, அதை அந்த இடத்திற்கே போய் விசாரித்து, பேட்டி கண்டு, உண்மை நிலையறிய உதவிய கல்கிக்குப் பாராட்டு.
காரைக்குடி-1, பாலு.

✉ உழைக்கும் அடித்தட்டு மக் களின் அவலமான வாழ்க்கைப் பிரச்னைகள் மனதை அழுத் தின. அரசின் நலத்திட்டங்கள் இம் மக்களைச் சென்று சேர்வ தில்லை என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தியதற்குப் பாராட்டுக் கள்.
கோவை-14, ஏ.எஸ். இராமசாமி.

அ.தி.மு.க.வை சசிகலாவிடம் ஒப்படைத்தால் என்ன?

● பா. கிருஷ்ண குமார், கோவில்பட்டி.

? அத்வானிக்கு அம்னீஷியா எனக் கண்டுபிடித்திருக்கிறாரே 'டாக்டர்' ஜெயலலிதா?

! நீங்கள் பேப்பர் படிப்பதில்லையா...? நாட்டில் நிறைய போலி டாக்டர்கள் உலவுகிறார்கள்.

● டி.ஏ.சி. பிரகாஷ், திருச்செங்கோடு.

? சமீபத்தில் உங்களுக்குப் பிடித்த விளம்பரம்?

! பிடித்த அல்ல; அருவருப்பூட்டிய ஆபாசமான டீ.வி. விளம்பரம் – 'எல்லாம் தெரியுதே!' என்று ஒரு சிறுவன் கூற, சுற்றியுள்ள ஆண், பெண்கள் தங்கள் ஆடைகளைச் சரிசெய்து கொள்வது – கேவலத்தின் உச்சம்! ஒரு பேனாவை விற்பதற்காக இத்தனை தரம் தாழ வேண்டுமா? இப்படியெல்லாம் தரம் தாழ்ந்து சொன்னால்தான் நம் மக்களால் புரிந்து கொள்ள முடியுமா?! வெட்கக்கேடு!



• குழப்ப உவமை



• நக்கல் கணேசன்!

● ப. இராம் முருகன், சென்னை – 81.

? ராமர் கோயில் கட்டுவதற்கான முன்னேற்பாடுகள் எவ்வாறு முழுவீச்சில் நடைபெறுகிறதோ, அதுபோல் மாநகராட்சிப் பணிகளும் நடைபெற வேண்டும் என்கிறாரே மாறன்...?

! மருமகனாக இருந்தாலும் சரி, குட்டு வைக்க வேண்டிய நேரத்தில் வைக்கத்தான் வேண்டும் என்று கருதிச் செயல்பட்டதைப் பாராட்டலாம். ஆனால் கொடுத்த உபமானம் சரியல்ல. கசப்புணர்வையும் குழப்பத்தையும் உருவாக்குகிறது.

● கே. பெருமாள், கூனியூர்.

? முலாயம் சிங் – லல்லு புதிய கூட்டணி நீடிக்குமா...?

! அது ஒரு வெடிச் சிரிப்பு; அதன் பிறகு தாங்கள் மத்தியில் ஆட்சி அமைக்க காங்கிரஸ் உதவ வேண்டும் என்று சொல்வது பயங்கர அவுட்டுச் சிரிப்பு!

● பாரதிவாணர் சிவா, புதுச்சேரி - 4.

? கின்னஸ் சாதனைகள் பற்றி உங்கள் கருத்து...?

! கின்னஸில் இடம்பெறுகிறவையெல்லாமே சாதனைகள் அல்ல; பைத்தியக்காரத்தனம் கூட இடம்பெறுகின்றது!

● ஆர். சுப்பாராவ், சென்னை – 61.

? '356 ஆவது பிரிவை உருவாக்கிய அம்பேத்கார் என்ன முட்டாளா...?' என்று நாவலர் சீறுகிறாரே...?

! சுயநலத்துக்காக மட்டுமே 356ஐப் பயன்படுத்த வேண்டும் என்று ஒரு கூட்டம் பின்னாளில் உருவாகும் என்று அன்றைய தலைவர்கள் உணராமல் போனது முட்டாள்தனம். இதுபோன்ற கேவலங்களைக் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத அளவுக்கு உயர்வானவர்கள அவர்கள்.


● கே. விஜயன், கோவை – 42.

? திடீர் திடீர் என்று உடம்பு சரியில்லாமல் போகும் ஜெயலலிதா, கட்சியை சசிகலாவிடம் ஒப்படைத்து விட்டு நிரந்தரமாக ஓய்வு எடுத்துக் கொண்டால் என்ன...?

! சரிதான். நீங்கள் தமிழ்நாட்டில் வசிக்கவே வாடகை தரவேண்டியிருக்கும். பரவாயில்லையா...?

● கே. ஆர். உபேந்திரன், தஞ்சாவூர் – 6.

? கர்நாடகா அரசு, காவிரி நீரைப் பயன்படுத்தும் ஒரு திட்டம் சம்பந்தமாக



• காமெடி...

• ....ஜோடி!

ஜப்பானிடம் உதவி கோர, அத்திட்டத்துக்கு உதவி அளிக்கக் கூடாது என தமிழக அரசு ஜப்பானுக்குக் கடிதம் எழுதியுள்ளது குறித்து...?

! அது ஏதோ தெய்வக் குற்றம் என்பது போல் பேசுவதை ஏற்க முடியவில்லை. அந்தத் திட்டம் அமுலானால் தமிழ்நாட்டுடன் செய்து கொண்டுள்ள ஓர் ஒப்பந்தத்தைக் கர்நாடகம் மீறியதாகி விடும் என்று கூறி, ஜப்பானிய நிறுவனத்தை எச்சரிப்பதில் ஒரு தவறும் இல்லை. ஜப்பானிய நிறுவனம் இதற்காகத் தமிழக அரசுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

● செ. சல்மான் பாரீஸ், பாம்பன்.

? ஆதரவு கொடுத்து ஆட்சியில் அமர்த்தியவர்களை ஆட்டி வைப்பதில் ஜெ இன்னொரு இந்திரா காந்தி எனலாமா...?



• ஆட்டி வைக்கும்....



• .....ஆற்றல்!



• குடக்கூலி குவீன்!

! இந்திரா காந்தி புத்திசாலி. சமயத்தில் அவர் செயல்களில் ஆணவம் தலைதூக்கியதுண்டே தவிர, அறியாமை தலைகாட்டியதில்லை.

● கே. எம். சுப்பிரமணியன், பூனாம்பாளையம்.

? போலீஸ் ஸ்டேஷனில் புகுந்து ரகளை செய்து, கண்ணில் பட்டதையெல்லாம் உடைத்தெறிந்து நீதியை நிலைநாட்டியுள்ள வழக்குரைஞர்கள் பற்றி...?

! சுவாமி சித்பவானந்தா அடிக்கடி ஒன்றைச் சொல்லுவார். 'பார்ப்பதை அப்படியே நம்பாதே. சுரண்டிப் பார்; அப்போதுதான் உண்மை தெரியும்' என்று... சுரண்டிப் பார்த்தால் காக்கிச் சட்டைகள், கறுப்புக் கோட்டுகள் என்று எல்லாவற்றுக்குள்ளும் கேவலங்கள் இருப்பது புரியும்.

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்.

? உ.பி. அமைச்சரவையில் டீ, காப்பி செலவுக்காக ஐம்பத்தைந்து லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளதே?

! எந்தச் செலவினமானாலும் அரசில் கணக்கு எழுதுவது ரொம்பச் சுலபம். பணம் எங்கே போயிற்று என்று கண்டுபிடிப்பது தான் கஷ்டம். மக்கள், நேர்மைக்கு வோட்டுப் போட்டால்தான் உண்டு.

● இ. எம். சுரேஷ், விழுப்புரம்.

? பஞ்சமா பாதகங்களுள் ஒன்றான சூது (லாட்டரி) பற்றி டீ.வி.யில் பகட்டான விளம்பரம் வருகிறதே...?

! ஜனநாயக தேசத்தில் லாட்டரி, மது, சிகரெட்டுக்குத் தடை விதிப்பது சாத்தியமல்ல; ஆனால் இவற்றை விளம்பரம் செய்யக் கூடாது என்று தடைவிதிப்பது சாத்தியமே. ஆட்சியாளர்களின் மனத்தில் உறுதி வேண்டும். அதுதான் கிடையாதே!



• 'சீறும்' சிந்தனை!

● வி. மோகன், நெல்லிக்குப்பம்.

? தமது ஆட்சி நிலைக்க, அந்தியூர் செல்வராஜை அழைத்து மீண்டும் தீ மிதிக்கச் செய்யலாம் என கருணாநிதியை இல. கணேசன் கூறியிருப்பது நக்கல் தானே...?

! காட்டுமிராண்டித்தனமான நக்கல்!

● ஆர். திருமால், ஆறுபாதி.

? சிரிக்கும் பெண்ணை நம்பலாமா...?

! உதட்டளவில் சிரிக்காமல் உள்ளத்திலிருந்து சிரித்தால் நம்பலாம்.

● பி. அனிதா பிரியன், பேளுக்குறிச்சி. ❑

? இன்றைய சர்தார் படேல் பட்டம் அத்வானிக்குப் பொருந்துமா...?

! சமஸ்தான மன்னர்களின் எதிர்ப்பைச் சமாளித்து, அந்த ராஜ்ஜியங்களை இந்தியாவுடன் இணைத்தார் படேல். ஆனால் அவருக்கு எதிரிகள் இல்லை. அத்வானிக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும் - குறிப்பாக போக்ரானுக்குப் பிறகு - என புலனாய்வுத் துறையினர் சிபாரிசு செய்துள்ளனர். பட்டம் பொருந்துமா என்று நீங்களே தீர்மானம் செய்து கொள்ளுங்கள்!

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
பேளுக்குறிச்சி P. அனிதா பிரியன்,
5/69, A1, மின்வாரியம் எதிரில்,
பேளுக்குறிச்சி - 637 402.
நாமக்கல் மாவட்டம்.

ஒரு நிறுவனத்தைத் தூக்கி நிறுத்த முடியுமா?

செலவினங்களைப் பலசமயம் குறைக்க முடியாது என்று நமக்குக் கீழ் உள்ளவர்கள் சொல்வார்கள். நாம் அவர்கள் சொல்வதை ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை. அவர்கள் 'எங்கே குறைக்கலாம்? என்று தீவிரமாகச் சிந்திக்கவில்லை; நம் நிலையை உணரவில்லை; நம்முடன் சேர்ந்து நிறுவனத்தைத் தூக்கி நிறுத்த முழு ஒத்துழைப்பையும், தியாகத்தையும் செய்ய முன் வரவில்லை' என்றுதான் அவர்களைப் பற்றி எண்ணுவேன். பெரும்பாலும் அது தான் உண்மை.

எங்கள் உணவு நிறுவனத்தில் யந்திரங்களைக் கழுவி சுத்தப்படுத்த மாலையில் சுமார் 12 பேர் வருவார்கள். இரவு 10 மணி வரை வேலை இருக்கும். எனக்கு இது அதிகம் எனப்பட்டது. அந்தத் துறையின் தலைமை மனிதரைக் கூப்பிட்டேன்.

"நமக்கு இந்த பன்னிரண்டு பேர் வேலை கட்டுபடியாகாது. நமது நிறுவனம் இப்போது வேறுவிதமாகச் செயல்படுகிறது; பழைய மாதிரி அல்ல. ஆறு பேரை வைத்துக் கொண்டு வேலை செய்ய முடியுமா என்று பார்" என்றேன்.

அவர் பதிலுக்கு, "12 பேரை ஆறு பேராகக் குறைத்தால், எல்லாம் பாதி சுத்தமாக இருந்தால் போதுமா?" என்றார். எப்படிப்பட்ட பதில், கவனியுங்கள்!

"ஓ! ஒரு உணவு நிறுவனத்தில் பாதி சுத்தமாக இருந்தால் போதுமா என்று நீங்கள் கேட்டால், ஒன்று உங்களுக்குப் பொருளின் தரம் பற்றி அக்கறை இல்லை என்று அர்த்தம்; இல்லாவிட்டால் உங்களுக்கு என்னைப் பற்றித் தெரியவில்லை என்று அர்த்தம்" என்றேன்.

நான் ஒன்றும் அதிகம் பேசவில்லை. யந்திரங்கள் நிறைந்த உற்பத்திக்கூடத்தை விட்டு விட்டு என் அறைக்குப் போய் விட்டேன்.

சற்று நேரத்தில் கதவைத் தட்டும் சப்தம். கதவு திறந்தது. சுத்தம் செய்யும் குழுவின் தலைவரின் தலை தெரிந்தது. உள்ளே வந்தார்.

"மன்னிக்க வேண்டும். நான் ஆறு ஆட்களை வைத்துக் கொண்டு செய்து முடித்து விடுகிறேன். நான் அப்படிப் பேசியதற்கு மன்னிக்கவும்" என்றார்.

"உட்காருங்கள்!" என்று சொல்லி நிறுவனம் அனுபவித்துக் கொண்டிருக்கும் சிரமங்களையும் அதை சமாளிக்க எடுக்கும் முடிவுகளையும் சொன்னேன். சமாதானமானோம்.


தொழிலில் ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறது. 'தொழிலில் என்ன நடக்கிறது, என்ன செய்து கொண்டிருக்கிறோம், ஏன் செய்து கொண்டிருக்கிறோம், என்ன திட்டமிடுகிறோம்' என்று நாம் சதா நமது தொழிலாளர்களிடம் அறிவித்துக் கொண்டிருக்க வேண்டும். போட்டியாளர்கள் எப்படி நம்மை நெருக்குகிறார்கள். அவர்களுடைய பொருளின் தரம் என்ன என்று தொழிலைப் பற்றிய நிலைமையைக் கூறிக் கொண்டிருக்க வேண்டும். பெரிய நிறுவனங்களில் இதற்காக இப்படி ஒரு செய்தித்தான் வெளியிடுவார்கள். எங்களுடையது ஒரு பெரிய நிறுவனமுமல்ல; சிறிய நிறுவனமுமல்ல. ஒரு நடுத்தர நிறுவனம். பல மாநிலங்களில் விற்பனை இருந்ததால் விற்பனையாளர்களை எல்லாம் இணைக்க நிறுவனத்திற்கென்று ஒரு மாத இதழைப் பிரசுரிக்கத் தீர்மானித்தேன்.

எனவே, எனக்கு அடுத்த நிலையில் உள்ள துணைத் தலைமை நிர்வாகியை அணுகி இதைப் பற்றிக் கூறினேன். "இதை எடுத்துக் கொள்ள முடியுமா?" என்று கேட்டேன். எங்கள் தேசிய விற்பனை மேலாளர் அல்லது துணைத்தலைமை நிர்வாகி என்பவர் மிகப் பெரிய மனிதர். உயரத்தில் மட்டுமல்ல. அரசியலில் செல்வாக்கு மிகுந்தவர். நமது ஊர் போல அரசியல் செல்வாக்கு அங்கே எந்த நிறுவனத்தையும் பாதிக்காது.

அவர் அந்த மாநிலத்தில் ஆளுனர் பதவிக்குப் போட்டியிட்டு குறைந்த வோட்டுகளில் தோற்றவர். அதாவது முதல்வர் பதவிக்குச் சமமான பதவிக்குப் போட்டியிட்டவர். அமெரிக்க துணை ஜனாதிபதியாக இருந்தவரின் நண்பர். அடிக்கடி ஆலோசனைக்காக வாஷிங்டன் செல்பவர்.

சொன்னார் "இது பெரிய வேலை. இரண்டு மூன்று நாட்கள் எடுத்துக் கொள்ளும். நமக்கு பத்திரிகை தேவை இல்லை. போன் மூலம் நேரடியாக நாம் பேசி விடலாம். எல்லாம் சரியாகத்தான் போய்க் கொண்டிருக்கிறது" என்றார்.

"மாற்றங்களைப் புதிதாகப் பதவி ஏற்கும் நீங்கள் ஏற்படுத்தினால் மட்டும் போதாது. மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்கிற உணர்வு எல்லோரிடத்திலும் ஏற்பட வேண்டும். பழைய பாதையில் வண்டி ஓடாது, என்கிற ஒரு விழிப்புணர்வை ஏற்



படுத்த வேண்டும். ஒரு 'அதிர்ச்சி' - ஒரு வித்தியாசம் - மாறுபட்ட சூழ்நிலையில் நிறுவனம் இயங்குகிறது என்ற உணர்வு எல்லோரிடமும் இருக்க வேண்டும். அதில் ஒன்றுதான் இந்தப் பத்திரிகை. இது மிக அவசியம் என்பது என் கருத்து."

ஆனால் எங்கள் தேசிய விற்பனை மேலாளருக்கோ, 'நான் அவர் துறையில் நுழைகிறேன்; எனது ஆக்கிரமிப்பை வெளிப்படுத்துகிறேன்' என்ற எண்ணத்தை என் பேச்சு அவர் மனத்தில் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை உணர்ந்தேன். இதுதான் 'யார் பெரியவர்?' என்கிற போராட்டம். 'நீ புதியவன்தானே?' என்று நம்மைப் பழையவர்கள் சவால் விடுகிற கால கட்டம்.

"கவலைப்படாதீர்கள். நான் பார்த்துக் கொள்கிறேன். இது பெரிய விஷயமல்ல..." என்று எழுந்தேன். அப்போது அமெரிக்க நிர்வாகத்தில் அதிகமாகப் புழங்கப்பட்ட வார்த்தை (Attitude) 'மனோபாவம்' என்பதாகும். விற்பனையாளர்கள் யாராவது எதிர்த்தோ, மறுத்தோ சொன்னால், எங்கள் மேலாளர் 'உனக்கு சரியான மனோபாவம் இல்லை' என்று சொல்வாராம். நான் பார்த்த அளவில் அங்கு சூழ்நிலை சரியில்லை; பொருளின் தரம் சரியில்லை. பொருளை உள்ளே கொண்ட அட்டைப் பெட்டி சரியாக இல்லை. எல்லாம் ஏனோதானோ என்றிருந்தது. பணி புரிபவர்களிடையே உற்சாகம் இல்லை. யாரோ அதுவும் முக்கிய மானவர்கள் அவர்களுடன் துணை நிற்கிறார்கள் என்கிற உணர்வு அங்கே இல்லை. மேலே இருக்கும் மனிதன் நிறுவனத்தில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்கிறான் என்பது ஒரு விஷயம். அத்துடன் நம்மீதும் அக்கறை எடுத்துக் கொள்கிறான்; நம்முடன் பேசுகிறான், நாம் சொல்வதைக் கேட்கிறான் என்கிற எண்ணம் இருக்கிறதே, அது மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும் வைட்டமின் மாத்திரை. அதாவது, சூழ்நிலை மோசமாக இருந்தது.

நிறுவனரின் காரியதரிசி, "நீங்கள் உங்கள் செய்திகளைக் கொடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்றார். 52 வயதுப் பெண்மணி அவர். அனுபவமும் கண்டிப்பும் மிக்கவர். உள்ளூரில் ஒரு அணுசக்தி மின்சாரத் தொழிற்சாலையை நிறுவ

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

அமெரிக்க நிறுவனம் ஒன்று திட்டமிட்ட போது 'அணுசக்தி மின் நிலையம் இங்கு வரக்கூடாது' என்று போராட்டத்தில் ஈடுபட்டு வென்றவர்.

பத்திரிகைக்கு விற்பனையாளர்களிடமும் மற்றும் எல்லா தொழிலாளர்களிடமும் அபரிமிதமான வரவேற்பு. "எங்கே அந்தப் புலி?" என்று கேட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தார் எங்கள் நிறுவன உரிமையாளர். எப்போதும் என்னைச் செல்லமாகப் பெருமையுடன் 'டைகர்' என்றுதான் அவர் அழைப்பது வழக்கம்.

இப்போது பொருள் நன்றாக இருந்தது. ஆனால் அதை உள்ளடக்கிய 'பேக்கிங்', மேலே எழுதப்பட்டிருந்த வாசகம், பொருளின் போட்டோ எல்லாமே எனக்குப் பிடிக்கவில்லை. மாற்றம் உள்ளே இருக்கிறது

என்று எப்படிக் காட்டுவது? வெளியேயும் மாற்றத்தைக் காட்டினால் அல்லவா தெரியும்?

அமெரிக்காவில் - விற்பனையில், விளம்பரத்தில் அதிகம் உபயோகப்படுத்தப்படும் வார்த்தை "புதிது" (New) என்கிற வார்த்தைதான். 'புதிய தரமான பொருள்; புதிய சௌகரியமான 'பேக்கிங்'; புதிய மூடி; புதிய வாசனை; புதிய வாங்கக்கூடிய சைசில்' என்று எங்கு பார்த்தாலும் இந்தப் 'புதிய' தான்! எப்போது பார்த்தாலும் இது விளம்பரத்தில் அதிகம் வரும்.

எங்களது புதிய பொருளோ ஒரு நிறைவான உணவை உட்கொண்ட மன நிறைவைத் தருவது; திருப்தியைத் தருவது. "கனம் நீதிபதி அவர்களே" என்று சொல்கிறோமே அது போன்ற 'கனம்' நிறைந்தது. அப்படிப்பட்ட பொருளின் தன்மையை விளக்குகிறாற்போல அதைப் பிரதிபலிப்பதாக எழுத்தின் 'கனம்' இல்லை. ஊரில் இருக்கும் சிறந்த விளம்பர ஓவியரை அழைத்தேன். விஷயத்தைச் சொன்னேன். உணவுக்கு சகஜமாக சிவப்பு ஆரஞ்சு மஞ்சள்தான் கண்ணைப் பறிக்கும் - கவனத்தைத் திருப்பும் நிறங்கள். பச்சை வண்ணத்தில் உணவுப் பொருளின் படத்தைத் தயாரித்து ஒட்டினீர்களானால், இரைகளை வேண்டுமானால் விற்கலாம் - மற்றபடி நல்ல உணவு பொருட்களை விற்க முடியாது!

சாப்பிடும் நிலையில் உள்ள சூடான பொருளை கவனமாக அழகாக அதை வெட்டித் துண்டு போடுவது போல போட்டோ எடுத்தார்கள். எல்லாம் சேர்ந்து புதிய பொருள், புதிய வண்ணப் பெட்டி என்று எல்லாம் பிரமாதமாக, எங்கள் பொருட்கள் கண்களைக் கவரும் வண்ணம் கடைகளின் தட்டுக்களை அலங்கரித்தன.

அடுத்ததாகப் பொருளை விளம்பரம் செய்ய எண்ணினேன். எனக்கு முடிவெடுக்கும் எல்லா உரிமைகளும் இருந்தாலும் முக்கியமான முடிவுகளில் நான் எங்கள் நிறுவன உரிமையாளரிடம் மனம் விட்டுப் பேசுவது வழக்கம். அவரது ஒப்புதலைப் பெற்றுத்தான், நான் மேலே நடவடிக்கை எடுப்பது.

ஆனால், நிறைய கேள்விப் பட்டிருந்தேன், அவருக்கு விளம்பரத்தில் நம்பிக்கையில்லை என்று! இது எனக்கு சற்று அதிர்ச்சியாக இருந்தது. சாதாரண பொருட்கள்கூட அடிக்கடி விளம்பரம் செய்வதன் மூலமே மக்கள் மனத்தில் நிற்கின்றன; அவர்களை வாங்கத் தூண்டுகின்றன.

அவருடன் பேசி அவருக்கு விளம்பரத்தின் அவசியத்தையும் நியாயத்தையும் எடுத்துச் சொல்லி, ஒரு புதிய திறமை வாய்ந்த டீ.வி. விளம்பரக் கம்பெனியுடன் நாங்கள் ஒரு ஒப்பந்தம் செய்தோம். விளம்பர நிறுவனத்தின் சாதனைகளைப் பற்றி வால்ஸ்டீரிட் ஜர்னல் என்ற பிரபல நாளிதழ் - வர்த்தக இதழ் ஒரு கட்டுரை எழுதி



இருந்தது. அந்த விளம்பர நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டோம். ஒரு அரை நிமிடம் அதாவது 30 வினாடிகள் ஓடக்கூடிய ஒரு டீ.வி விளம்பரத்தைத் தயார் செய்ய காலை மணி 9லிருந்து இரவு ஏழு மணி வரை ஆயிற்று. நானும் முழுக்க முழுக்க இதற்காக சிகாகோ சென்று உடனிருந்தேன். அதுவும் நல்ல பிரமாதமான விளம்பரமாக அமைந்ததில் எனக்குப் பெரும் திருப்தி.

ஆனால் விளம்பரத்தை ஒருமுறைதான் போட்டோம் டெலிவிஷனில். காரணம் எங்கள் உரிமையாளர் இது வீண் செலவு என்று கூறி விட்டார்! எனக்கு அதிர்ச்சி. என்ன செய்வது? எங்கள் உரிமையாளருக்குத்தான் விளம்பரத்தில் நம்பிக்கை

இல்லையே! எந்தச் சூழ்நிலைகளில் நாம் இருக்கிறோமோ அதற்குள்தான் நாம் நம் கம்ப சித்திர வேலைகளைக் காட்ட வேண்டி இருக்கிறது!

அடுத்து அங்கே ஆண்டுதோறும் டல்லஸ் மாநகரில் மிகப் பெரிய ஹாலில் அமெரிக்காவின் மிகப் பெரிய உணவுக் கண்காட்சி நடைபெறும். புதிய புதிய பொருள்களை விற்பவர்களும் பெரும் பெரும் கடை போட்டிருப்பார்கள். இதில் நமது நிறுவனமும் பங்கு பெற வேண்டு மென்று அங்கு நாங்கள் ஒரு கடையைப் (Stall) போட்டிருந்தோம்.

இந்தச் சமயத்தில்தான் அமெரிக்கா முழுதும் பூச்சி மருந்து அடிக்கப்படாத இயற்கைக் காய்கறி உணவின் முக்கியத் துவமும் அதேபோல, "எடையைக் குறை யுங்கள். 'டிரிம்'மாக இருங்கள்" என்ற கொள் கையும் மக்களிடையே வெகுவேகமாகப்



பரவியது. எல்லோரும் தங்கள் எடையைப் பற்றி – ஊளைச் சதையைப் பற்றி – மிகவும் அக்கறைப்பட ஆரம்பித்தார்கள். கோகோ கோலா, பெப்சி போன்ற பானம் தயாரிக்கும் நிறுவனங்களும்கூட 'லோ கலோரி' - சர்க் கரை குறைந்த பானங்களை சந்தைக்குக் கொண்டு வந்தார்கள். சர்க்கரைக்குப் பதில் 'சக்கரின்' என்ற தித்திப்புத் தரும் ரசாயனம்; எங்குப் பார்த்தாலும் மாவுப் பொருளுக்குப் பதில், நார்ச் சத்து மற்றும் தவிடு போன்ற பொருளை வைத்துத் தயாரிக்கும் குறைந்த கலோரி உணவுகள் என்கிற ஒரு நிலை துவங்கிக் கொண்டிருந்தது.


உடனடியாக, நாங்கள் எங்கள் உணவுப் பொருட்களில் 'லோ கலோரி'ப் பொருட் களை அறிமுகம் செய்யத் துவங்கினோம். அதே போன்று எந்தவித செயற்கை ரசாயனப் பொருளும் கலவாத உணவுப் பொருளைத் தயாரித்து, அதற்கு "இயற்கை உங்களுடன்'' (naturally yours) என்ற பொருளில் எங்கள் உணவுப் பொருள் ஒன்றை அறிமுகம் செய்தோம். இதை எல்லாம் தூக்கி அடிக்கினாற் போல நாங்கள் செய்த 'லோ கலோரி' பொருள் ஒன்றை கோதுமைத் தவிட்டை உபயோகித்துச் செய் தோம். அதன் மணமும், ருசியும் அது தரும் கரகரப்பு அனுபவமும் எங்களிடமிருந்த எல்லாம் பொருட்களையும்விட சிறப்பான தாக இருந்தது.

பத்திரிகையில் நாங்கள் விளம்பரங்கூடக் கொடுக்கவில்லை. புதிய பொருள் ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறோம் என்ற அறிமுகத் தகவலைத்தான் பத்திரிகைகளுக்கு அனுப்பி இருந்தோம்.

நான் ஊரில் இல்லாத சமயம் பல ஊர்களில் சுமார் 94 கடைகளைக் கொண்ட ஒரு பெரிய 'செயின்' நிறுவனத்தின் தலைவர் என்னைக் கூப்பிட்டிருக்கிறார். நான் ஊர் திரும்பிய பின், அவர் இது விஷய மாக என்னுடன் பேசினார்; உடனடியாக வரச் சொன்னார். பிரபலமான ஒரு வினியோக நிறுவனத்தினருடன் எங்கள் பொருளைப் பற்றி எங்களுக்காகப் பேசி எங்களது வினியோகஸ்தராக அவரை ஏற்பாடு செய்தார். அந்தப் பகுதியிலேயே இதுநாள் வரை நாங்கள் இல்லை. எனவே பிரபல வினியோகஸ்தர்கள் நமது பொருளை வினியோகிக்க லேசில் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அது மட்டுமல்ல; அந்த கடையின் தலைமை நிர்வாகி நான் அங்கு சென்று பேசிய பிறகு, பொருளை சோதித்து அதன் தரத்தைக் கண்டு மகிழ்ந்தபோது உடனடியாக ஒரு 'லாரி லோடு' பொருளை ஆர்டர் செய்தார்! இவை எல்லாம் நம்ப முடியாத அளவுக்குப் போய்க் கொண்டிருந்தன! அதிசயத்தின் மேல் அதிசயமாக நிகழ்ந்து கொண் டிருந்தன!

(தொடரும்)

உலகப் புகழ்பெற்ற கார்ட்டூனிஸ்ட் ஆர். கே. லக்ஷ்மண் உருவாக்கிய திருவாளர் பொது ஜனத்துக்கு இப்போது பொன்விழா. ஆர்.கே. லக்ஷ்மணின், கடந்த பதினைந்து வருட நெருங்கிய நண்பரான 'ஹிந்து' ராம், ஆர்.கே. லக்ஷ்மண் பற்றியும், அவரது கார்ட்டூன் ஹீரோ பற்றியும் சொல்லுகிறார்...



50 பொன்விழா காணும் திருவாளர் பொதுஜனம்!

அமெரிக்காவின் சுதந்திர தேவி சிலையை ஒட்டி, அதைவிடப் பெரிசாக ஜெயலலிதாவின் கட்-அவுட். அந்தப் பக்கமாய் வரும் ஹெலிகாப்டரிலிருந்து ஒருவர் கட்டளை இடுகிறார். "அவரது அமெரிக்கப் பயணம் ரத்தாகி விட்டது; கட் அவுட்டை பிரித்து எடுத்து விடுங்கள்!"

ஜெயலலிதாவின் கட்-அவுட் கலாசாரத்தை இடித்துக் காட்டும் கார்ட்டூன்!

மூப்பனார், சுவரில் சாய்ந்து, தேம்பித் தேம்பி அழுது, தரை முழுவதும் கண்ணீர். ஒருவர் கேட்பார் : "அவர் ஏன் அழுகிறார்?"

"தன்னலமின்றி மக்களுக்குச் சேவை செய்வதற்காக, பிரதமராக விரும்பினாராம். முடியாமல் போனதில் வருத்தம்!"

மூப்பனார் பிரதமராகும் வாய்ப்பு, தடுக்கப்பட்டு விட்டதாகச் செய்தி வந்த போது, லக்ஷ்மண் போட்ட கார்ட்டூன்.

'டெலிபோன் ஊழல்' புகழ் சுக்ராம் டெலிபோனில் பேசுவார்; அறை முழுக்க ரூபாய் நோட்டுகள் இறைந்து கிடக்கும்.

"சே! அவசரத்துக்கு, ஒரு துண்டு பேப்பர் கிடைக்கவில்லை!" என்பார்.

மகாத்மா காந்தி ரோடு என்று பெயரிடப்பட்ட சாலை முழுக்க பெப்சி, கோக் விளம்பரங்கள், குளிர்ப்பான சப்ளை வேன்கள். (இதற்கு விளக்கமே தேவையில்லை).

– இப்படி நான் மிகவும் ரசித்த லக்ஷ்மண் கார்ட்டூன்களைப் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம். அண்மையில் அவருடைய இருபதாயிரத்துக்கும் அதிகமான கார்ட்டூன்களிலிருந்து அவரே தேர்ந்தெடுத்த 200 கார்ட்டூன்களைத் தொகுத்து, 'திருவாளர் பொது ஜனத்தின் பார்வையில் ஐம்பது ஆண்டுகள்' என்று புத்தகமாய் வெளியிட்டிருக்கிறார். (டைம்ஸ் பப்ளிகேஷன்ஸ், விலை ரூ. 525) மிக அருமையான ஒரு தொகுப்பு அது.

"இந்திய அரசியல்வாதிகளினால்தான் என் பிழைப்பு ஓடிக் கொண்டிருக்கிறது. தினமும் எனக்கு கார்ட்டூன்கள் போட, ஐடியா சப்ளை செய்து எனக்குப் பேருதவி புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இல்லாவிட்டால், என் திருவாளர் பொது ஜனம் ஜனித்திருக்கவே மாட்டார்!" என்று தமாஷாக அவர் குறிப்பிடுவதுண்டு.

தினமும் காலை எட்டு மணிக்கு மும்பையில் உள்ள டைம்ஸ் ஆஃப் இந்தியா அலுவலகத்துக்கு வந்து விடுவார். உடல் நலம் பற்றி அதிக அக்கறை எடுத்துக்

கொள்ளுவார் அவர். அதனால், நாலாவது மாடியில் உள்ள அவரது அறைக்குச் செல்ல லிப்டைப் பயன்படுத்தாமல், படியேறிச் செல்லுவார்.

என்ன கார்ட்டூன் போடுவது என்று சிந்தித்து முடிவு எடுக்கத்தான் அதிக நேரம் எடுத்துக் கொள்ளுவார். முடிவு செய்தபின், ஒருசில நிமிடங்களில் வரைந்து முடித்து விடுவார்.

இந்தியாவின் மிக அற்புதமான கார்ட்டூனிஸ்ட் லக்ஷ்மண் என்பது என் கருத்து. ஐம்பது ஆண்டுகள் நிலைத்து நிற்பது என்பது சாதாரண விஷயமா என்ன? அதுவும், இந்திரா காந்தி நெருக்கடி நிலையை அறிவித்த போது, முகத்தில் அறைந்தாற்போல, அத்தனை பத்திரிகை சென்சார் கட்டுப்பாடுகளையும் மீறி வெளிவந்த லக்ஷ்மணின் கார்ட்டூன்களை மறக்க

• ஆர். கே. லக்ஷ்மண்



முடியுமா? இந்திரா காந்தியே அவற்றைப் பார்த்து மிரண்டு போனார். ஏதாவது செய்து, லக்ஷ்மண் கார்ட்டூன்களை நிறுத்த வேண்டும் என்று படாதபாடுபட்டார். லக்ஷ்மணின் மூத்த சகோதரரான எழுத்தாளர் ஆர்.கே. நாராயணனிடம், "உங்கள் தம்பியிடம், என்னைக் கடுமையாய் விமர்சித்து கார்ட்டூன் போட வேண்டாம் என்று அறிவுரை சொல்லுங்களேன்!" என்று கேட்டுக் கொண்டார். ஆனால், நாராயண், "ஐயோ! அவன் நான் சொன்னால் மட்டுமில்லை... யார் சொன்னாலுமே கேட்க மாட்டானே!" என்று சொல்லி விட்டார். ஆமாம்! நாராயண் சொன்னதில் சற்றும் மிகையில்லை.

அவருக்கு, அயல்நாட்டுப் பத்திரிகைகள் பலவற்றிலிருந்து கார்ட்டூனிஸ்ட்டாகப் பணிபுரிய வாய்ப்புகள் வந்தன. ஆனால், 'இந்தியா போல, இந்திய அரசியல் போல எங்கும் வராது' என்று சொல்லி அந்த வாய்ப்புகள் அனைத்தையும் மறுத்து விட்டார்.

தமிழ் நன்றாகப் பேசுவார் லக்ஷ்மண். ஆனாலும், அவர் பிறந்து வளர்ந்தது எல்லாம் கர்நாடகாவில் என்பதால், தமிழை விட கன்னடம் வெகு சரளமாய் வரும்.

சிறு வயது முதற்கொண்டே லக்ஷ்மணுக்கு, படம் வரைவதில் ரொம்ப ஆர்வம். ஒரு தடவை, அவரது வீட்டின் தரையில் அவருடைய அப்பாவைப் போலவே, சாக்பீசால் உருவம் வரைந்து வைத்திருக்க, அதைப் பார்த்து விட்டு, லக்ஷ்மணனின் அப்பா கிருஷ்ணசாமி ஐயங்கார் கோபத்தில் குதிக்க, அம்மா ஞானாம்பாள், குழந்தையின் திறமையைப் பாராட்டாமல், இப்படிக் கோபப்படுவது தவறு என்று சுட்டிக்காட்டினாராம்!

டைம்ஸ் ஆஃப் இந்தியாவில், லக்ஷ்மணின் கார்ட்டூன்கள் ஏதாவது என்னை மிகவும் கவர்ந்து விட்டால், உடனே அவருக்கு டெலிபோன் செய்து, அந்தக் கார்ட்டூனின் ஒரிஜினலை, எனக்கு வேண்டும் என்று 'புக்' பண்ணி விடுவேன். இப்படி என் கலெக்ஷனில், இருபத்தி ஐந்துக்கும் அதிகமான லக்ஷ்மணின் ஒரிஜினல் கார்ட்டூன்கள் உள்ளன. ஒரிரு சமயங்களில், மிகவும் உயர்வாய் மதிக்கிற என் அயல்நாட்டு நண்பர்களுக்கு, நான் லக்ஷ்மணின் ஒரிஜினல் கார்ட்டூன்களை பரிசளித்திருக்கிறேன். அப்போது, அவர்கள் முகத்தில் ஏற்படும் சந்தோஷத்தைப் பார்க்க வேண்டுமே!

சந்திப்பு : மௌலி

அட, இதுல இவ்ளோ விஷயம் இருக்கா?



ஆகும்.

வீங்கின பகுதி ஐந்து மில்லி மீட்டர் நீளத்தைவிட குறைவான விட்டம் கொண்டதாக இருந்தால், அதற்குக் காரணம் வேறு சில இயற்கையான உடல் மாற்றங்களே தவிர டி.பி கிருமிகள் அல்ல என்று டாக்டர் தீர்மானிப்பது வழக்கம். ஐந்திலிருந்து பத்து மில்லி

காசநோயைக் கண்டுபிடிப்பது எப்படி?

மான்டோ (Mantoux) சோதனை யாருக்காவது செய்யப்படுகிறது என்றால் அவர் டி.பி.யால் பாதிக்கப்பட்டிருப்பாரோ என்ற சந்தேகம் டாக்டருக்கு எழுந்திருக்கிறது என்று அர்த்தம்.

இந்தச் சோதனையை, தோலின் குறிப்பிட்ட வகைப் புரதங்களை ஊசியின் மூலம் தோலில் செலுத்துவதன் மூலம் செய்வார்கள். காச நோய் (அல்லது எலும்புருக்கி நோய் அல்லது டி.பி) உண்டாக்கும் பாக்டீரியா கிருமிகளின் உடலில் காணப்படும் புரதத்தைத்தான் இப்படி செலுத்துகிறார்கள்.

ஏற்கெனவே ஒருவரது உடலை காச நோய்க் கிருமிகள் தாக்கியிருந்தால் அவரது ரத்தத்தில் அந்தக் கிருமிகளுக்கு எதிரான சத்துக்கள் (ஆண்ட்டிபாடீஸ்) சுற்றிக் கொண்டிருக்கும். சோதனையின்போது கிருமிகளின் புரதம் உடலில் செலுத்தப்பட்டவுடன், அவற்றைத் தாக்கி அழிப்பதற்காக இந்த எதிர் சத்துக்கள் வேகமாக அந்த இடத்துக்குப் பாய்கின்றன. யுத்தம் தொடங்குகிறது! சேதம் இல்லாத போர் இருக்க முடியுமா? ஊசியைச் செலுத்திய இடத்தில் ஒரு வீக்கம் தோன்றும்; அந்த இடம் சிவப்பாக மாறும். இப்படியெல்லாம் ஆவதற்கு இரண்டிலிருந்து மூன்று நாட்கள் மீட்டர் வரை என்றால் அவர் உடலில் காச நோய் தாக்கியிருப்பதற்கான வாய்ப்பு ஓரளவுக்கு உண்டு. பத்து மில்லி மீட்டருக்கும் மேலே என்றால் காச நோய் இருக்கிறதோ இல்லையோ, அதை உண்டாக்கும் கிருமிகள் அவர் உடலில் உள்ளன என்பதற்கு அது மிக நிச்சயமான ஆதாரம். இந்தத் தகவலோடு நோயாளியின் பூர்வ சரித்திரத்தையும் முழுமையாகக் கேட்டு விட்டு டாக்டர் சிகிச்சையளிக்கத் தொடங்குவார்.

காசநோய்க்குக் காரணமான கிருமிகள் பெரும்பாலும் நுரையீரலில் உள்ள மிகச் சிறிய காற்றுப் பைகளில் வந்து உட்கார்ந்து விடுகின்றன. பெரும்பாலும் அப்போது ஃப்ளூவினால் பாதிக்கப்படும்போது உடலில் என்னென்ன மாற்றங்கள் நிகழுமோ அதெல்லாம் நடக்கும். பலநாட்களுக்குப் பிறகு இந்தக் கிருமிகள் மூளை, எலும்புகள் ஆகிய பகுதிகளுக்குப் பரவும்.

பரவுவது மட்டுமல்ல, ஒரு பத்து வாரங்களுக்குள் இவை பெருகவும் தொடங்கும். எந்தப் பகுதிகளில் பாதிப்பு இருக்கிறதோ அங்கே வீக்கம் தொடங்கும். உடனே உடலில் உள்ள வெள்ளை அணுக்களும் சில வகைத் திசுக்களும் ஒன்று சேர்ந்து காசநோய்க் கிருமிகளை எதிர்க்கின்றன. அவற்றைக்



''இதுக்குத்தான் நம்ம படத்திலே அதிகம் தற்கொலைக் காட்சி வைக்க வேண்டாமுன்னு சொன்னேன்?''

''இப்ப என்னாச்சி?''

''ஃபர்ஸ்ட் காப்பி' போட்டுப் பார்த்த பைனான்சியர் விஷம் குடிச்சுட்டு உயிருக்குப் போராடிக்கிட்டு இருக்காரு!''

— வீ.எஸ். கணேசன்



'இந்தக் காலத்து திருடனுங்க கூட நேரம் காலம் பார்த்துத்தான் திருட வர்றானுக!''

''அப்படியா?''

''இதோ பாரேன்! என் மனைவி கோபிச்சுட்டு அம்மா வீடு போயிருக்கறதை எப்படியோ தெரிஞ்சுக்கிட்டு, நேத்து ராத்திரி என் வீட்டுக்குத் திருடன் வந்து எல்லாத்தையும் துடைச்சு எடுத்திட்டுப் போயிட்டான்!''

— அம்பை தேவா



''உன் கணவர் ஊருக்குப் போறப்போ எப்பவும் பெட்டி மட்டும்தானே கொண்டு போவார். இந்தத் தடவை தலையணை போர்வை எல்லாம் கொண்டு போறாரே?''

''இப்போ ஆபீஸ் விஷயமால ஊருக்குப் போறார்!''

— எஸ். உஷாதேவி

கொல்ல முடியாவிட்டாலும், அவற்றைச் சுற்றி ஓர் அரண் போல சூழ்ந்து கொண்டு, அவை அதற்கு மேல் பரவாமல் பார்த்துக் கொள்கின்றன. இந்த நிலையில் கிருமிகளின் ஆட்டம் தாற்காலிகமாகவாவது ஒரு முடிவுக்கு வருகிறது.

ஆனால் நாளடைவில் (ஏன் சில வருடங்களுக்குப் பிறகு கூட) அந்த நபரின் உடல் நலம் சீர்கெட்டுப் போனால், செயலிழந்து போன காசநோய்க் கிருமிகளுக்கு ஒரு திடீர்ப் புத்துணர்ச்சி ஏற்பட்டு, பலவீனம் அடைந்துபோன அரணைத் தாக்கித் தகர்த்து விட்டு வெளியேறுகின்றன.

காச நோய்க் கிருமிகள் பெருக வேண்டுமானால் அவற்றிற்கு ஆக்ஸிஜன் தேவை. இதற்கு நுரையீரலைவிடச் சிறந்த இடம் ஒன்று இருக்க முடியுமா? எனவே நுரையீரலின் மேற்பகுதிகளில் இவை தங்குகின்றன; பெருகுகின்றன. அதோடு சும்மா இருக்காமல் நுரையீரலில் சிறு சிறு துளைகளை உண்டாக்கிச் சேதம் விளைவிக்கின்றன. இந்தச் சமயத்தில்கூட சிகிச்சை எடுத்துக் கொள்ளாவிட்டால் அது பெரும் ஆபத்தில் முடியலாம்.

அது சரி, இந்தக் கட்டத்தை எப்படி நாம் உணர்ந்து கொள்வது? எந்தக் குறிப்பிட்ட காரணமும் இல்லாமல் எடை குறைதல், எப்போதும் ஒரு களைப்பு, வெண்மைக் கட்டிகள் நிறைந்த கோழை வெளிப்படுதல் (அதில் ரத்தம்கூட கலந்திருக்கலாம்), இரவுகளில் வியர்த்துக் கொட்டுதல் ஆகியன சில எச்சரிக்கை மணிகள். முக்கியமான தங்குமிடம் நுரையீரல்தான் என்றாலும், இந்த நாசக்கார கிருமிகள் மூளை, கல்லீரல் சிறு நீரகங்கள் ஆகிய இடங்களிலும் தங்கள் கைவரிசையைக் காட்டத் தயங்குவதில்லை. நுரையீரலில் ஏற்பட்ட பாதிப்பை அறிந்து கொள்ள எக்ஸ்ரேவும் உதவுகிறது.

(தொடரும்)

— ஜி.எஸ்.எஸ்



கல்கி
ஆகஸ்ட் 2
ஆண்டு மலரில்
சுஜாதா
எழுதும்
ஆரவாரமான
த்ரில்லர்
ஆர்யபட்டா
ஆரம்பம்!
அமரர் கல்கி நூற்றாண்டு விழா சிறப்புச் சிறுகதைப் போட்டியில்
10,000
ரூபாய் பரிசு
பெறும் சிறுகதை
● கல்லூரி மாணவ-மாணவியரின் கலக்கல் பக்கங்கள்
● பிரபலங்களின் மறுபாதி!
இன்னும் பிரமிப்பூட்டும் ஏராள புதிய அம்சங்கள்!

கண்டாலா போகலாம் வரியா?

தேடினால் வருமா?

முதலிரண்டு நாட்கள் 'ஹலோ' சொல்லிவிட்டு ஒளிந்து கொண்டு விட்டது. 'எங்கே காணோம்?' என்று தேடிக் கொண்டிருந்த மும்பைவாசிகளுக்கு, 'இதோ இருக்கிறேன்' என்று சொல்லாமல் சொல்லி, கொட்டோ கொட்டென்று கொட்டித் தீர்த்து விட்டது பேய் மழை! ரயில்வே ட்ராக்குகளும், சாலைகளும் வெள்ளத்தில் மறைய, ட்ரெயின்களும் பஸ்களும் கப்பல்களாக மாறித் தத்தளிக்க, மும்பை வாழ்க்கையே ஸ்தம்பித்தது! 'மழைக்கு முன் கழிவு நீர் வாய்க்கால்களில் 'தூர்' எடுப்பதற்கென்றும், பாதை செப்பனிடுவதற்கென்றும், கார்ப்பரேஷனால் ஒதுக்கப்பட்ட 12 கோடிகளும், எங்கே போயிற்று? எந்தெந்த காண்ட்ராக்டர்களும், கவுன்சிலர்களும், ஆபீஸர்களும் பங்குபோட்டுக் கொண்டார்கள்?' என்று, மக்கள், அடுத்த கட்டமாகத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்!

'பிழை'க்கும் வழி!

தாதரிலுள்ள பிரபல ஸர்ஜன் ஒருவர், தம் ஆஸ்பத்திரியையும் மனைவி மக்களையும் 'பாம்' வைத்து 'குளோஸ்' பண்ணப் போவதாக அடிக்கடி தாவூத்தின் அடியாள் அப்துல், ஃபோனில் மிரட்டி, பணம் பறிக்க முயலுவதாக 'கம்ப்ளெயிண்ட்' செய்ய, காவல் துறை சோர்ந்தே விட்டது! 'செக்யூரிட்டி' பிரச்னைகள் உள்ளவர்கள் லிஸ்ட்டில், பில்டர்கள், ரியல் எஸ்டேட்காரர்கள், சினிமாக்காரர்கள், அரசியல்வாதிகள் போதாதென்று, டாக்டர்களும் சேர்ந்து விட்டார்களா?' என்று போலீசார் தலையில் கையை வைத்து, உட்கார்ந்தே விட்டார்கள். கடைசியில், டாக்டரின் டெலிஃபோனை கண்காணித்ததில், மிரட்டல்காரன் 'அப்துல்' பிடிபட்டான்! விசாரித்தால்... அவன் அசல் பெயர் மாணிக் நாராயண் கோயலாம்; 44 வயதான இந்த நொடித்துப் போன வியாபாரி, அதே சர்ஜனின் ஆஸ்பத்திரியில் நீண்ட கால நோயாளியாம்; மருத்துவச் செலவுக்கான பணத்தைத் திரட்ட, கொள்ளைக்கார சர்ஜனிடமிருந்தே கொள்ளையடிக்கத் திட்டமிட்டானாம். அசடு! சொந்த ஃபோனிலா மிரட்டுவது? கத்துக் குட்டியாக இல்லாமல், தாவூத்திடமே கத்துக்கிட்டிருந்தால் 'பிழை'க்கக்கலாமில்லை?


டுடோரியல்களுக்கு டாட்டாவா?

'ப்ரைவேட் கோச்சிங் க்ளாஸஸ்' என்ற போர்வையில் பெற்றோர்களைச் சூறையாடிக் கொண்டிருந்த மாநிலம் தழுவிய முகமூடிக் கூட்டத்தின் முகத்திரை, 'ஹை கோர்ட்' பிறப்பித்துள்ள உத்தரவால், தாறுமாறாகக் கிழிக்கப்பட்டிருக்கிறது. இனி பள்ளிகள், கல்லூரிகளில் ஆசிரியர்களாக இருப்பவர்கள், பிரைவேட் ட்யூஷன்கள் எடுக்கக் கூடாதாம்! ஒரு சப்ஜெக்டுக்கு குறைந்தபட்சம் ஆறாயிரம் என்பதிலிருந்து, அதிகபட்சம் 15 ஆயிரம் வரை 'ஃபீஸ்' வைத்து, சொந்த முயற்சியால் உழைத்துப் படித்து மெரிட்டில் தேறியவர்களின் ஃபோட்டோக்களை, அவர்களறியாமலே, தங்கள் மாணவர்கள் என விளம்பரப்படுத்தி, போர்டு எக்ஸாமுக்கு வினாத்தாள்களை 'ஸெட்டப்' செய்பவர்களை தேடிப் பிடித்து, அதிகப் பணம் கொடுத்து, கோச்சிங் க்ளாசில் ஆசிரியராக்கி, பரீட்சை சமயத்தில் பேப்பர்களை 'லீக்' செய்து... இப்படியே பணம் பண்ணிக் கொண்டிருந்த ஏராளமான கோச்சிங் க்ளாஸ்களின் எதிர்காலம் 'ஸீல்' வைக்கப்பட்டிருக்கிறது! இனி இவை இயங்க வேண்டுமென்றால், உருப்படியான, விஷய ஞானமுள்ள, பள்ளி கல்லூரிகளில் ஆசிரியராக இல்லாத, தரமான, திறமையான போதனையாளர்களைப் பிடிக்க வேண்டுமே... நடக்கிற காரியமா?

கண்டாலாவில் களிக்க வாரியளா...?

தற்சமயம் ஒவ்வொரு மும்பைக்காரரின் நாவிலும் உறவாடும் – ஸாரி உரையாடும் – பாடல், "ஏய் சுனோ.. 'ஆதித் க்யா கண்

டாலா?" 'குலாமி'ல், ஆமீர்கான் சொந்தக் குரலில் பேசி, ஸாரி பாடி, ராணி முகர்ஜியை 'கண்டாலா போகலாம் வரியா?' என்று கேட்கும் இந்தப் பாடலை, நிமிடத்துக்கொருமுறை டீ.வி.யில் காணலாம். இந்த ஸூப்பர் 'ஹிட்'டை, மஜ்ரு சுல்தான் புரி, தலாக் முகமதின் நினைவஞ்சலியின் போது கிண்டலடித்து, பாடலாசிரியர், "prostitution of the pen"ல் திளைத்திருப்பதாகக் கூறி விட்டார். அவ்வளவுதான்... படத்தின் தயாரிப்பாளர் 'முகேஷ் பட்'டும் அண்ணன் 'மகேஷ் பட்'டும் பட்பட்டென்று பட்டாசாக வெடித்திருக்கிறார்கள். "சுல்தான் புரிக்கு கிழடு தட்டி விட்டது; அதான் இளமைத்தனமான பாடல் ரசிக்கவில்லை; இவர் அந்தக் காலத்தில் C-A-T cat, Cat மனேபில்லி (பூனை); R-A-T rat, rat மனே 'சுஹா' (எலி) (தமிழிலும் இதுபோல் வந்தது!) என்றெல்லாம் பாட்டெழுதவில்லையா? பேனாவில் வேசித்தனத்தை இவரே புகுத்தி விட்டு, இப்போது வயிற்றெரிச்சலால் சதி சாவித்ரி வேடம் போடுகிறாரே..." என விளாசியிருக்கிறார்கள். வர வர எலி விஷயமென்றாலே கிலி பிடிக்க ஆரம்பித்து விட்டது!



மோகினியாட்டங்கள்!

வடவரையை மத்தாக்கி, வாசுகியை நாணாக்கி கடலைக் கடைந்த காலம் தொட்டே, 'மோகினி'யாக வந்து ஆணை மயக்கிய கதைகளைக் கேட்டு வளர்ந்திருக்கிறோமே! கொஞ்சமாவது புத்தி வர வேண்டாம்? இப்படியா, நானாவதி ஹாஸ்பிடலின் முன் ஓர் அழகி, "நான்தான் ஜீ.டீ.வி.யின் பிரபல 'ஹஸரதேய்ன்' ஸீரியலில் 'மோகினி'யாக வருபவள்" என்ற அறிமுகத்துடன் லிஃப்ட் கேட்டதும், பிஸினஸ்மேனான ஜெயேஷ் தன்னா, காரின் கதவைத் திறந்து தொலைத்திருக்க வேண்டுமா? அத்துடன் நிற்காமல், அவள் 'அன்புடன்' வழங்கிய 'சாக்லெட்'டை வேறு விழுங்கியிருக்க வேண்டுமா? மயக்கம் தெளிந்த போது, மோகினியும் மாயமாய் மறைந்திருந்தாள்; கூடவே ஜெயேஷின் மோதிரம், செயின், தடிமனான பர்ஸ், கார் உபகரணங்கள் எல்லாமும் மறைந்திருந்தன. போலீஸார், தொடரின் இயக்குனரான அஜய் சின்ஹாவை உலுக்க, அவர் பாவம், தம் ஸீரியலில் மோஹினியாக வருபவரின் ஃபோட்டோக்களை வைத்துக் கொண்டு, 'இவர் அவரில்லை' என்ற புதுக் கதையை போலீஸ் ஸ்டேஷனில் இயக்கிக் கொண்டிருந்தார்.

கறுப்பா அழகு? காந்தலா ருசி?

கொலாபாவிலுள்ள "Leopold Cafe"ல் எப்போதும் டூரிஸ்டுகளின் கூட்டம் 'வழி'யும்! சென்ற வாரத்தில் ஒருநாள், இரண்டு கறுப்பின ஏர்-ஹோஸ்டஸ்களுக்கு, மேல்தளத்திலுள்ள பாரில் அனுமதி மறுக்கப்பட்டது; விஷயத்தை 'மீடியா' விஸ்வரூபமெடுக்க வைத்தது; மனித உரிமைக் கழகம், முனிசிபல் கார்ப்பொரேஷன், காவல் துறை, சமூக சேவகர்கள் என பல திசைகளிலிருந்து எழுந்த 'நிற வெறி ஒழிக' கூக்குரலையடுத்து, கஃப்டீரியாவின் நிர்வாகம் "கறுப்பர்கள் குடித்து விட்டு கலாட்டா செய்யும் பழக்கமுடையவர்கள் என்பதால் அனுமதி இல்லை என்று முதலிலும் "யாரோ இரண்டு ஆண்கள் இந்தப் பெண்களுக்கு அங்கே வலை வீசியதால், தடுத்ததாக" அதன் பிறகும், விளக்கமளித்தனர். எது நிஜமோ? கண்ணன் பிறந்த பூமியிலிருந்து கொண்டு கறுப்பை வெறுப்பது பொருத்தமாக இல்லையே!

— ஜெயஸ்ரீ ராஜ்

மாங்குடி ஜெய்சங்கர்

நவநிதபுரம் என்றவுடன் சற்றே புளிப்புடன் கூடிய சாரதாம்மாவின் மோர்தான் நினைவுக்கு வரும்.

நவநிதபுரம்தான் எனது சொந்த ஊர். ஆனால் நன்கு நினைவு தெரிந்த நாட்களாகச் சென்னைதான் பரிச்சயமாகிப் போனது. ஊர் பற்றிய நினைவுகள் கலங்கலாகத்தான் நினைவுக்கு வரும். தாத்தா வாசல் திண்ணையில் சாய்வு நாற்காலியில் ஓய்வெடுப்பது, பாட்டி பாக்கு வெட்டியில் பாக்கு வெட்டும் அந்த கடுக் கடுக் சத்தம், பசியைத் தூண்டுகிற சமையல்காரன் ராமையாவின் பூண்டு ரச வாசனை, தோட்டத்தில் மலரும் மல்லிகையின் குப்பென்ற மணம், சற்றே நுரைத்து ஓடும் வெட்டாறு ஆகியவை நிழல் போன்றுதான் நினைவுக்கு வரும்.

ஆனால் சாரதாம்மாவின பானை தூக்கி வரும் உருவம் மனதுக்குள் தெளிவாய்ப் பதிந்திருந்தது.

சாரதாம்மா என்றவுடன் ஏதோ வயதான கிழவி என்று நினைத்து விடலாகாது. நான் நவநிதபுரத்தில் இருந்தபோது எனக்குப் பத்து வயது. நான்காம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன்.

அப்போது சாரதாம்மாவுக்கு முப்பது வயது இருக்கும். கணுக்காலுக்கு சற்றே மேலேறிய கங்கடிச் சேலையும், சற்றே கை வைத்த ஜாக்கெட்டும் வெற்றிலை குதப்பும் உதடுகளும், கம்மாடு வைத்துத் தலையில் மோர்ப் பானையைத் தூக்கிச் செல்லும் கம்பீரமான அழகும் ஜல்ஜல் என்ற கொலுசு ஒலியுடன் கூடிய நடையும் யாரையும் ஒரு தரம் நின்று நிமிர்ந்து பார்க்க வைக்கும். இதற்கே அசந்து போகிறவர்கள் அவள் தரும் மோரை அருந்தி மேலும் ஒருபடி அசந்து போய் நிற்பார்கள்.


கருவேப்பிலை, பச்சை மிளகாய் சேர்த்துத் தாளித்த கடுகு வாசனையுடன் சற்றே புளிப்பு விரவிய கொழகொழப்பான அந்த மோரைக் குடிப்பவர்கள் எதை வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராயிருப்பார்கள். வெயில் காலங்களில் பத்துக்காசு கொடுத்து ஒரு குவளை மோர் குடிக்க அவளைச் சுற்றி ஏகப்பட்ட கூட்டம் நிற்கும்.

சாரதாம்மாவுக்கு என்னை மிகவும் பிடிக்கும். பிடிக்கும் என்பதைவிட மிகுந்த அன்பு. என்னைப் பார்த்தால் பானையை இறக்கி வைத்துவிட்டு, வெற்றிலைச் சாறை உமிழ்ந்துவிட்டு என் கன்னத்தில் அழுத்த முத்தம் பதிப்பாள். என்னை அருகில் உட்கார வைத்து குவளை குவளையாய் மோர் கொடுப்பாள். நான் சட்டையெல்லாம் வழிய குடிப்பதைப் பார்த்து குழந்தையாய் ரசிப்பாள். வழிந்த மோரை அவள் முந்தானையால் துடைத்து விடுவாள். அவளுடன் பாதிநேரம் அவள் கையைப் பிடித்துக் கொண்டு நானும் மோர் வியாபாரத்திற்குச் செல்வேன்.

இந்த அளவுக்கு சாரதாம்மா அன்பு வைக்க எனக்கும் அவளுக்கும் என்ன உறவு? எதனால் என் மீது இந்த அளவுக்குப் பிரியம் வைத்துள்ளாள்? இன்று வரை எனக்குப் புரியாத புதிராகவே இருக்கிறது.

நான் ஒரு வயதுக் குழந்தையாய்த் தூளியில் தூங்கிக் கொண்டிருந்த போது கருந்தேள் ஒன்று தூளியில் ஏறியதாம். சாரதாம்மாதான் தேளை தக்க சமயத்தில் பார்த்து, அடித்து என் உயிரைக் காப்பாற்றினாள் என அம்மா சொன்னது நினைவுக்கு வந்தது. சின்னக் குழந்தையிலேயே என்னைக் காப்பாற்றியதால் என் மீது மிகுந்த அன்பு ஏற்பட்டிருக்கலாம்!

சாரதாம்மா பத்து வயதிலேயே அனாதையாகி விட்டாள். அவள் அப்பாவும், அம்மாவும் காலராவில் பாதிக்கப்பட்டு இறந்த பின்னும் மனம் தளராது மோர் வியாபாரம் செய்து வாழ்கிறாள் என பாட்டி சொல்லும் போது ஆச்சர்யமாக இருக்கும்.



உறவு

சாரதாம்மாவைப் பிரிகின்ற அந்த நாளும் வந்தது. அப்பா தாத்தாவிடம் சென்னையில் பிஸினஸ் செய்ய பணம் கேட்டார்.

"இருக்கிற நிலத்துல விவசாயம் பண்றதுக்கு ஆளில்லை... இதுல பிஸினஸ் பண்றானாம்... போடா, போய் வேலையைப் பாரு..." என்ற தாத்தாவின் அலட்சிய பேச்சுக்கு அப்பா ஏகமாய்க் கடுப்பானார்.

"எனக்குச் சேர வேண்டிய சொத்தை என்கிட்ட கொடுத்துடுங்க... நான் எப்படியோ போயிட்டுப் போறேன்..."

"ச்சீ நாயே... சொத்தைப் பிரிக்கிற அளவுக்கு வந்த பிறகு நீ இந்த வீட்டுல இருக்கக் கூடாது. வீட்டை விட்டு வெளியே போடா..."

அப்பாவின் முகம் கோபத்தில் ஏகமாய்ச் சிவந்து போனது. பெட்டியில் துணிகளை அடுக்கிக் கொண்டு என்னையும், அம்மாவையும் அழைத்துக் கொண்டு நேராக பஸ் ஸ்டாப்பிற்கு வந்து விட்டார்.

"அப்பா... பாலுகிட்டேயும், கதிரேசன் கிட்டேயும் ஒரு நிமிஷத்துல சொல்லிட்டு வந்துடறேன்..." சொல்லிவிட்டு சிட்டாய்ப் பறந்தேன்.

இந்நேரம் சாரதாம்மா அரசமரத்தடியில் இருப்பாள் என தெரியும். நான் அரக்கப் பரக்க ஓடி வருவதைப் பார்த்து வியாபாரத்தை நிறுத்தி விட்டு வந்தாள். நான் முழுவதையும் சொன்னேன். அவள் முகம் சுருங்கிப் போனது.

"கவலைப்படாத ராசா... எப்படியும் உங்கப்பாவும், தாத்தாவும் இன்னும் கொஞ்ச நாள்ல ராசி ஆயிடுவாங்க. அதுக்கப்புறம் நீ இங்கதானே வரப் போறே... இதுக்குப் போய் அழலாமா?" சொல்லும் போதே அவளும் உடைந்து விடுவாள் என்று தோன்றியது.

சாரதாம்மாவிடம் சொல்லிக் கொண்டு அன்றைக்குக் கிளம்பியதுதான் கடைசி சந்திப்பானது.

அப்பா நேரே எங்களை சென்னைக்கு அழைத்து வந்தார். முதல் வேலையாய் தாத்தாவை எதிர்த்து கோர்ட்டில் கேஸ் போட்டார்.



அது முதல் தாத்தாவுக்கும், அப்பாவுக்கும் விரோதம் அதிகமாகிப் போனது. நானும், அம்மாவும் நவநிதபுரம் பக்கமே போகக் கூடாது என அப்பாவால் மிரட்டப்பட்டோம்.

நான் ஸ்கூல் பைனல் முடிக்கும்போது அப்பா பக்கம் கேஸ் தீர்ப்பாயிற்று.

நான் காலேஜில் சேரும்போது அப்பா பிஸினஸ் துவங்கினார். அவர் நேரம் ஓகோவென்று பிடித்



"கோர்ட் தீர்ப்புப்படி அபராதம் கட்டப் போன ரவுடி முனுசாமிய மறுபடி கைது பண்ணிட்டாங்களாமே..."

"பின்னே, அபராதமா கள்ள நோட்டைக் கட்டியிருக்கானே!"

- அம்பை தேவா

துக் கொள்ள, பெரும் புள்ளியானார்.

நான் காலேஜை விட்டு வெளி வரும் போது அப்பா ஹார்ட் அட்டாக்கில் இறந்து போனார். அப்பாவின் மேல் இருந்த கோபத்தில் தாத்தா அப்பாவின் சாவுக்குத்தான் கடனே என்று தலையைக் காட்டிவிட்டுப் போனார். எனக்கும் அம்மாவுக்கும் எப்போதும் கிராமத்து வீடு தயாராய் இருப்பதாகச் சொல்லிவிட்டுப் போனார்.

அப்பாவுக்குப் பின் அவர் பிஸினஸை நான் ஏற்றுக் கொண்டேன். அப்போதுதான் எனக்கு அந்த ஆசை வந்தது.

நவநிதபுரத்திற்கு போய் சாரதாம்மாவை பார்த்துவிட்டு வந்தால் என்ன? தாத்தா, பாட்டியையும் பார்த்த மாதிரி இருக்கும்.

நினைத்தவுடன் கிளம்பினேன். நவநிதபுரம் போகப் போகிறோம் என்றவுடன் ஒரு குழந்தையின் குதூகலம் என்னை தொற்றிக் கொண்டது. சாரதாம்மாவுக்கு இந்நேரம் திருமணம் ஆகியிருக்குமா? குழந்தைகள் இருக்குமா? எப்படி இருப்பார்கள்? இன்னும் மோர் வியாபாரம் செய்து கொண்டிருப்பார்களா? போய் ஆசை தீர சாரதாம்மாவின் கையால் மோர் வாங்கி அருந்த வேண்டும்.

பிறந்த மண்ணில், பாதம் பட்டதும் இனம் புரியா சந்தோஷம் என்னுள் ஏற்பட்டது. நவநிதபுரம் கொஞ்சம் கொஞ்சமாய் நகரத்து சூழ்நிலைக்கு மாறிக் கொண்டிருந்தது. ஆங்காங்கே கான்க்ரீட் கட்டடங்கள். ஒரு டூரிங் தியேட்டர். டிஷ் ஆன்டெனா போடப்பட்டு கொடுக்கப்பட்ட கேபிள் கனெக்‌ஷன்கள்...

தூரத்தில் வீட்டைப் பார்த்தவுடன் ஒரு சந்தோஷம். தாத்தா திண்ணைச் சுவரில் சாய்ந்து கொண்டு, விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தார். முன்பு கம்பீரமாய் இருந்தவர், உடல் இளைத்து கம்பீரத்தை சுத்தமாய்த் தொலைத்திருந்தார்.

"தாத்தா..."

நிமிர்ந்து, கண்ணைச் சுருக்கிப் பார்த்தவரிடம், மின்னலாய் சந்தோஷம்.

"யாரு அரவிந்தா...?"

"ஆமாம் தாத்தா."

படபடப்பாய் அருகில் அழைத்து கையைப் பற்றிக் கொண்டார்.

"நீயாவது உங்கப்பன் மாதிரி வீராப்பா இல்லாம இருக்கியே... அது போதும். காமாட்சி..."

பாட்டி மாறாத அதே ரங்காச்சாரி புடைவைக் கட்டுடன் வந்தாள்.

"அரவிந்தா..." ஓடிவந்து அணைத்துக் கொண்டாள்.

"உங்கம்மாவையும் கூட்டிட்டுட்டு வரது தானே..."

"சரி சரி... போ. போய் குளிச்சி சாப்பிட்டு வா பேசலாம்..." என்றார் தாத்தா.

சாரதாம்மாவை பார்ப்பதற்கு முன் சமையல்காரர் ராமையாவைப் பார்க்க சமையலறைக்குள் நுழைந்தேன்.

ராமையா சமையல் வேலைகளில் மும்மரமாய் இருந்தார்.

"மாமா..."

"வா வா... அரவிந்தா. நீ வந்திருக்கேன்னு தெரிஞ்சவுடனே உனக்குப் புடிச்ச பால் போளி செய்ய ஆரம்பிச்சிட்டேன்..."

"சௌகரியமா இருக்கீங்களா?"

"எனக்கு என்னப்பா குறைச்சல்? ஒண்டிக் கட்டை. சமையல் பண்ணி சாப்பிட்டுட்டு காலத்தை ஓட்டிக்கிட்டிருக்கேன். உங்கப்பன் ரங்கராஜுக்குத்தான் இந்த உலகத்துல வாழ கொடுத்து வைக்கலை... இவ்வளவு சீக்கிரம் போயிட்டான்..."

ராமையா மாமா தாத்தா காலத்திலேர்ந்தே வேலை செய்து வருபவர்.

"சாரதாம்மா நல்லா இருக்காங்களா? இப்ப எங்க இருக்காங்க? நான் போய் பார்க்கணுமே..."

அவரின் முகம் சுருங்கியது மாதிரி தெரிந்தது. சட்டென்று உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு முகத்தைச் சமன்படுத்தியது போல் தெரிந்தது.

"நீ போய் பார்க்கப் போறியா? சரி போய்ப் பார்த்துட்டு வா... பஜனை மடத் தெருவுல அதே பழைய வீடுதான்... இப்ப ரொம்ப கஷ்டப்படறாங்க. கல்யாணமும் பண்ணிக்காம தனி மரமாத்தான் இருக் காங்க. மோர் வியாபாரமும் சமீபகாலமா பண்றதில்லை. சாப்பாட்டுக்கே கஷ்டப்பட றாங்க. உன்னால முடிஞ்ச அளவு ஏதாவது உதவி செய்ப்பா..."

என் மனம் மிகவும் சங்கடத்திற்குள்ளா னது. சாப்பாட்டுக்கே கஷ்டப்படும் நிலை எப்படி உண்டானது? ஏன் திருமணம் கூட செய்து கொள்ளவில்லை. கனத்த மனத் துடன் பஜனை மடத் தெருவை நோக்கி நடக்க ஆரம்பித்தேன்.

சாரதாம்மா இருந்தது மிகச் சின்ன வீடு. ஆனால் ஒண்டிக்கட்டைக்கு அது பெரிய வீடுதான்.

கதவு தாளிடப்படாமல் வெறுமையாய் மூடப்பட்டிருந்தது. கதவை அதிக ஓசைப் படாமல் தட்டினேன்.

"யாரு?" தளர்ந்த குரல். ஆனாலும் சாரதாம்மாவின் அதே கனிவு கலந்த குரல். கதவைத்திறந்தாள் சாரதாம்மா. நிறமிழந்த சேலையும், வெற்றிலைக் குதப்பலால் தடித்த உதடுகளும், சுருக் கம் விழுந்த முகமும், கரு வளையம் சூழ்ந்த கண்களும் நாற்பது வயது சார தாம்மாவை அறுபதாய்க் காட்டியது.

சட்டென்று முகம் மலர்ந்தாள்.

"யாரு? அரவிந்தா... வாவா... உள்ளே வா..." உள்ளே நகர்ந்து இடம் கொடுத்தாள்.

"பால்யத்துல உங்கப்பாவைப் பார்த்த மாதிரியே இருக்கு..." கன்னத் தைக் கையால் தொட்டு நெட்டி முறித்து திருஷ்டி கழித்தாள்.

வீட்டிற்குள் வறுமையின் நிலை தெளி வாய்த் தெரிந்தது. மோர் வியாபாரத்திற்கு எடுத்துச் செல்லும் பானை கவிழ்த்து வைக் கப்பட்டிருந்தது.

"அம்மா எப்படிப்பா இருக்காங்க? நல்லா இருக்காங்களா?" சாரதாம்மாவின் குரல் கலைத்தது.

"ம்ம்... நல்லா இருக்காங்க. நீங்க எப்படி இருக்கீங்க சாரதாம்மா...?"

"எனக்கென்னப்பா... உங்கப்பாதான் இந்த் சின்ன வயசிலேயே இந்த உலகத்தை விட்டுப் போயிட்டார்..." அவள் கண் கலங்கியது.

ஒரு நிமிடம் கனத்த மௌனம்.

என்ன பேசுவது? சின்ன வயதில் சார தாம்மாவுடன் ஓடிப்பிடித்து விளையாடியது போன்று இப்போது விளையாட முடியுமா? மனசு விட்டுப் பேசுவதற்கு கூட இவ்வளவு நாள் பிரிவு தடுக்கிறதே!

சாரதாம்மாவும் என்னைப் போன்றே உணர்ச்சிக் கலவைகளில் சிக்கியிருப்பாள் என தோன்றியது.

"நான் ஒருத்தி... வந்த பிள்ளைக்கு சாப் பிட ஒண்ணும் தராம இருக்கேன் பாரு... இருப்பா குடிக்க மோர் கொண்டாரேன்..."

சாரதாம்மா ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை. வயதான காலத்தில் ஒரு துணை வேண்டாமா? மகள், மகன், பேரன், பேத்தி என்ற அரவணைப்பு வேண்டாமா?

ஒரு குவளை நிறைய மோர் வந்தது. சார தாம்மாவின் அதே கைமணம் நிறைந்த கொழகொழப்பான மோர். ஒரே மூச்சில் குடித்து முடித்தேன்.



சாரதாம்மாவின் அன்பு மாறாதது போன்று மோரும் சுவை மாறாமல் இருந்தது.

"அம்மாவுக்கும் வயசாயிடுச்சி. காலா காலத்துல கல்யாணம் பண்ணிக்கிட்டியானா அம்மாவுக்கும் ஒத்தாசையா இருக்குமில்லே..."

"என்னோட கல்யாணம் இருக்கட்டும் சாரதாம்மா. நீங்க ஏன் கல்யாணம் பண்ணிக் கலை. இந்த வயசான காலத்துல தனியா கிடந்து கஷ்டப்படணும்னு விதியா?"

சட்டென்று அவள் முகம் வாடியது.

"ப்ச்... அது கிடக்கட்டும் விடு. உன் கூட படிச்சானே பாலு, அவன் சப்-இன்ஸ் பெக்டர் ஆகி, இந்த ஊருக்கே வந்துட்டான். கதிரேசன்தான் வேலை இல்லாம சும்மா சுத்திக்கிட்டிருக்கான். உன்னால முடிஞ்சா



கார் உடைக்கும் ரோபோ!

உலக கால்பந்து போட்டியில் கலந்து கொள்ள வந்த பிரேசில் அணியினர் பயிற்சி பெறும் விளையாட்டரங்கம் அருகில் ஒரு காரில் குண்டு இருப்பதாகச் செய்தி வர, போலீஸார், ரோபோ இயந்திரம் மூலம் அந்தக் காரை உடைத்து, அதிலிருந்த சாக்கு மூட்டையை சோதித்துப் பார்த்ததில்... ஒன்றுமில்லை!

— பாரீஸ் பார்த்தசாரதி

அவனுக்கு ஏதாவது வேலை வாங்கித் தாயேன்..."

சாரதாம்மா பேச்சை திசை திருப்புகிறாள் என தெரிந்தது. சாரதாம்மாவின் மனத்தில் ஏதோ ஆறாத காயம் ஒன்று இருக்கிறது. இதை சாரதாம்மாவிடம் இருந்து தெரிந்து கொள்வது கடினம் என்று தோன்றியது.

சமையல்கார ராமையாவை விசாரித்துப் பார்க்க வேண்டும். இவர்களுக்கு ஏதாவது உதவ முடியுமா என்று தெரியவில்லை.

"சாயந்திரம் ஊருக்குக் கிளம்பறேன்மா. போகும் போது வந்து சொல்லிட்டு போறேன்."

"நாலு நாள் தங்கிட்டு போயேன்பா... வந்தவுடனே ஓடறியே..."

"தலைக்கு மேலே வேலை இருக்குது. இப்ப அப்பாவோட பிஸினஸை நான்தானே பார்த்துக்கறேன்."

சொல்லிவிட்டுக் கிளம்பினேன். இவர்கள் படும் கஷ்டத்தைப் பார்க்க சகிக்கவில்லை. மாதம் தவறாமல் பணம் அனுப்ப வேண்டும். நேரில் கொடுத்தால் சங்கடத்தில் வாங்க மறுக்கலாம்.

பஜனை மடத் தெரு திருப்பத்தில்தான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

நான் சரியாய் கவனிக்காமல் சாலையை கடக்க, திருப்பத்தில் திரும்பிய சைக்கிள் என் மீது மோதியது.

சைக்கிளை ஓட்டி வந்த போஸ்ட்மேன் கையிலிருந்த கடிதங்கள் கீழே விழுந்து சிதறின.

"சாரி... சாரி சார். நான் சரியா கவனிக்கமா திரும்பிட்டேன்." என கடிதங்களைப் பொறுக்க ஆரம்பித்தேன்.

போஸ்ட்மேனும் கடிதங்களை எடுத்து அடுக்க ஆரம்பித்தார்.

"சார் ஊருக்குப் புதுசா? இதுக்கு முன்னால பார்த்ததில்லையே..." என்றார்.

"இந்த ஊருதான். சின்ன வயசிலேயே சென்னைக்குப் போயிட்டேன். இனிமே பார்க்கலாம். உங்களுக்கு கஷ்டம் கொடுத்துட்டேன் மன்னிச்சுடுங்க...." என்றேன்.

"பரவாயில்லை சார். வேணுமின்னா மோதப் போறீங்க."

இவரிடம் சாரதாம்மாவுக்கு மாதா மாதம் பணம் அனுப்புவதைச் சொன்னால் சரியாக குழப்பம் இல்லாமல் போய்ச் சேரும் எனத் தோன்றியது.

"போஸ்ட்மேன்... பஜனை மடத்தெரு சாரதாம்மாவுக்கு மாதா மாதம் மணி ஆர்டர் அனுப்புவேன். இதுதான் என் அட்ரஸ்.. சரியாக் கொடுத்துடுங்க."

என் விஸிட்டிங் கார்டை நீட்டினேன். வாங்கிப் பார்த்தவர், "அட... இதே அட்ரஸ் லேர்ந்து ரங்கராஜ்னு ஒருத்தர் அவங்களுக்கு பணம் அனுப்பிட்டு இருந்தாரு. இப்ப இரண்டு மாசமாத்தான் பணம் அனுப்பலே. ஏன்னு தெரியலை...?" என்றார்.

எனக்கும் சாரதாம்மாவுக்கும் இருந்த உறவு சடாரென்று விளங்கியது. சாரதாம்மா திருமணம் செய்து கொள்ளாததன் காரணமும் தெரிந்தது.

சாரதாம்மாவை ஊருக்குப் போகும் போது கூடவே அழைத்து சென்று ராணி மாதிரி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவுடன் சாரதாம்மா வீட்டை நோக்கி மீண்டும் நடக்க ஆரம்பித்தேன். ●




பில்ராத்
மருத்துவமனை
கத்தியின்றி...
ரத்தமின்றி...
வயிறு
சம்பந்தப்பட்ட அனைத்து
நோய்களுக்கும்
ஓர் முழுமையான
தீர்வு
◆ அல்சர்
◆ அபண்டிஸைடிஸ்
◆ கர்ப்பப்பை நோய்
◆ பித்தப்பை கற்கள் (Gall Bladder Stones)
◆ குடல் இறக்கம்(Hernia)
◆ ஓவரியில் கட்டி எடுத்தல் (Ovarian Cyst Removal)
◆ குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை
முதன்முதலில்
அல்ட்ராசானிக் முறையுடன்
லேப்ராஸ் கோப்பி
சிகிச்சை
சிறப்பு அம்சங்கள்
◆ ரத்த இழப்பு இல்லை
◆ தழும்பு ஏற்படாது
◆ உடனே பழைய நிலைக்குத் திரும்பலாம்
அறுவை இல்லா
மூல வியாதி
சிகிச்சை
சிறப்பு நிபுணர்:
டாக்டர் வெ. ஜெகநாதன்
M.S., M.A.M.S., FRSH (LON) MACG (USA)
FAGE, FAMS-Gastro. (Vienna), FICS-Gastro
வயிறு மற்றும் குடல் சம்பந்தமான
நோய் சிகிச்சை நிபுணர்
BILLROTH
HOSPITAL
(24 மணி நேர சேவை)
43, லட்சுமி திரையரங்க சாலை, செனாய் நகர், சென்னை-600030.
போன் : 6440020/6441777.



தனுசு ராசிக்காரரான சுரேஷுக்கு கனவுத் தொல்லை இருக்குமாம். கன்னி ராசிக்காரரான பாலகிருஷ்ணன் கோவில் கோவிலா சுத்தப் போறாராம். எப்படியோ எல்லாம் சுப(ர)ம் தான்!


மேஷம் :



(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)


பிரமாதமான திருப்பங்களை இப்ப எதிர்பார்க்கலாம். சில ஸ்பீட் பிரேக்கர்களும் உண்டுன்னாலும் தொழில் ரீதியா இருந்து வந்த பிரச்னைகள் விலகி, முன்னேற்றம் ஜோரா இருக்கும். குறிப்பா, பெண்களுக்கு மனசுக்குள்ள இருந்து வந்த இனம் புரியாத குழப்பங்கள் விலகி, தெளிவான பாதை புலப்படும். தொழிலாளிங்க, வியாபாரிங்க, எழுத்தாளர்கள் எல்லாரும் பேரும் புகழும் அடைவாங்க. பணப் பிரச்னை இருக்காது. சிலருக்கு ஆன்மிக டூர் போற சான்ஸ் உண்டு. சகோதரர்களால ஒரு குறிப்பிட்ட உதவி தக்க சமயத்துல கிடைச்சி, உபயோகமா இருக்கும்.

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*



பதினொண்ணுல குரு இருக்காருன்னா, பணப் புழக்கத்துக்குக் கேட்பானேன்? உல்லாசமா நிறைய செலவளிப்பீங்க. மனசுல மகிழ்ச்சியும் புதுப்புது இட்டங்களும் உருவாகும். வீட்டுலேயும் சண்டை சச்சரவு இல்லாம சுமுகமான உறவு நிலையை மெயின்டெய்ன் பண்ணுவீங்க. நிர்வாகத்துறைல இருக்கறவங்களுக்கு 'ஓஹோ' டைம்! ஆனா, தொழிலாளர்களால சிறு பிரச்னைகள் வரலாம். உஷார்! பயணத்துல எச்சரிக்கையா இருங்க. அலைச்சல் அதிகமா இருக்கும்னாலும் பலன் கண்டிப்பா உண்டு. உணர்ச்சிவசப்படாம காரியத்தைப் பாருங்க.

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*



உங்க வசீகர சக்தியால எதிரிகளையும் கட்டிப் போடுவீங்க. ஒரு முக்கியமான ஒப்பந்தம் இந்த வாரம் நிறைவேறும். பணம் நிறைய வரும். ஆனா தண்டச் செலவும் கூடவே இருக்கும். சிலருக்கு வெளியூர் மாறுதல் வரலாம். பெண்களுக்கு, புதுப்புடைவை யோகம் இருக்கு. மாணவர்கள் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டிவரும். வீட்டுல யாருக்காவது தலைவலி, ஜுரம்னு உடம்பு முடியாமல் போயி சின்ன, மருத்துவச் செலவுகள் வரலாம். வயசானவங்களுக்குக் காலில் அடிபடும் அபாயம் உண்டு. உஷார்!


கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*



வீடு, நிலம் வாங்கற ஐடியா இருந்ததுன்னா, இப்ப சரியான டைம்! நல்லா யோசிச்சி இன்வெஸ்ட் பண்ணுங்க. உடல் ஆரோக்யம் பிரமாதமா இருக்கும். சில புதிய எதிர்காலத் திட்டங்கள் மனசுல உருவாகும். விஞ்ஞானிகள், ஆசிரியர்களுக்கு வளமான டைம் இது! புகழ் கூடும். இளம் பெண்களுக்குத் திருமண யோகம் கூடும். நீண்ட நாளா எதிர்பார்த்துட்டிருக்கற ஒரு நல்ல தகவல் வந்து சேர்ந்து, குஷிப்படுத்தும். புதிய நண்பர்கள் கிட்ட எச்சரிக்கையா பழகுங்க. கொஞ்சம் அசந்தா, கவுத்து உட்ருவாங்க.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

நடக்குமென்பார்



அலைச்சல் இருக்கும். அதே சமயம் பலன் இருக்கும். செலவு நிறையத்தான்! ஆனா பண வரவும் சூப்பரா இருக்குமே! வீட்டுல சுபகாரியம் ஒண்ணு நடக்கப் போவுது. மூத்த மகனால பெரும் புகழ் வந்து சேரப் போவுது. கலைத்துறைல இருக்கறவங்களுக்குப் புதிய வாய்ப்புகள் வந்து கதவைத் தட்டும். சிலருக்கு வெளிநாடு சான்ஸ் இருக்குது. சிலருக்கு வெளியூர் மாறுதலாவது இருக்கும். வீட்டுலே சம்சாரம் கிட்ட கனிவா நடந்துக்கங்க. வீண் வாக்குவாதங்கள் வேணாம். ஒரு புதிய நண்பர் இந்த வாரம் கிடைப்பார்.

கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*




நிறைய நல்லது நடக்கப் போவுது. அதனால ஆட்டோமாட்டிக்கா மனசு, பக்தி மார்க்கத்துல திரும்பும். கோவில் கோவிலா சுத்தப் போறீங்க. தான தர்மம் பண்ணலா

நடக்கும்!

ஜூலை 8 முதல் 14வரை


அக்னி சர்மா பக்கம்

மான்னு ஐடியா வரும். பணமும் நிறைய வரப் போவுதே! வீட்டுல இளம் வாலிபர்களுக்குத் திருமணம் கை கூடும். சிலருக்குக் காதல் கூட! வயசான பெற்றோர் இருந்தா, அவங்க உடல் நலன்ல அக்கறை காட்டுங்க. தொழில் ரீதில மிகப் பெரிய மாறுதல் ஒண்ணை சந்திக்க வேண்டி வரும். அது உங்க எதிர்காலத்தையே பிரமாதமா மாத்திடும்.



துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

வசீகரமான ஆளுங்க நீங்க. உங்க பேச்சு சாதுர்யத்தாலேயே காரியங்களை சாதிச்சிடுவீங்க. இந்த வாரம் பணப் பிரச்னை கொஞ்சம் வரும். காரணம், எதிர்பாராத பெரிய செலவுகள். வீடு, ஸீடு வாங்குவீங்க. அது பரவாயில்லை. ஆனா ரேஸ், லாட்டரின்னு போகாதீங்க. ஊத்திக்கும்! வியாபாரிகள், மருத்துவர்களுக்கும் பண மழை பெய்யற வாரம் இது! ஒரு நீண்ட தூரப் பிரயாணம் இருக்கலாம். சிலருக்குக் குளிர் ஜுரம் மாதிரி ஏதாவது உபாதைகள் வரலாம். கவனமா இருங்க.




விருச்சிகம் : *(விசாகம் 4 – ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

சொகுசு பஸ் மாதிரி ஸ்மூத்தான லைஃப் சார் உங்களுக்கு. தாங்கு தாங்குன்னு உங்களைத் தாங்க எல்லாரும் காத்துட்டு இருக்காங்க. அநாவசிய குழப்பங்களை ஒதுக்கி, ஜாலியா இருங்க. இந்த வாரம் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களுக்குப் பிரமாதமா இருக்கும். போட்டி, வழக்கு எதுவானாலும் வெற்றிதான். பெண்களுக்கு புதிய வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்கற யோகம் இருக்கு. மனைவி உடல் நலத்துல மட்டும் அக்கறையா இருங்க. மத்தபடி சூப்பர் வாரம்!



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

கிரக அமைப்பு சாதகமா இல்லை. எதையும் யோசிச்சி, கவனமா திட்டமிட்டுச் செய்யுங்க. அநாவசிய வாக்கு வாதங்கள்ல தலையிட வேணாம். யாரையும் நம்பி, பணம் குடுக்காதீங்க. ஜாமீன் கையெழுத்துப் போடாதீங்க. பயணத்துல எச்சரிகையா இருங்க. விபத்துகளுக்கு சான்ஸ் உண்டு! ஆபீஸ்ல நிறைய தப்புப் பண்ணி மேலதிகாரிகள்கிட்ட வாங்கிக் கட்டிப்பீங்க. கனவுத் தொல்லை இருக்கும். எல்லாம் சனிக்கிழமை வரைக்கும் தான். Then everything will be alright!



மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

உங்க திறமை வெளிப்படும் வாரம். புதிய முயற்சிகளில் வெற்றி நிச்சயம். தாராளமான பணப்புழக்கம் இருக்கும். உல்லாசப் பயணங்களுக்குச் சான்ஸ் கூடிவரும். காதல் கைகூடும். சிலருக்கு வெளிநாடு சான்ஸ் வரும். வேலைக்காகக் காத்திருக்கறவங்களுக்கு, ஆர்டர் வீடு தேடி வரும். வீட்டுல ஒரு மகிழ்ச்சியான சம்பவம் நடக்கும். உல்லாசத்துக்குக் குறைவில்லாத, அதே சமயம் முன்னேற்றமான வாரம்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

சனி, குரு, சுக்ரன் மூணு பேரும் உங்களை சப்போர்ட் பண்றாங்க. ஸோ, எதுக்கும் கவலைப்படாதீங்க. உடல் நலம் சீராகும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சந்தோஷப்படுத்தும். சிலருக்கு பக்தி யாத்திரை சான்ஸும் உண்டு. வீட்டுல எல்லாரும் உங்களை சப்போர்ட் பண்ணுவாங்க. மகிழ்ச்சி தாண்டவமாடும் போங்க! பெண்களுக்கு, புகழ் அடைய நாப்பல ஒரு வாய்ப்பு வரும். சரியா பயன்படுத்திக்கிட்டு ஓஹோன்னு முன்னுக்கு வாங்க! இந்த வாரத்துல யாராவது ஏழைக்கு ஒரு வேளை சாதம் போட்டீங்கன்னா ரொம்ப நல்லது.



மீனம் : *(பூரட்டாதி 4 -ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

ஓரிரு முக்கியமான காரியங்கள் இப்ப நல்லபடியா நடந்துடும். ஆனா நீங்க தொழில்ல ரொம்ப கவனமா இருக்க வேண்டியது அவசியம். அநாவசியமா கூட வேலை பார்க்கறவங்களைப் பகைச்சிக்காதீங்க. வீண் சண்டை, வம்பு வேணாம். ஷேர், லாட்டரி பக்கம் போகாதீங்க. வீட்டுல சின்ன மனஸ்தாபங்கள் வரும். விட்டுக் கொடுத்து நடந்துக்குங்க. சினிமா துறையைச் சேர்ந்தவங்க மட்டும் எந்தப் பிரச்னையும் இல்லாம, புதிய வாய்ப்புக்கள் பெற்று குஷியா இருப்பாங்க. மத்தவங்க, சனிக்கிழமைக்கு அப்புறம் நிலைமை சீராகி சூப்பராயிடுவாங்க.

பரீக்ஷித்தின் சந்தேகத்துக்குப் பதில் சொன்னார் சுகப்ரும்மம். ஒரு கதை வடிவிலே சொன்னார்:

ஒரு மஹரிஷி காட்டு வழியே போய்க் கொண்டிருந்தார். மூங்கில் காடு அது. திடீரென்று ஒரு மூங்கில் இன்னொரு மூங்கிலோடு உராய்ந்து தீப்பிடித்துக் கொண்டது. காட்டுத் தீ...! அது பரவி, அந்தப் பச்சைப் பசேல் காடு மொத்தமும் கரிக் கட்டையாகப் போய்விட்டது.

அப்போதுதான் மனத்திலே நினைக்கிறார்- "ஐயோ! பசுமையாயிருந்த காடெல்லாம் இப்படி கரிக்கட்டையாய்ப் போய் விட்டதே!" என்று. சில மாதங்கள் கழித்து அதே வழியில் வருகிறார் அந்த மஹரிஷி... பார்த்தால், எந்த இடம் கரிக்கட்டையாக இருந்ததோ, அதே இடம் துளிர்த்து, பச்சைப் பசேல் என்று இருக்கிறது!

66

அப்போதுதான் அவருக்கு ஒரு விஷயம் புரிந்தது- அக்னி எரித்ததே... அது எதை எரித்தது?... பூமிக்கு மேலே, கண்ணுக்குத் தெரிகிற பகுதியை எரித்ததே யொழிய பூமிக்கு உள்ளே ஊடுருவி, அதன் வேரை அழிக்கக் கூடிய சக்தி அக்னிக்கு இல்லை. அதனால்தான்- வேர் உள்ளே இருப்பதனாலே தான்- மழை பெய்த உடனேயே துளிர்த்து வந்துவிட்டது!

அதேதான் இங்கே! நாம் பாபத்தைப் பண்ணுகிறோம். பண்ணிய பாபத்தைப் போக்குகிற பிராயச்சித்த கர்மாவானது, மேலே இருக்கிற மூங்கில் கழி மாதிரி... ஆனால் பாபத்தைத் தூண்டக் கூடிய அந்த கெட்ட வாசனை, வேர் மாதிரி உள்ளுக்குள் இருக்கிறது. அதைப் போக்கக் கூடிய சக்தி பிராயச்சித்த கர்மாவுக்குக் கிடையாது.

பின்னே அதைப் போக்கக் கூடிய சக்தி எதற்கு இருக்கிறது...? என்று கேட்டால், பகவானுடைய சரணத்துக்கு மட்டும்தான் இருக்கிறது. அந்த திவ்ய திருவடியை நாம் உபாஸனை பண்ணினால்தான், அது மனத்துக்குள்ளேயே நிலைத்து இருக்கிறவர்களுக்குத்தான், உள்ளுக்குள்ளே இருக்கிற கெட்ட வாசனை தொலையும். இல்லையென்றால் அது போவதற்கு வாய்ப்பே இல்லை.

ஆகையினாலே, பாபமே நாம் பண்ணுவதாலே, அது ஜன்மாந்திரத்தில் தொடர்ந்து வரக்கூடியதனாலே, அதனால் வரக்கூடிய கஷ்டங்களெல்லாம் அவன்தான் போக்கடிக்கிறான். பாபமே துளிக்கூட இல்லாமல் போக்கடித்து விடுகிறான்.

இந்தப் பாபங்கள்தான் தூரத்திலே இருக்கிற விரோதிகள். இதேபோல், அருகிலே இருக்கிற விரோதிகளையும் அவன் போக்கடித்து விடுகிறான். அருகில் இருக்கிற விரோதிகள் என்றால்...?- நம் இந்த்ரியங்கள்தான். கொடுமைமிக்க அந்த இந்த்ரியங்களை- நமக்குள்ளேயே இருக்கும். விரோதிகளை- ஜெயிக்கவும் **அவன்**தான் அருள்புரிகிறான்.

இவ்வாறு, உபாயமாகவும், உபேயமாகவும் அவனே இருந்து நம்மை உய்விக்கிறான்.

ஆக, முதல் நான்கு குணங்கள் அமரத்வம், வாத்ஸல்யம், உபாயம், உபேயம் ஆகியன. அடுத்த ஐந்து: போக்யத்வம், போக்ருத்வம், நியம்க்ருத்வம், சுபாஷ்ரயத்வம், சர்வதோமுகம்- இந்த ஐந்தையும் சேர்த்து மொத்தம் ஒன்பது. இவற்றோடு பகவானுக்குரிய ஒன்பது குணங்களில் இரண்டாவது ஒன்பது முடிவடைகிறது.

போக்தா என்றால் அனுபவிப்பவன். போக்யம்- அனுபவிக்கப்படும் பொருள். பிரேரிதா- அதை அனுபவிக்கும்படியாக நம்மைப் பண்ணக்கூடியவன்- நியமிக்கக் கூடியவன் பிரேரிதா.

நியாமகன் என்றே அவனுக்குப் பெயர் உண்டு. -ஏவக்கூடியவன், செயல்படுத்தக்கூடியவன். உள்ளிருந்து செயல்படுத்தக்கூடியவன் அவன் என்று சொல்லியிருக்கிறது.

போக்தா யார் என்றால், ஜீவாத்மாவுக்கு போக்தா என்று பெயர். அனுபவிப்பவன் ஜீவன் அல்லவா?... இந்த உலகத்திலே எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன.



விஷயங்களிலே ஈடுபட்டு அவற்றை அனுபவிக்கிறது ஜீவாத்மா. ஜீவாத்மாவுக்கு போக்தா என்று பெயர்.

அனுபவிக்கும்படியான பொருள்களுக்கெல்லாம் போக்யம் என்று பெயர். போக்யமான வஸ்து இருக்கிறது பாருங்கள்– அசேதனமானது; அறிவற்றது. அது அனுபவிக்காது. ஆனால் அனுபவிக்கப்படும் பொருளாக இருக்கும்.

ஜீவாத்மா அனுபவிப்பதற்காக இவையெல்லாம் இருக்கிறது. இதை அனுபவிக்கும்படியாகப் பண்ணுகிறவன் யார்...? ஈச்வரன். அப்போது என்ன தத்வம் இங்கே...?

சித்து, அசித்து ஈச்வரன் என்று தத்துவத்தை சாஸ்திரம் சொல்லுகிறது. சித்து– சேதனம் – அறிவை உடையவன்; அது தவிர அறிவில்லாத, சாமானியமான, இந்த லோகத்திலே காணப்படக்கூடிய பொருள்கள்– அதாவது அசித் இவை இரண்டையும் செயல்படுத்தக் கூடியவன் பரமாத்மா. இந்த இரண்டையும் அந்தர்யாமியாய் இருந்து செயல்படுத்துகிறவன்.

அர்ஜுனனுடைய தேர்த்தட்டுப் படியிலே இந்தத் தத்துவத்தை நாம் பார்க்கலாம். அர்ஜுனன் உட்கார்ந்திருக்கிறான். 'சித்' அவன். குதிரைகளுக்கெல்லாம் அறிவு உண்டு. அவையும் சேதன கோஷ்டியிலே சேர்கின்றன. அசித் என்ன இங்கே...? ரதம்! ரதம் அசித்தானது. சித், அர்ஜுனனும் குதிரைகளும். இந்த இரண்டையும் செயல்படுத்துகிறவன் யார் என்றால் ஈசுவரன் தான்.

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

அதே மாதிரி நரசிம்ஹ அவதாரத்தில் பாருங்கள்– அங்கே சித் பிரஹலாதன்; அசித் ஸ்தம்பம். இந்த இரண்டையுமே நிர்வகித் தவன் யார்...? ஸ்தம்பத்திலிருந்து தோன்றிய நரசிம்ஹன்தான்.

ஆளவந்தார் என்கிற ஆசார்யர்... ரொம்ப சிரேஷ்டர் அவர். அவர் ஒரு ஸ்தோத்திரம் கவனம் பண்ணியிருக்கிறார். அதை ஒரு தடவை சொன்னால், அதனு டைய அர்த்தத்தைத் தெரிந்து கொண்டு விட்டால் பரம வைராக்கியம் வந்து விடும் நமக்கு.

வைராக்கியத்தை உண்டு பண்ணக்கூடிய ஸ்தோத்திரம் அது. பகவானிடத்திலே பக்தியையும் உண்டு பண்ணும்; அவன் விஷயமான ஞானத்தையும் நமக்குக் கொடுக்கும்– பகவத் ஞானம் நல்ல முறை யிலே ஏற்படும்.

எத்தனையோ ஸ்தோத்திரங்களை நாம் பார்க்கிறோம்– இந்த ஸ்தோத்திரத்துக்கு மட்டும் ஸ்தோத்திர ரத்தினம் என்று பெயர்! அவர் வாயினால் வந்த வாக்கு பொய்க் காது:

நமோ நமோ யாமுனாய
யாமுனாய நமோ நம:–

பாருங்கள், அவரை தியானம் பண்ணு வது எவ்வளவு சுலபமாக இருக்கிறது.

யாமுனேயரின் பொருட்டு நமோ நம:– இந்த அஞ்சலி யார் பொருட்டு...? யாமுனே யரின் பொருட்டு.

எத்தனை தடவை வேண்டுமானாலும் சொல்லலாம். எப்படி அந்த ராம நாமத்தை ஆதி சங்கர பகவத்பாதாள் 'பஜேகம் பஜேகம் பஜேகம் பஜேகம்' என்று நான்கு முறை சொல்லுகிறாரோ... அப்படி!

ஏனெனில் ராமநாமா என்பது அத்தனை ஆதரவு! அதைச் சொல்வதிலே அவ்வளவு குதூகலம். ஏனென்றால் ஈச்வரன், அந்த காத்யாயனி காமுகன், காசிமா நகரத்தில் ஒவ்வொரு ஜீவனுடைய வலது செவியிலே யும், பிராண வியோக சமயத்திலே ஓடிவந்து, ராமா ராமா ராமா என்று மூன்று தடவை சொல்கிறாராம்.

அதனால்தான் அந்த ப்ரும்ம ரூபமான வனை, நம்மையெல்லாம் தரிக்கப் பண் ணக்கூடிய ஏகமானவனை, அவனுடைய ஒப்பற்ற உயர்ந்த திருநாமத்தால் நான் பஜிக்கிறேன்... என்று நான்கு தடவை சொல்கிறார்.

அதுபோன்றுதான் நமோ நமோ யாமு னாய... சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்வதனால் பக்தி மேலீடாகி உயர்ந்து நிற்கிறது.

இந்த மந்திரம் அருளின ஆளவந்தார் மிக உயர்ந்த ஆசார்யர். சின்ன வயதிலே அவர் குருகுலத்தில் இருந்தார்.

அந்தக் காலத்திலே சோழ நாட்டில் ஆக்கி ஆழ்வார் என்று ஒரு வித்வான்– ஆஸ்தான வித்வான்– இருந்தார். அவருக்கு ஒரு விபரீத புத்தி ஏற்பட்டது– உலகத்திலே இருக்கிற பண்டிதர்களையெல்லாம் ஜெயிக்க வேண்டும் என்கிற ஆசை!

வரவே கூடாது இந்த புத்தி! இதர பண்டி தர்களையெல்லாம் வாதத்தில் வெல்ல வேண்டும், மட்டம் தட்ட வேண்டும் என்று ஒரு எண்ணம் இருந்து விட்டால், அப்படிப் பட்டவர்களால் உயர முடியாது என்கிறது சாஸ்திரம்.

ஒருத்தர் வருகிறார்... பெரிய கனபாடி என்று சொல்கிறார். எதிரே உட்கார்ந்து கொண்டு 'ஒரு கனம் சொல்லும், கேட் கிறேன்' என்று பரீட்சை பண்ணக்கூடியவர் அந்த சோழ நாட்டு ஆஸ்தான வித்வான்!

இப்படியெல்லாம் பரீட்சை பண்ணுகிற வர்களுக்கு அடுத்த ஜன்மா கட்டாயம் உண்டு என்று சொல்லி விட்டது சாஸ்திரம்! கல்வி கை வந்த பிற்பாடு ஆசார்யர்களை யும் வேதாந்த விஷயத்தைப் புகட்டினவர் களையும் குறைவாக மதிப்பிடலாகாது. 'இவர் என்ன சொல்லிக் கொடுத்து

அருள்வாக்கு

கானம் பண்ணுவது, நடனம், நாடகம் மூன்றும் சேர்ந்தது காந்தர்வ வேதம். இதனால் நமக்குப் பணம் வராது. வயிறு ரொம்பாது. இவற்றைக் கச்சேரி, ஸதிர் என்று பண்ணுகிறவர்களுக்கு, நடிக்கிறவர்களுக்கு, நடத்துகிறவர்களுக்குத்தான் வயிறு ரொம்புகிறது, பர்ஸ் ரொம்புகிறது. பார்க்கப் போகிற நாம் நம் வயிற்றுக்காக வைத்துக் கொண்டிருப்பதை அங்கே கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வருகிறோம். 'யுடிலிடி' என்ற பாயிண்ட்டில் இப்படி நஷ்டப்பட்டாலும் மனஸுக்கு மகிழ்ச்சி, உல்லாஸம், உத்ஸாஹம்; பொழுதுபோக்கு என்ற லாபம் கிடைப்பதால் இப்படிச் செய்கிறோம். இது மட்டும் 'யுடிலிடி' இல்லையா? கொத்தவரக்காய் வாங்கினால் சாப்பிடலாம். அதே காசுக்குப் பூ வாங்கி flower vase-ல் வைத்தால் சாப்பிட



முடியாதுதான்.
இருந்தாலும் இதைப்
பார்த்தால்
நேத்ரானந்தமாயிருக்கிறது.
மனம் குளிர்கிறது என்று
கொத்தவரக்காய்
வேண்டாமென்று இந்த
'பொக்கே'யை
வாங்குகிறான் என்றால்
இதற்கு 'யுடிலிடி'
இல்லை என்று எப்படிச்
சொல்வது?

அன்றாட அலுவல்களில்
பொறுப்புகளில் அநுஷ்டானங்களில்
அலுத்துக் களைத்துப் போகாமல்
மனஸுக்கு உத்ஸாஹம்
தரவேண்டியதுதான் என்றே பெரியவர்கள்
'காந்தர்வ வேதம்' என்று
உபயோகமில்லாததாகத் தோன்றுகிற
பாட்டையும், கூத்தையும்
வைத்திருக்கிறார்கள்.
மற்றவற்றின்
உபயோகத்தை நாம்
உணர்வதற்கான
உத்ஸாஹத்தைத் தரும்
பெரிய உபயோகம்
இவற்றுக்குத்தான்
இருக்கின்றன.
வாழ்க்கைப்
போராட்டத்தில் நமக்கு
ஏற்படுகிற பாரத்தை
மறந்து கொஞ்ச
நேரமாவது இறக்கி வைப்பது
'காந்தர்வவேதம்' செய்யும் பெரிய
உபகாரம்.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்.**

விட்டார் நமக்கு!' என்று கணக்குப் போடக் கூடாது. அப்படிப் பண்ணுகிறவன் அடுத்த ஜன்மாவிலே ஸ்மசானத்து மரமாகப் பிறப்பான். அந்த மரத்திலே காடை, கௌதாரி, பிணங்கொத்தி முதலான பறவைகளெல்லாம் வந்து உட்கார்ந்து கொண்டு மூக்கைத் தீட்டும். ஸ்மசான புகை வரும்!

ஒரு குருகுலத்திலே இந்த சாஸ்திரத்தைப் பற்றி காலக்ஷேபம் நடந்த போது சிஷ்யன் ஒருத்தன் எழுந்து கேட்டானாம்:

"சுவாமி! இது என்ன தண்டனை? இது ஒரு தண்டனையாய் எனக்குத் தெரியவில்லையே... மனிதனாயிருந்தபோது தப்பான காரியங்கள் பண்ணினான். அவன் மரமான பிற்பாடு அவன் கோயிலில் இருந்தால் என்ன? ஸ்மசானத்திலே இருந்தால் என்ன? அந்த மரத்திலே பிணங்கொத்தி உட்கார்ந்தால் என்ன? கருடன் உட்கார்ந்தால் என்ன...? இது ஒரு தண்டனை ஆகுமா...?" என்று கேட்டான்.

நமக்கு நல்ல புத்தியைக் கொடுக்கிறானே பரமாத்மா... மரமாகிப் போனால் அந்த புத்தி போய்விடும்... ஆனால் அனுபவம் இருக்கும். அவஸ்தை இருக்கும். 'ஐயோ இந்தப் புகையிலேயிருந்து எப்போது விடுபடுவேன்' என்று ஒரே அவஸ்தையாயிருக்கும். அழுகை குரலைக் கேட்டுக் கொண்டு, பட்சி பறவையெல்லாம் மூக்கைத் தீட்ட நிற்க வேண்டியதுதான்.

– இந்த மாதிரி ஒரு பிறவியை அடைய வேண்டுமானால் எல்லாரையும் வாதத்துக்கு இழுக்கலாம்!

ஆக்கி ஆழ்வார் கவலைப்படவில்லை. எல்லோரையும் வாதத்துக்கு இழுக்க நினைத்தார்.

ராஜா பார்த்தான்... வினாச காலே விபரீத புத்தி என்று புரிந்தது. சரி அவர் இஷ்டத்தைத்தான் நிறைவேற்றி வைப்போமே என்று ஆங்காங்கே பல்லக்கு அனுப்பி பெரிய பெரிய வித்வான்களையெல்லாம் வரச் சொல்லி நியமித்தான்.

அப்படி ஆங்காங்கே போன பல்லக்குகளில் ஒன்று, ஒரு குருகுலத்துக்குப் போய்ச் சேர்ந்தது.

"ஆசார்யரை ராஜா அழைத்து வரச் சொல்லியிருக்கிறார்" என்றனர் சேவகர்கள்.

அப்போது அந்த குருகுலத்திலே ஆசார்யர் இல்லை.

யாமுனேயன் என்று சொல்லக்கூடிய, பிற்காலத்தில் ஆளவந்தார் என்று பெயர் பெற்ற, சிறுவன்தான் இருந்தான்.

எதற்காக ராஜா அழைக்கிறார் என்று கேட்டான் சிறுவன்.

"ராஜ சமஸ்தானத்திலே ஆஸ்தான வித்வானோடு பேச வேண்டும்; வாக்கு வாதம் பண்ண வேண்டும்..." என்று சேவகர்கள் சொன்னபோது.

"எங்கள் ஆசார்யர் எதற்கு...? நானே வருகிறேன்" என்றான் சின்னப் பிள்ளை!

(தொடரும்)



மிகவும் எதிர்பார்ப்புடன் தொடங்கப்பட்ட அமிதாப்பச்சன் கார்ப்பரேஷன் நிறுவனம் இன்று உற்சாகத்துடன் இல்லை. இதில் எண்பது சதவிகித பங்குகளை தன்வசம் வைத்திருக்கும் அமிதாபே அதை 51 சதவீதமாகக் குறைத்துக் கொள்ளும் முயற்சியில் இறங்கியிருக்கிறாராம். இதற்காக கென்யாவில் வாழும் இந்தியரான கேட்டன் சோமையா மற்றும் சஹாரா க்ரூப்பின் தலைவரான சுப்ரதா ராய் ஆகியோரை அணுகியிருக்கிறார்.

அமிதாப் நிறுவனத்தின் இன்றைய கடன் நிலவரம் சுமார் நூறு கோடி ரூபாய். கடனை ஓரளவு அடைக்கும் முயற்சியாகத்தான் 'இப்கா லேபப்ஸ்' என்ற பிரபல மருந்து தயாரிக்கும் நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்ட தமது பங்குகளை அவர் விற்று விட்டார். பிரிட்டனில் "டீ.வி. ஏஷியா" என்ற பெயரில் அமிதாப் தொடங்கிய டீ.வி. சானலும் "ஜீ டெலி பிலிம்ஸ்" நிறுவனத்துக்கு விற்கப்பட்டுவிட்டது. இதே பெயரில் அமெரிக்காவில் அமிதாப் தொடங்கிய டீ.வி. சானலும் மூடப்பட்டுவிட்டது.

போதாக்குறைக்கு அமிதாப் பச்சன் கார்ப்பரேஷன் மீது பல வழக்குகள். 'மேஜர் சாப்' என்ற இவர்களது தயாரிப்பில் தேசிய ராணுவ பயிற்சி அமைப்பை இவர்கள் கேலிக் கூத்தாக்கிவிட்டதாகக் கருதி சென்சார் கடும் ஆட்சேபணை தெரிவிக்க, படமே வெளிவராதோ என்ற நிலை தோன்றியது. அலறியடித்துக் கொண்டு படத்தின் பல இடங்களை மாற்றியமைக்க நிறுவனம் ஒப்புக் கொள்ள, நிறைய வெட்டுக்களுடன் படம் ரிலீஸாகியிருக்கிறது.

பாவம் அமிதாப் நிறுவனம்!

இதையெல்லாம் சமாளிக்க "தமது ஒரு படம் ரிலீஸான பிறகுதான் அடுத்தது" என்ற கொள்கையைத் தளர்த்திவிட்டு, ஒரு சமயத்தில் தாமே ஐந்து படங்களைத் தயாரித்துக் கொண்டு அவற்றில் நடிக்கவும் செய்கிறார் அமிதாப். இவற்றில் ஒன்று சூப்பர் ஹிட்டானால் கூட அமிதாப் நிறுவனத்தின் பங்கு விலை ஜிவ்வென்று ஏறிவிடும்; பொருளாதார நிலைமை சீரடைந்துவிடும் என்பது அந்த நிறுவனத்தின் கருத்து மற்றும் நம்பிக்கை.

— குல்லூ

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/ 98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka